DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1427 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 11, 2023

# மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த சட்டத்திற்கு பாட்டனார் ஜி.ஜி பொன்னம்பலம் ஆதரவு வழங்கியமைக்காக மனிப்பு கேட்பீர்களா என்ற கேள்விக்கான தெளிவுபடுத்தலை பதிவு செய்ய விரும்புகிறேன்

### – கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம் பி தெரிவிப்பு



மலையக மக்கள் இலங்கைக்கு வந்த 200 வது ஆண்டு நினைவை குறிக்கும் நடைபவனி ஒன்று தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரை நடைபெறுகிறது.

அதற்கான ஆதரவு பேரணி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடந்த போது அதில் நானும் எமது அமைப்பினரும் அதில் பங்குபற்றியிருந்தோம். அதில் கலந்துகொண்டிருந்த ஒரு பொதுமகன் என்னிடம் "மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த சட்டத்திற்கு உங்கள் பாட்டனார் தலைமையில் உங்கள் கட்சி ஆதரவு வழங்கியமைக்காக இப்போதாவது மனிப்பு கேட்பீர்களா என கேட்டிருந்தார். எனக்கு மிக மனவேதனையை தந்த அந்த கேள்விக்கான தெளிவுபடுத்தலை நான் இங்கு செய்ய விரும்புகிறேன் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

(உள்ளே விபரமான செய்தி 34ம் பக்கத்தில்)

# "வென்மேரி" அறக்கட்டளை நிறுவனத்தின் 2வது ஆண்டு "ஆளுமை விருதுகள்"வழங்கும் நிகழ்வு பிரான்ஸில் சிறப்பாக நடைபெற்றது

### கனடா பேராசிரியர் பாலசுந்தரம் மற்றும் 'உதயன்' லோகேந்திரலிங்கம் ஆகியோர்க்கும் கௌரவம்





தாயகத்தைத் தளமாகக் கொண்ட "வென்மேரி" அறக்கட்டளை நிறுவனம் நடத்திய 2வது ஆண்டு "ஆளுமை விருதுகள்" வழங்கும் நிகழ்வு கடந்த 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் மாநகரில் அமைந்துள்ள அழகிய மண்டபம் ஒன்றில் இடம்பெற்றது.

"வென்மேரி" அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனரும் கனடா வாழ் கவிஞருமான அனுரா வெனிஸ்லஸ் தனது நண்பர்கள் மற்றும் சகோதர சகோதரிகள் ஆகியோரோடு இணைந்து இந்த விருதுகள் வழங்கும் விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தார்.

(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG BILLYARD INSURANCE GROUP
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
5.0
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com


EASY FURNITURE
Summer
BLOWOUT SALE
LOWEST PRICE IN TOWN
READY TO DELIVER
STARTING FROM $59
Queen Diamond Firm Mattress $499 $299
Rest-O-Pedic Queen $399 $249
S/S BUNK Bed (Grey) $799 $399
Dreamopedic Single Mattress $249 $149
Velvet Rose Queen Mattress $399 $299
Back Support Queen Mattress $799 $549
Spine Comfort Queen Mattress $699 $499
5" Foam $79 $59
ANG L Sofa Grey& Brown $650 $399
4 Door Wardrobe $899 $599
2 Door Wardrobe With Glass Mirror $449 $349
2 Door Wardrobe $399 $249
Sami Madam
Price Starting from $149
We Can Make Special Order
CALL US TODAY
416-293-9204
3500 McNicoll Ave, Unit 5
Scarborough, ON M1V 5C7


EASY FURNITURE
WHOLESALE PRICE
REM L Sofa $699 $499
SAI L Sectional (with ottoman) $1299 $899
JANE Sectional (Bk-WH-RD) $1699 $1299
UG RED Sectional $1199 $899
MOREN Sectional Sofa $1249 $899
GRASSY 3 pcs Sofa $1199 $899
Easy Air Leather Corner Sofa $2499 $1999
Sky Power 3 pcs Recliner Sofa $2999 $2499
EF QUEEN Bedroom Only $999 $799
Single Bed $199 $149
5 pcs Dining Table $799 $499
6 pcs Bedroom $899 $599
5pcs Dining Table $799 $499
7 pcs Dining Table $799 $549
Coffee Table $149 $99
Bar Stool $99 $59
STARTING FROM $59
ORDER TODAY 416-293-9204
3500 McNicoll Ave, Unit 5, Scarborough, ON M1V 5C7

# உதயன் கதிரோட்டம்

## தொடர்ச்சியாக தவறிழைக்கும் அரசாங்கங்களும் ஜனாதிபதிகளும் பதவிகளை மட்டும் அணைத்த வண்ணம்

இலங்கையில் மாறி மாறி பதவியில் அமரும் ஜனாதிபதிகளும் பிரதமர்களும் ஆட்சியில் ஏறும் பல அரசாங்கங்களும் இது வரை எதைச் சாதித்துள்ளன என்ற கேள்விகள் எழுந்தவண்ணம் உள்ளன.

பாராளுமன்றப் பதவிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு உச்ச சலுகைகளை வழங்காவிட்டாலும்.. அவர்களுக்கு அடிப்படையான அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பெற்றுள்ளன.

இதேபோன்று ஜனாதிபதி போன்ற பதவியில் ஏறி குந்திக் கொண்டிருப்பவர்களுக்கும் பெறக்கூடிய அனைத்து வசதிகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்ளும் வகையில் அரசியலமைப்பு வகை செய்துள்ளது. இவ்வாறான எத்தனை ஆண்டுகளை பாராளுமன்றத்திலும் அமைச்சுகளின் அலங்காரமான அலுவலகங்களிலும் கழித்து வரும் இலங்கை அரசியல்வாதிகள் மக்களுக்கு எதைப் பெற்றுக் கொடுத்தார்கள் என்ற கேள்விகளை தங்கள் கைகளில் வைத்துக் கொண்டு. 'விடை கிடைக்காதா? என்றும் ஏங்கிய வண்ணம் உள்ளனர்.

நீண்ட கால அரசியல் ஏமாற்று 'வித்தைகள்' தமிழ் மக்களைப் பொறுத்தளவில் பாரிய பின்னடைவை பெறும் அளவிற்கு அவர்களைப் பாதித்துள்ளன. அதே போன்று 'அரகலய' போராட்டங்களின் போது கடுமையாகப் போராடிய மக்கள் சார்ந்தவர்களை தலைமை தாங்கி நடத்தக் கூடியவர்கள் இல்லாமல் போனதால் அந்தப் போராட்டமும் நசுக்கப்பட்டது.

தற்போது வடக்கு கிழக்கு ஆகிய பகுதிகளில் மக்களின் தேவைகள் அதிகமாக உள்ளதும் ஆனால் அவைகளில் எதுவுமே தீர்க்கப்பட வேண்டும் என்ற இதயத்தை திறந்து பணியாற்றத் தொடங்கவல்ல சூழ் நிலை அங்கு காணப்படவில்லை. தற்போது மட்டுமல்ல மிகவும் நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள தமிழர்களின் தேசிய இனப்பிரச்சனையும் மிகுந்த பின்னடைவான நிலையோடு தொடர்ந்த வண்ணம் உள்ளன.

மேலும் அங்கு அரசியல்வாதிகளும் தலைவர்களும் கட்சிகளின் தலைவர்களும் மாறி மாறி அறிக்கைகளை வெளியிடுவதும் பாராளுமன்றத்தில் 'கர்ச்சிப்பதும்' இனவாத்தைக் கக்குவதும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. ஆனால் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக அறிக்கைகளில் எழுதப்பட்டாலும் அவை தொடர்பான நடவடிக்கைகளும் மந்தமாகவே நகர்கின்றன.

இவ்வாறான வேளையில் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தங்கள் பார்வை பட்டவர்களாக பயணங்கள் செய்து வருகின்றனர். ஆனால் மக்கள் குறைகளை சொல்வதற்கு கூட அங்கு வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரியவில்லை.

இவ்வாறான நிலையில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் சந்தித்த மனோ கணேசன் எம். பி அவர்களும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து அங்கு சில கருத்தரங்குகளில் பங்கெடுத்துள்ளனர்.

இலங்கையில் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய பிரதமர் தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வரும் நிலையில் எமது தலைவர்கள் போராடி அதனை அமல்படுத்த முன்வர வேண்டும் என மலைய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அண்மையில் தெரிவித்தார். ஆனால் அவ்வாறு போராடக் கூடிய அரசியல் தலைவர்கள் எவரும் இயங்குவதாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. எனினும் நேற்றைய கடந்த புதன்கிழமையன்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் வ இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்ட 13வது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய பிரதமர் மோடி தொடர்ந்தும் பழைய பாணியில் அழுத்தங்களை பிரயோகித்து வருகிறார் என்றும் அதற்கான பதில் அழுத்தங்களை எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய்விட்டு பேசிக் கொள்வதாகவே தெரிகின்றது

இலங்கை ஜனாதிபதி இந்தியா சென்ற போது இந்திய பிரதமர் பதின்மூன்றை நடைமுறைப்படுத்துங்கள், மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்துங்கள் என்று அவர் இலங்கை ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் அவர் அமைதியாக இருக்கிறார்.

இதே வேளை 13வது திருத்தச் சட்டம் பற்றிய சரியான பார்வை இல்லாமல் துறை சார்ந்த அறிவு அற்ற நிலையில் அரசியல் காய்களை நகர்த்தலாம் என்று சிந்திக்காமல் காலங்களை வீணாக்குவது என்பதும் கவனிக்கப்பட வேண்யதாகும் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் பயனாக கிடைக்கப்பெற்ற 13 வது திருத்தம் வடக்கு கிழக்கு ஒன்றாக இணைந்திருந்த போது வழங்கப்பட்டது. ஆனால் தற்போது வடக்கு கிழக்கு ஒன்றாக இல்லை. என்ற காரணமும் பெரும்பான்மை அரசியல்வாதிகளிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது

அது மட்டுமல்லாது பதின்மூன்றில் இருந்த அதிகாரங்கள் பல வர்த்தமானி மூலம் மத்திக்கு எடுக்கப்பட்டமை தவறான விடயம். அதை இந்தியாவும் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்தியா புதிதாக அழுத்தங்களை வழங்கவில்லை தொடர்ச்சியாகவே பதின் மூன்றை நடைமுறைப்படுத்துமாறு கூறி வருகின்ற நிலையில் இந்தியா எமக்கு துணை வர முடியுமே அல்லாமல் நாம் தான் போராடி உரிமைகளை பெற வேண்டும்.

இலங்கையில் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய பிரதமர் தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வரும் நிலையில் எமது தலைவர்கள் போராடி அதனை அமல்படுத்த முன்வர வேண்டும் என மலைய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஆனால் எதையும் நல்லதாக நடப்பதற்கான அறிகுறிகள் எந்தப் பக்கத்திலும் இல்லை என்பது மட்டும் 'நன்றாகத் தெரிகின்றது.

Canada

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

VOLUNTEERS NEEDED FOR A SERVICE ORGANIZATION

Tel: 647-762-9512
www.cyecstoronto.ca

C.Y.E.C.S
Center for Youth Empowerment & Community Services

Center for Youth Empowerment & Community Services in Scarborough, that is currently seeking Volunteers for service providing. We are giving the opportunity to individuals interested in the following areas:

- Office Administration
- Fundraising
- Conducting Seminars and Events
- Telemarketing
- Event Volunteering (i.e., backstage, door opener, ticket check)

We would like to give volunteering opportunities for those interested in gaining experience in the work field or want to work in a calm and supportive environment. We are more than happy to provide volunteer hours for high school students.

Applicants who are interested may contact us at infocyecs@gmail.com

For All your Renovation Needs!

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

HELP WANTED

Help wanted for restaurant in Oshawa near Harmony and Taunton.

- Dishwasher
- Kitchen help
- Food delivery driver

Contact: 416-624-2224

மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

ரொறன்ரோவிற்கு மிக அருகில் மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் மற்றும் பிஞ்சு கோழிகள் விற்பனைக்குண்டு. இவையனைத்தும் திறந்த வெளியில் வளர்க்கப் பட்டவை. இயற்கையான வளர்ப்பு கொண்டவை.
தொடர்புகளுக்கு (647)920-5180

தெல்லிப்பளையில் காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் இரண்டு வெவ்வேறு காணிகள் உடனடியாக விற்பனைக்கு உள்ளன.
ஒன்று 4 பரப்புவீடு கட்டக்கூடிய சதுரக் காணி.
மற்றையது மூன்றரைப் பரப்புக் காணி.
பழைய வீடு இடிந்த நிலையில் உள்ளது.
இரண்டு காணிகளும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு அருகாமையில் உள்ளன.
மின்னினைப்பு போன்றவை இலகுவில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : இ.பி. முத்துத்தம்பி - கனடா- 905 554 3435

# அண்ணாமலை தேர்தலுக்காக தமிழக மீனவர்களை உசுப்பேத்தக் கூடாது

இலங்கை செய்திகள் Sri Lanka News

## யாழ்ப்பாண மீனவ சமாசம் வேண்டுகோள்

பு. கஜிந்தன்

வடக்கு மீனவர்கள் அத்துமீறிய இந்தியா ரோலர் படகுகளினால் தமது வாழ்வாதாரங்களை இழந்து வரும் நிலையில் தேர்தல் அரசியலுக்காக பாஜக தமிழ்நாட்டு தலைவர் அண்ணாமலை தமிழக மீனவர்களை உசுப்பேத்தக் கூடாது என யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சமாசம் வேண்டுகோள் விடுத்தது.

வெள்ளிக்கிழமை (04-08-2023) யாழ்ப்பாணத்தில் உள்ள ஏழு மாவட்ட கடை தொழிலாளர் கூட்டுறவு சமாச் கட்டடத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் வருடம் இந்தியாவில் தேர்தல் இடம்பெற வாய்ப்புகள் உள்ள நிலையில் தேர்தலை இலக்காக வைத்து தமிழக மீனவ மக்களின் வாக்குகளை வேட்டையாடுவதற்கு அண்ணாமலை செயற்பட்டு வருகிறார்.

அதன் ஒரு அம்சமாக தமிழ் நாட்டில் இடம்பெற்ற பாதயாத்திரை நிகழ்வில் கச்சதீவை இந்தியா மீனவர்களுக்கு மீட்டு தருவதற்கு பிரதமர் மோடியிடம் பேசுவதாக தெரிவித்துள்ளார்.

அண்ணாமலை யாழ்ப்பாணம் வந்தபோது வடக்கு மக்கள் தொப்புள் கொடி உறவு அவர்களுக்கு பாதிக்காத வகையில் இந்திய மீனவர்களை கடத்தொழிலில் ஈடுபடுவது தொடர்பில் தாம் பேசுவதாக தெரிவித்துச் சென்றிருந்தார்.

ஆனால் தேர்தலை இலக்காக வைத்து தமிழக மீனவ மக்களின் வாக்குகளை வருவதற்காக கச்சதீவை மீட்டு தரப் போகிறேன் என கூறுகிறார்.

அண்ணாமலையிடம் நாம் ஒன்றைக் கேட்க விரும்புகிறோம். இந்தியா ஆத்துமீறிய ரோலர் படகுகளினால் எமது மக்கள் தொடர்ந்தும் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வரும் நிலையில் வாழ்வா சாவா என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவற்றையெல்லாம் அறிந்தும் இவ்வாறு கருத்து தெரிவித்தமையை நாம் கண்டிக்கிறோம்.

மேலும் இந்தியா ரோலர் படகுகளின் ஆதிக்கம் மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில் கடற் தொழில் அமைச்சர் என்ன செய்கிறார் என்பது தொடர்பில் எமக்குக் கேள்விகள் எழுகின்றது.

மீனவ மக்களை பாதுகாப்பதற்கான அமைச்சை பெற்றுள்ள கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீனவர்களின் நிலையை கருத்தில் கொண்டு முடிவுகளை எடுக்க வேண்டும்.

ஆகவே இந்திய அத்துமீறிய ரோலர் படகுகளை தடை செய்வதற்கு யாழ் இந்தியத் துணைத் தூதரகமும் அமைச்சரும் ஜனாதிபதியும் விரைவான நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

குறித்த ஊடக சந்திப்பில் வழி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சமாசத்தின் தலைவர் பாக்கியநாதன் மேகன் மற்றும் வேலை தென்மேற்கு சமாசத்தின் தலைவர் அந்தோணிப் பிள்ளை மரியதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்தியா இலங்கை ஒப்பந்தமே தமிழரை தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வைத்தது

## - வேந்தர் பத்மநாதன் தெரிவிப்பு




இந்திய இலங்கை ஒப்பந்தமே தமிழரை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ள வைத்தோடு வடக்கு கிழக்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வதிவிடமாக ஏற்றுக்கொள்ள வைத்தது என யாழ் பல்கலைக்கழக வேந்தரும் முன்னாள் வரலாற்று பேராசிரியருமான எஸ் பத்மநாதன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1972 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரச கரும மொழியாக அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் இலங்கை இந்திய உடன்படிக்கை தமிழ் மற்றும் ஆங்கிலம் சிங்களத்தோடு ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை பலருக்குத் தெரியாது.

இந்தியா இலங்கை உடன்படிக்கை வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் வரலாற்று பதிவிட இடம் என்பதை பதிவு செய்த நிலையில் சாணக்கியமாகவும் இராஜதந்திர முறையில் தமிழர் ஒரு தேசிய இனம் என்பதை ஒப்புக்கொள்ள வைத்தது.

இலங்கை இந்தியா ஒப்பந்தத்தை பற்றி பேசுபவர்களை சிலர் துரோகிகள் என்கின்றார்கள். இரு அரசுகளால் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையை துரோகமானது என எவரும் கூற முடியாது.

எவ்வாறு கூறுபவர்களுக்கு வரலாறு தெரியாமல் இருந்திருக்கலாம்.

இலங்கை இன பிரச்சனை ஜே.ஆர் காலத்தில் மோசமான நிலையை அடைந்து விட்ட நிலையில் உரிய நேரத்தில் கேட்பவற்றை கேளாமையும் கிடைக்கும் வாய்ப்புகளை தவறவிட்டமையம் பிரச்சனை புரையோடுவதற்கு காரணம்.

தமிழர்கள் ஒரு தேசிய இனம் அவர்களுக்கான உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் எமது தலைமைகள் உணர்வுடன் சிந்திக்காமல் கொழும்பை மையமாகக் கொண்டு வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளை அணுகியமையும் ஒரு காரணம்.

ஆங்கிலேயர் ஆட்சியில் 1944 ஆம் ஆண்டு சிங்களமும் தமிழும் நாட்டின் ஆட்சி மொழிகள் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் 1947 ஆம் ஆண்டு நிலைமை மாறி விட்டது.

1947 ஆம் ஆண்டு பிரித்தானியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை செய்ததன் மூலம் மலையக மக்களின் குடியுரிமை வாக்குரிமையை பறிப்பதற்கான சட்டத்தை இயற்றிய நிலையில் சுமார் ஒன்பது இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்.

1956 ஆம் ஆண்டு அரசியலமைப்பை மாற்றி சிங்களம் மற்றும் அரசகரமை மொழியாக சட்டம் இயற்றப்பட்ட நிலையில் தமிழ் மொழிக்காக மக்கள் சாத்வீகப் போராட்டங்கள் பல செய்ததன் பயனாக 1958 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க தமிழ் மொழியையும் அரச கரும மொழியாக பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றினார்.

அதன் பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பயனாக தமிழ் ஆங்கிலம் சிங்களம் சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வரலாறுகளை தெரியாதவர்கள் வரலாறுகளை தெரிந்து கொள்வதுடன் ஏற்கனவே விட்ட வரலாற்று தவறுகளை இனியும் விடாமல் பயணிக்க வேண்டும்.

ஆகவே 25 நாடுகள் சேர்ந்து எமது போராட்டத்துக்கு முடிவு கட்டிய நிலையில் போராளிகளையும் மக்களையும் இழந்த நாம் இனியும் பிழையான வழிகளை பின்பற்றாமல் மக்களுக்காக தலைமைகள் பயணிக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அராலி முருகமூர்த்தியில் திருட்டு – செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளருக்கு பொலிஸாரால் அச்சுறுத்தல்!





வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையில் தண்ணீர் இறைக்கும் மோட்டார், இரண்டு பித்தளை குத்துவிளக்குகள், ஒலிபெருக்கியின் இரண்டு யூனிற்றுகள், ஒரு கமெரா, ஒரு ஒலிபெருக்கி சாதனம் (amplifier) மற்றும் ஒரு தொகை பணம் என்பன களவாடப்பட்டிருந்தன.

திருட்டில் ஈடுபட்டவர்கள், ஒரு தொகை சில்லறை காசு மற்றும் ஒலிபெருக்கி சாதனத்தின் பாகங்களை வீசிவிட்டு சென்றனர்.

இது குறித்து செய்தி சேகரிப்பதற்காக ஊடகவியலாளர் ஒருவர் குறித்த பாடசாலைக்கு சென்று, தடயங்களை புகைப்படம் எடுக்க முயன்றார்.

இதன்போது அங்கு கடமையில் இருந்த உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி அமைதியாக இருக்க, சிவில் உடையில் தரித்திருந்த செல்வக்குமார் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஊடகவியலாளரை புகைப்படம் எடுக்க வேண்டாம் என தடுத்து வெளியேற்றினர்.

இந்நிலையில் குறித்த ஊடகவியலாளர் சம்பவம் நிகழ்ந்த அறைக்கு வெளியே வந்து நின்ற வேளை, உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய பொலிஸாரை அழைத்து வந்த செல்வக்குமார் என்ற பொலிஸார் ஊடகவியலாளரை பாடசாலை வளாகத்தில் இருந்து வெளியேறுமாறு அச்சுறுத்தினார்.

இதன்போது அங்கிருந்த இன்னொரு பொலிஸார், செய்தி சேகரிப்பதற்கான பாஸினை காண்பிக்குமாறு கூறினார். அதற்கு குறித்த ஊடகவியலாளர், அப்படி எந்த ஒரு பாஸ்"ம் நடைமுறையில் இல்லை. ஊடக அடையாள அட்டை இருக்கிறது. அதனை வேண்டுமானால் காட்டலாம். என கூறியவேளை, குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அனுமதிப்பத்திரத்தை கேட்டு மிரட்டினார்.

இந்நிலையில் குறித்த ஊடகவியலாளர் உடனே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் அவர்களை தொடர்புகொண்டு சம்பவம் தொடர்பில் தெரியப்படுத்தினார்.

இந்நிலையில் இது குறித்து விரைந்து செயற்பட்ட திரு. த. கனகராஜ் அவர்கள், வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு சம்பவம் குறித்து தொலைபேசி ஊடாக தெரியப்படுத்தினார். இந்நிலையில் அங்கு கடமையில் இருந்த பொலிஸாருக்கு அழைப்பு மேற்கொண்ட வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவர்கள், ஊடகவியலாளரின் பணிக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் எனவும் அவரது பணிகளை செய்ய அனுமதிக்குமாறு கூறினார்.

குறித்த ஊடகவியலாளர், செல்வக்குமார் என்ற பொலிஸ் உத்தியோகத்தரின் முறையற்ற செயற்பாடுகளுக்கு எதிராக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையில் அது குறித்து விசாரணைகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இரும்பு திருடிய பலர் கைது!

பு. கஜிந்தன்

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இரும்பு திருடிய குற்றச்சாட்டின் கீழ் 22பேர் காங்கேசன்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது திருடப்பட்ட இரும்புகளும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த தொழிற்சாலையில் இரும்பு திருடுவதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்து கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பாடசாலை மாணவர் துஷ்பிரயோகம் – சந்தேக நபரான ஆசிரியர் பொலிஸில் சரண்

(07-08-2023)

அரச பாடசாலை ஒன்றில் மாணவன் து்‘பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியர் நிந்தவூர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

தலைமறைவாகி இருந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியரை பொலிஸார் தேடி வந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை (6) மாலை தனது சட்டத்தரணி ஊடாக பொலிஸில் சரணடைந்துள்ளதாகவும் சந்தேக நபரை நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம். நஜீம் உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் 2 ஆம் திகதி பாடசாலை ஒன்றில் பாலியல் து்‘பிரயோகத்திற்கு உள்ளாகி மாணவன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபரான ஆசிரியர் தலைமைறைவாகி இருந்தார்.

குறித்த சந்தேக நபரான ஆசிரியர் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் உடற்கல்வி ஆசிரியராக செயற்பட்டு வந்துள்ளதுடன் கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி விளையாட்டு அறையில் வைத்து பாலியல் ரீதியாக மாணவனை துஸ்பிரியோக முயற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அதிபரிடம் முறையிடப்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் இடம்பெற்று மறுநாள் பாதிக்கப்பட்ட குறித்த மாணவன் அதிபரிடம் முறையிட்டுள்ளதுடன் இரு வாரங்கள் கழிந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மூடி மறைப்பதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஊடகங்களுக்கு பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் தெரிவித்திருந்தார்.



இதனை அடுத்து இச் சம்பவம் குறித்து நிந்தவூர் பொலிஸார் குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள தரம் 9 வகுப்பில் கல்வி கற்கின்ற குறித்த மாணவனிடம் வாக்குமூலம் ஒன்றை இரு தடவை பெற்று சென்றிருந்ததுடன் மாணவனை துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சி செய்ததாக கூறப்படும் சந்தேக நபரான ஆசிரியர் தொடர்ந்தும் தலைமறைவாகி இருந்தார்.

இந்நிலையில் பாலியல் துஷ்பிரயோக முயற்சிக்கு உட்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் மாணவன் கடந்த ஆகஸ்ட் புதன்கிழமை (2) மாலை கல்முனை அஷ்ரப் ஞாபகம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு வாக்குமூலங்களை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்வியில் அரசியல் தலையீட்டை ஆளுநர் நிறுத்தாவிட்டால் தொழிற் சங்கப் போராட்டம் – யாழ்ப்பாணத்தில் யோசப் ஸ்டாலின் எச்சரிக்கை

**பு. கஜிந்தன்**

வட மாகாண ஆளுநர் வடக்கு கல்வியை அரசியல் மயப்படுத்தும் செயற்பாட்டை கைவிடாவிட்டால் தொழிற்சங்க போராட்டத்துக்கு தள்ளப்படுவோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்தார்.

ஞாயிற்றுக்கிழமை (06) யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்களை சந்தித்த பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு கல்வி ஆசிரிய இடமாற்றங்களில் இடமாற்றச் சபையின் அறிவுறுத்தல்களை மீறி ஆளுநர் இடமாற்றங்களை வழங்குவதாக அறிகிறோம்.

வடக்கு கல்வியின் நிர்வாக செயல்பாடுகள் சுதந்திரமாகவும் வினைத் திறனாகவும் நடப்பதற்கு ஆளுநர் இடையூறு ஏற்படுத்தக் கூடாது.

அது மட்டுமல்லாது வடக்கில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு ஊழல்வாதிகள் பாதுகாக்கப்படுகின்றனர்.



மேலும் ஆயிரம் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்கும் திட்டத்திற்கு சுமார் 2285 மில்லியன் ஒதுக்கப்பட்ட நிலையில் வடக்கிலும் தேசிய பாடசாலைகள் என சுவர்களில் எழுதி திறப்பு விழா செய்தார்கள்.

தேசிய பாடசாலைகளாக 22 பாடசாலைகள் மட்டுமே உள்வாங்கப்பட்ட நிலையில் எஞ்சிய பணத்துக்கு என்ன நடந்தது.

ஆகவே வடக்கு கல்வியை அரசியல் மயமாக்குவதற்கு வடமாகாண ஆளுநருக்கு இடமளிக்க மாட்டோம் என்பதுடன், அவர் தனது செயற்பாடுகளை நிறுத்தாவிட்டால் தொழிற்சங்க போராட்டத்திற்கு தள்ளப்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளார்கள் – பணிப்பாளர் கவலை




முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்கள் இல்லாமை ஒரு குறையாக உள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வியாழக்கிழமை (03) கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் இல்லாமை ஒரு குறையாக உள்ளது. குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கையில் உள்ள நிலையில் வைத்திய நிபுணர்கள் அதிகம் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார்கள்.

இறுதியாக நடைபெற்ற கலந்துரையாடலில் இரண்டு வைத்தியசாலைகளுக்கும் இரண்டு வைத்தியர்களையாவது நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்ட போது பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சுகாதார அமைச்சரும் இருந்தார். அதனை நாங்கள் தற்போது தொடர்ந்து கேட்கின்றோம். எதிர்வரும் காலத்தில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

விஷேட ஆளணி எங்களுக்கு தேவையாக உள்ளது. நிதி அமைச்சு புதிய ஆளணியை நியமிக்காத ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது.

உள்ளக கட்டமைப்பிலும் விரைவான அபிவிருத்தி தேவையாகவுள்ளது. அதற்கு திட்டம் ஏதாவது இருந்தால் மேற்கொள்ள வேண்டும்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் காணி பிரச்சினை தாமதமானதால் பாரிய கட்டிடங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

அதேபோல் மன்னாரிலும் சீரி (CT) ஸ்கான் வந்து திரும்பி போனதால் பிரச்சினை இருந்தது. அங்கும் நிரந்தர வைத்திய பணிப்பாளர் இல்லாமை ஒரு பிரச்சினையாக உள்ளது.

உள்ளக கட்டமைப்பை பேணும் இரண்டு வைத்தியசாலையிலும் குறைபாடாக இருக்கிறது. இது தொடர்பாக கூட்டத்தில் தீர்மானமாக எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்களுடன் சந்திப்பொன்றினை மேற்கொண்டு இதனை நிவர்த்தி செய்வோம் என கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

# வட மாகாண ஆளுநர் முறையற்ற செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் – இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் வேண்டுகோள்

ලංකා ගුරු සංගමය
இலங்கை ஆசிரியர் சங்கம்
CEYLON TEACHERS' UNION

**பு. கஜிந்தன்**

அரசியல்வாதிகளின் கடிதங்களுக்கெல்லாம் வடமாகாண ஆளுநர் இடமாற்றங்களை வழங்க உத்தரவிடுவதும், இடமாற்றச்சபை தீர்மானங்களை புறந்தள்ளி, கல்வி தொடர்பான சுற்றுநிருபங்களையும் மீறிய செயலாகும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீபன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில், வட மாகாண ஆளுநர் அரசியல்வாதிகளை திருப்திப்படுத்தவும், தனது தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காகவும் வடமாகாண ஆளுநர் முறையற்றவகையில் செயற்படுவது வடமாகாண கல்வியை சீரழிக்க துணைபோகும் செயற்பாடாகும்.

வடமாகாண ஆளுநரின் இத்தகைய அருவருப்பான செயற்பாட்டை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த முறையற்ற செயற்பாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் - வடமாகாண கல்வியமைச்சும், வடமாகாண கல்வித் திணைக்களமும் வடமாகாண ஆளுநருக்கு அவரது தவறுகளை சுட்டிக்காட்டி வடமாகாண கல்வியில் அரசியல் தலையீட்டை நிறுத்த முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சங்கமித்தை வரவுமில்லை அரச மரம் நடவுமில்லை – வெடித்தது சங்கானையில் போராட்டம்!




சுழிபுரம் - பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரம் சங்கமித்தையால் கொண்டு வந்து நாட்டப்பட்டது என சித்தரித்து வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதனால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் சங்கானை பேருந்து நிலையத்திற்கு முன்னால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டக்காரர்கள் பாததைகளை ஏந்தியவாறு "சங்கமித்தை வரவுமில்லை அரச மரம் நடவுமில்லை, பொய்யான வர்த்தமானியை இரத்துச் செய், இந்த மண் எங்களின் சொந்த மண், வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், பறாளாய் முருகன் தமிழர் சொத்து, தாயகத்தில் ஆக்கிரமிப்பு சர்வகட்சி கூட்டத்தில் நல்லகணக்க நாடகம், இராணுவமே வெளியேறு" என கோ'மிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.




# யாழ்ப்பாணம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தை பௌத்த தொல்லியல் சின்னமாக சித்தரித்தமைக்கு எதிராக போராட்டம்!

**பு. கஜிந்தன்**

பறாளாய் முருகன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அரச மரமானது சங்கமித்தையால் நாட்டப்பட்டதாக கூறி அது தொல்லியல் சின்னம் என வர்த்தமானியில்பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இன்றையதினம் போராட்டம் ஒன்றினை நடாத்துவதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்நிலையில் சுழிபுரம் சந்தியில் போராட்டமானது ஆரம்பமானது. பின்னர் போராட்டம் பேரணியாக பறாளாய் முருகன் ஆலயம் வரை சென்று நிறைவுற்றது.

போராட்டத்தின் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு, "இந்த மண் எங்களின் சொந்த மண், மண் துறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா, இனப்படுகொலை இராணுவமே வெளியேறு, தொல்லியல் திணைகாகளமே வெளியேறு, பறாளாய் எங்கள் சொத்து, குருந்தூர் மலை எங்கள் சொத்து, கீரிமலை எங்கள் சொத்து, மயிலத்த மடு எங்கள் சொத்து, வெடுக்குநாறி மலை எங்கள் சொத்து" என கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்த போராட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வேலன் சுவாமிகள், ஊர் மக்கள், சமூகமட்ட அமைப்புக்கள், ஆலய உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# தவத்திரு வேலன் சுவாமிகளை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பு!

**பு. கஜிந்தன்**

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகளை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (07) காலை 9 மணிக்கு ஆஜராகுமாறு தெரிவித்து கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் ஒப்பமிட்டு, குறித்த அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

சட்டமுறையற்ற போராட்டம் நடைபெற்றமை சம்பந்தமாக என தெரிவித்தே குறித்த அழைப்பாணை அனுப்பபட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசிய கட்சியின் பொது செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கத்திற்கும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்
World News

# "வென்மேரி" அறக்கட்டளை நிறுவனத்தின் 2வது ஆண்டு "ஆளுமை விருதுகள்" வழங்கும் நிகழ்வு பிரான்ஸில் சிறப்பாக நடைபெற்றது



தாயகத்தைத் தளமாகக் கொண்ட "வென்மேரி" அறக்கட்டளை நிறுவனம் நடத்திய 2வது ஆண்டு "ஆளுமை விருதுகள்" வழங்கும் நிகழ்வு கடந்த 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் மாநகரில் அமைந்துள்ள அழகிய மண்டபம் ஒன்றில் இடம்பெற்றது.







"வென்மேரி" அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனரும் கனடா வாழ் கவிஞருமான அனுரா வெனிஸ்லஸ் தனது நண்பர்கள் மற்றும் சகோதர சகோதரிகள் ஆகியோரோடு இணைந்து இந்த விருதுகள் வழங்கும் விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தார்.

அறக்கட்டளை அமைப்பின் தலைவரும் முன்னாள் யாழ்ப்பாண பல்கலைக் கழகப் பேராசிரியருமான கலாநிதி சிவலிங்கராஜா அவர்கள் தாயகத்திலிருந்து தனது தலைமை உரையையும் வாழ்த்துச் செய்தியையும் இணைய வழியாக சமர்ப்பித்தார்.

உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்து வரும் ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆளுமைகள் இருபது பேர் இந்த விழாவில் கௌரவிக்கப்பெற்றனர்.



ஒவ்வொரு துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்றவர்கள் என வெற்றியாளர்கள் அனைவரும் அங்கு கலந்து கொண்டனர். கனடாவிலிருந்து பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்கள் இலக்கியத்துறை சார்ந்த பணிகளுக்கும் "உதயன்" பத்திரிகையின் ஆசிரியரும் கவிஞரும் எழுத்தாளருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் ஊடகத்துறைக்காகவும் விருதுகள் தேர்வுக் குழுவினரால் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இதே போன்று பரதநாட்டியம். நாடகம். படைப்பிலக்கியம், விளையாட்டு, நாட்டுக் கூத்து, வைத்தியச் சேவை. சமூகசேவை என பல துறைகள் சார்ந்த ஆளுமைகள் அங்கு மேடையில் சிறப்பாக கௌரவிக்கப்படடனர்.

இங்கே காணப்படும் படங்களில் விருதுகள் பெற்றவர்கள் பலர் தங்கள் விருதுகளை பிரான்ஸ் தேசத்தின் அரசியல் தலைவர்கள் மற்றும் சமூகத்தலைவர்கள் என பலரால் கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.








# Thana Insurance Inc

THANA INSURANCE Inc.

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# மன்னார் மாவட்டத்தில் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பம்

- மன்னார் நிருபர் (07-08-2023)

மன்னார் மாவட்டத்தில் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட அலுவலகத்தினால் திங்கட்கிழமை (7) காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வானது திங்கட்கிழமை (7) காலை 8.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட பொறுப்பதிகாரி திருமதி. ஜே.எம்.ஏ. யக்கோ பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்டான்லி டிமெல் கலந்து கொண்டார்.





மேலும் மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் பிரதேச செயலாளர்கள், வைத்தியர் ஒஸ்மன் டெனி, அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.



இதன் போது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட அலுவலகத்தினால் இலத்திரனியல் கழிவுகளை முறையாக சேகரிப்பதன் மூலம் சுற்றாடலை பாதுகாத்தலும், முகாமைத்துவம் செய்தலும் எனும் கருப்பொருளில் மன்னார் மாவட்டத்தில் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது முதல் கட்டமாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வலயக்கல்விப்பணிப்பாளர் ஆகியோர் இலத்திரனியல் கழிவுகளை மாவட்ட பொறுப்பதிகாரியிடம் கையளித்தனர்.

திங்கட்கிழமை (7) தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (11) வரை இலத்திரனியல் கழிவுகளை மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் ஒப்படைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 1980 ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகளின் படி 75சதவீதமான விசாரணைகள் முழுமை பெற்றுள்ளது — கட்டுலந்த தெரிவிப்பு



பு. கஜிந்தன்

1980 ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகளின் படி 75சதவீதமான விசாரணைகள் முழுமை பெற்றுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஊடாக மூன்று கட்டமாக பகுப்பாய்வு முன்னெடுக்கப் படுகின்றது. இவற்றில் 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டோவர்களின் பதிவின் விசாரணைகள் மற்றும் 2000 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகளுக்கான விசாரணைகள் 1980 ஆவது ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் பதிவின் விசாரணைகள் என காணப்படுகின்றது.

இவற்றில் இன்றைய காலப்பகுதியில் 1980 ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகளின்படி 75சதவீதமான விசாரணைகள் முழுமை பெற்றுள்ளது.

இதில் இரண்டாம் கட்டப்பதிவாக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டின் படி மக்கள் வழங்கிய தரவுகளும், ஆதரவுகளும் எமக்கான 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டோவர்களுக்கான விசாரணையினை முன்னெடுத்து வருகின்றோம்.

யாழ்ப்பாண பிராந்திய மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலத்தின் எற்பாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோ வர்களின் 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டோவர்களின் விசாரணைகளை மேற்கொள்ளும் நடவடிக்கை 06.08.2023 அன்று கல்வியங்காட்டில் அமைந்துள்ள குறித்த அலுவலகத்தில், யாழ்ப்பாண பிராந்திய மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலத்தின் அதிகாரி ப.தற்பரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் களவிஜயத்தினை மேற்கொண்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் தலை-வர் மகேஷ் கட்டுலந்த ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் மேலும் தெரிவிக்கையில், விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கு குற்றபுலனாய்வு, சட்டமா அதிபரின் அறிக்கைகளையும் பெற்றுவருகின்றோம். சந்தேகத்திற்கு இடமான கோவையினையும் பெற்றுவருகின்றோம்.

இவற்றில் 14,988 காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கோவைகளுக்கான விசாரணை மேற் கொண்டுள்ளோம். மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இடர்கால நிவராணங்களை வழங்குகின்றோம். அது மருத்து உதவிக்காகவும் காணப்படுகின்றது.

ஆனால் இழப்பீடு என்பது கொடுக்க வில்லை. உண்மையினை கண்டறியும் ஆணைக்குழுவின் ஊடாக காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கு என்ன நடந்தது என்றதன் பின்னர்தான் உரிய செயற்பாடு முன்னெடுக்கப்படும் என்றார்.


Join us for our Annual Picnic

LAMP OF LIFE 1875 DRIEBERG COLLEGE

DRIEBERG COLLEGE CHAVAKACHCHERI
ALUMNI ASSOCIATION – CANADA
22nd Annual Picnic & Annual General Meeting

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர்
ஆசிரியர் சங்கம் - கனடா
22வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடல்

திகதி: ஞாயிறு ஆவணி 13, 2023- Sunday August 13, 2023
நேரம்: 10.00 முதல், 7.00 வரை - 10.00 a.m. to 7.00 p.m.
இடம்: L`Amoreaux Kidstown Water PARK
Picnic Area A (Birchmount & Finch)
3159 Birchmount Road,
Scarborough ON M1V 1S4

பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சிநேகிதர்கள், யாவரும் குடும்பத்துடன் சமூகம் தந்து, 22வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடலில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். காலை, மதிய, உணவும், மாலை சிற்றுண்டியும் வழங்கப்படும். விளையாட்டு போட்டிகளும் இடம் பெறும்.

RSVP before August 05, 2023 Please Contact:

| | |
|---|---|
| Mohan Devabalan | 416-274-2169 |
| Rajagopal Mathialagan | 905-294-5419 |
| Vasuki Devadason | 416-266-1234 |
| Reginald Thevaranjan | 416-446-2965 |
| Gunam Hunt | 905-472-0379 |



கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

கனடா இந்து மாமன்றம்

கனடா இந்து மாமன்றம் இதுவரை களிப்புடன் படைத்திருந்த சர்க்கரைப் பொங்கல் ஆண்டு விழா தவிர்க்கமுடியாத காரணங்களால் தாமதமாகி இவ் ஆண்டின் பொங்கல் விழா, “சிவநெறிக் காவலர்” அமரர் நந்தீஸ்வரர் அவர்களின் நினைவாஞ்சலி நிகழ்வுடன், தேனாய் சுவைக்கும் இன்னிசை, மனதைவயப்படவைக்கும் வீணாகானம், மற்றும் கண்களுக்கு விருந்தாகும் நடனம் போன்ற சிறப்பு மிக்க கலை நிகழ்சிகளுடன் விழா இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது.

காலம்: August 12, 2023 சனிக்கிழமை மாலை 6:00 - 9:00 மணி வரை
இடம்: “தமிழ் கலை அரங்கம்”, தமிழிசைக் கலா மன்றம்,
1120 Tapscott Road, Scarborough

அனுமதி இலவசம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் சுற்றிவளைப்பில் நால்வர் அதிரடியாக கைது!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாண நகரில் ஊதுபத்தி வியாபாரம், சாத்திரம் என்ற பெயரில் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் நபர்கள் மீது பொலிஸார் விசேட சோதனையில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிபொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் உத்தரவுக்கமைய நேற்றையதினம் (05.08.2023) யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலமையிலான குழு இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம், அடையாள அட்டை இல்லை என்பதோடு, வேறுபகுதிகளில் இருந்து தவறான நோக்கங்களுக காக வந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட நான்கு ஆண்களும் கொழும்பு மற்றும் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், அண்மைக்காலமாக யாழ்ப்பாண நகரில் இப்படியான வெளியிட வியாபாரிகளால் பொதுமக்கள் மற்றும் வெளிநாட்டு பயணிகள் உள்ளிட்டோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடதக்கது.

# சாரதியின் தூக்கத்தால் பறிபோன பெண்ணின் உயிர் – யாழ்ப்பாணத்தில் துயரம்!

பு. கஜிந்தன்

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு செல்ல இருந்த குடும்பப்பெண் ஒருவர் மீது மரம் முறிந்து விழுந்ததில் அவர் சனிக்கிழமை (05) உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் கடந்த ஜுலை 20ஆம் திகதி மீசாலை பகுதியில் இருந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு செல்வதற்காக பேருந்துக்காக காத்திருந்தார்.

இதன்போது வவுனியாவில் இருந்து வந்த கார் ஒன்று துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் ஒருவர் மீது மோதி, அதன்பின்னர் அருகில் நின்ற மரத்தின் மீது மோதி விபத்துக்கு உள்ளானது. இந்த விபத்தின் போது முறிந்த மரமானது அங்கு பேருந்துக்காக காத்திருந்த பெண்மணியின் மீது விழுந்தது.

இந்நிலையில் படுகாயமடைந்த அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றையதினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மீசாலை கிழக்கு, மீசாலை பகுதியை சேர்ந்த மகேஷ்வரன் நவரஞ்சிதம் (வயது 56) என்ற நான்கு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சாரதியின் தூக்க கலக்கமே விபத்துக்கான காரணம் என தெரிவிக்கப்படுகிறது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# யாழ்ப்பாணம் – அனலைதீவில் 13 வயது மாணவிக்கு ஆசிரியரால் பாலியல் தொந்தரவு!

கடந்த ஜுலை 31ஆம் திகதி அனலைதீவு பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 13 வயது மாணவி ஒருவருக்கு, அப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரால் பாலியல் தொந்தரவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த மாணவியால் பாடசாலை நிர்வாகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டது. ஆனால் இதனை அந்த பாடசாலையின் நிர்வாகத்தினர் வெளியே தெரியாமல் மூடி மறைப்பதற்கு திட்டமிட்டனர்.

இந்நிலையில் இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் ஊர்காவற்துறை மற்றும் வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி அமைப்பாளர் சதாசிவம் அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் திரு. சதாசிவம் அவர்களால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கமைவாக ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் வெள்ளிக்கிமை (04) அந்த ஆசிரியரை ஊர்காவற்துறை பொலிஸார் கைது செய்து, ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இந்நிலையில் அவரை பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதி அளித்தார்.

# காலநிலைப் பாதிப்புக்குள்ளான நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தில் – பிரதீபராஜா எச்சரிக்கை

பு. கஜிந்தன்

காலநிலைப் பாதிப்புக்குள்ளான நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்திலுள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலையில், இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவின் போது உரையாற்றும் போது இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காலநிலை என்பது ஆரம்ப காலங்களில் அறிவியலைச் சார்ந்ததாகக் காணப்பட்டாலும் தற்போது எமது வாசலிலுள்ள பிரச்சினையாக மாறியுள்ளது.



உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலநிலை மாற்றத்திற்கான பன்னாட்டு அமைப்பின் அறிக்கையின்படி 2022 காலநிலைப் பாதிப்புக்குள்ளான நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்திலுள்ளதுடன் வடமாகாணம் முதலிடத்திலுள்ளது.

மேலும் மழைவீழ்ச்சி, வெப்பநிலை அதிகரிப்பு மற்றும் அதிகரித்த ஆவியாக்கம் போன்ற பாதிப்புக்களால் வடமாகாணம் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்கின்றது எனத் தெரிவித்தார்.

# தொல்லியல் திணைக்களமமானது எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றக் கூடாது

## அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

பு. கஜிந்தன்



தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வுகளும் அடையாளப்படுதல்களும் இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களினதும் கலாசார தொன்மைகளையும் வரலாறுகளையும் பேணிப் பாதுகாப்பதாக அமைய வேண்டுமே தவிர, எரிகின்ற நெருப்பிற்கு எண்ணை ஊற்றுவதாக அமையக் கூடாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் (07.08.2023) அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்திலேயே கடற்றொழில் அமைச்சர், தன்னுடைய கருத்துக்களை பதிவு செய்துள்ளார்.

சுழிபுரம் பறாளை முருகன் ஆலயம் உட்பட யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் 3 தொல்லியல் திணைக்களத்திற்கு உரிய பகுதியாக அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த பகுதிகளை தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தும் செயற்பாடானது உரிய வழிமுறைகளை பின்பற்றப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருப்பதை தன்னால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில், அனைத்து மக்களும் கௌரமான உரிமைகளை பெற்று வாழும் சூழலை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற சூழலில், குறுகிய நலன்களுக்காக சிலரினால் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான விடயங்கள் வேதனைக்குரியவை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட இணக்க அரசியல் என்பது, இருப்பவற்றை பாதுகாத்து முன்னோக்கி நகர்வதாகவும் பிரச்சினைகளை இலகுவாக தீர்ப்பதற்கான பொறிமுறையாகவும் இருக்க முடியுமே தவிர, தவறான நடவடிக்கைகளை கண்டுகொள்ளாமல் கடந்து செல்வதாக இருக்க முடியாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை அமைச்சரவை ஏற்றுக்கொண்ட நிலையில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, குறித்த விடயம் தொடர்பாக தொடர்ந்தும் அமைச்சரவைகளில் கலந்துரையாடி சரியான தீர்மானங்களை மேற்கொள்வதன் ஊடாக தவறுகள் இடம்பெற்று இருப்பின் திருத்திக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

# வரட்சியால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளும் வட்டுக்கோட்டை பகுதி மக்கள்!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக அதிக வரட்சி நிலவுகிறது. அந்தவகையில் யாழ்ப்பாணத்தில், புள்ளி விபரங்களின்படி சங்கானை பிரதேச செயலர் பிரிவிலேயே அதிக வரட்சி ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வட்டுக்கோட்டை பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

எமது பகுதியில் அதிக வரட்சி நிலவுகிறது. இதன் காரணமாக கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களில் புற்கள் இல்லாமல் அழிவடைந்துள்ளன. இதனால் கால்நடைகளுக்கு உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நீர்நிலைகளில் தண்ணீர் வற்றியதனால் கால்நடைகளுக்கு குடிநீரும் கிடைப்பதில்லை.

பயிர்ச்செய்கை நிலங்கள் அதிக வெயில் காரணமாக அழிவடைந்துள்ளன. பயிர்களுக்கு இறைப்பதற்கு கிணறுகளிலும் தண்ணீர் இல்லை. இதனால் சில தோட்டங்கள் முற்றாக அழிந்துள்ளதுடன், சில தோட்டங்களில் உள்ள பயிர்கள் வாடுகின்றன.

குறிப்பாக கத்தரிக்கு தண்ணீர் பற்றாக்குறையால் மஞ்சள் நிறமாக காய்கள் மாறுகின்றன. இதனால் தரமான விளைச்சலை எம்மால் பெறமுடியவில்லை.

குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. ஒரு தொகுதி குடும்பங்கள் தூர இடங்களுக்கு சென்றே குடிநீரைப் பெற்றுக் கொள்கின்றனர். ஒரு தொகுதி குடும்பங்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை பணம் கொடுத்து பெற்றுக் கொள்கின்றனர். இன்னும் ஒரு தொகுதி குடும்பங்கள் பிரதேச சபையினர் வழங்கும் குடிநீரைப் பெற்றுக் கொள்கின்றனர். பிரதேச சபையினரால் பணம் பெறப்பட்டே குடிநீர் வழங்கப்படுகிறது. அதுவும் ஒன்றுவிட்டு ஒரு நாளைக்கு தான் குடிநீர் வழங்கப்படுகிறது. சில நேரங்களில் இரண்டு, மூன்று நாட்களுக்கு பின்னரும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

இந்த வரட்சி காரணமாக குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் நோய் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.

ஒரு ஆர்ப்பாட்டம் என்றவுடன் தகவல்களை திரட்டி கொழும்பிற்கு அனுப்புகின்ற புலனாய்வாளர்கள், இப்படியான மக்களது பிரச்சினைகள் குறித்தும் தகவல்களை திரட்டி அனுப்ப வேண்டும். இவ்வாறு அனுப்புகின்ற தகவல்களை அரசாங்கம் மற்றும் உரிய அதிகாரிகள் ஆய்வு செய்து மக்களுக்கு தேவையானவற்றை, அதாவது நிவாரணங்களையும் இழப்பீடுகளையும் வழங்க வேண்டும் - என்றனர்.

# யாழ்ப்பாணத்தில் தனியார் பேருந்துக்கு கல் வீசிய பெண் கைது!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் பேருந்துக்கு கல்லெறிந்து சேதப்படுத்திய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுப்பிட்டி பகுதியை சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - அச்சுவேலி இடையே சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தொன்று யாழ்ப்பாண நகர் பகுதியில் தரித்து நின்றுள்ளது.

இதன்போது அங்கு நின்ற பெண்ணொருவர் பேருந்து மீது கல் வீசி தாக்கி பேருந்தை சேதப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸார் குறித்த பெண்ணை கைது செய்துள்ளதுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கடன் வாங்கி விகாரை கட்டும் நாடு?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



**நா**டு பெருமளவுக்கு வெளிநாட்டு உதவிகளிலும் ஐ.எம்.எப் போன்ற பன்னாட்டு நிதி நிறுவனங்களிலும் தங்கியிருக்கும் ஒரு காலச் சூழலில், சிங்கள பௌத்த மயமாக்கல் முடுக்கி விடப்பட்டிருக்கிறது. பொதுவாக ரணில் விக்ரமசிங்க மனித முகமூடி அணிந்த அல்லது லிபரல் முகமூடி அணிந்த ஒரு சிங்கள பௌத்த வாதியாகவே பார்க்கப்பட்டார். அண்மையில் கூட அவர் பேராசிரியர் தேனுவரவின் 83 ஜூலை தொடர்பான கண்காட்சியில் தன் மனைவியோடு பங்குபற்றினார்.

அதைக் குறித்து ஒரு சிங்கள ஊடகவியலாளர் விமர்சித்திருந்தார். 83 ஜூலைக்கு மன்னிப்புக் கேளாத ஓர் அரசியல்வாதி அதுபோன்ற ஒரு கண்காட்சிக்கு வந்திருக்கிறார் என்று அந்த ஊடகவியலாளர் குற்றம் சாட்டியிருந்தார். பொதுவாக ரணில் விக்ரமசிங்கவின் காலம் எனப்படுவது தமிழ் மக்களைப் பொறுத்தவரை அதிகரித்த ஜனநாயக வெளியைக் கொண்ட ஒரு காலகட்டமாகும். ஆனால் இம்முறை அவ்வாறில்லை. சிங்கள பௌத்த மயமாக்கல் ஒப்பீட்டளவில் அதிகமாக நடக்கும் ஒரு காலகட்டமாக அது காணப்படுகிறது.

ஒருபுறம் ரணில், சிங்கள லிபரல் ஜனநாயகவாதிகளோடு காணப்படுகிறார். இன்னொரு புறம், சிங்கள பௌத்த மயமாக்கலை முடுக்கி விடுகிறார். சில மாதங்களுக்கு முன்பு அவர் யுத்தத்தில் உயிர்நீத்த எல்லாருக்குமான ஒரு பொது நினைவுச் சின்னத்தை உருவாக்கப் போவதாக அறிவித்திருந்தார். அதற்கு தமிழ் தரப்பில் இருந்து எதிர்ப்பு கிளம்பியது. இப்பொழுது கிடைக்கும் செய்திகளின்படி அதுதொடர்பான கலந்துரையாடல் ஒன்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட புத்திஜீவிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. அதேசமயம் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக் குழுவை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஒருபுறம் ரணில், நல்லிணக்கம், பொறுப்பு கூறல், 13ஆவது திருத்தம் போன்றவை தொடர்பில் ஐநா, மேற்கு நாடுகள், இந்தியா போன்றவற்றைத் திருப்திப் படுத்துவதற்காக சில வீட்டு வேலைகளை செய்து கொண்டிருக்கிறார். இன்னொரு புறம் சிங்கள பௌத்த மயமாக்கலை முடுக்கி விட்டிருக்கிறார். அவரை நிதி நெருக்கடியில் இருந்து மீட்பதற்கு முயற்சிக்கும் மேற்கு நாடுகளோ இந்தியாவோ அல்லது பன்னாட்டு நாணய நிதியமோ சிங்கள பௌத்த மயமாக்கலை நிறுத்துமாறு அவர் மீது அழுத்தங்களை பிரயோகிக்கவில்லையா? அல்லது மேற்கண்ட தரப்புகள் அவ்வாறு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்று தமிழ்த் தரப்பு மேற்கண்ட தரப்புகளின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லையா?

தமிழ்த் தரப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான் ஒப்பீட்டளவில் தீவிரமாகப் போராடுகின்றது. ஒவ்வொரு முழுநிலா நாள் அன்றும் தையிட்டியில் அது போராடுகின்றது. தையிட்டியில் ஒவ்வொரு முழு நிலா நாளின் போதும் சிங்கள யாத்திரிகர்கள் விகாரைக்கு வருவார்கள். அல்லது குறைந்தபட்சம் படைவீரர்கள் விகாரையை வணங்குவதற்கு வருவார்கள். எனவே அந்த இடத்தில் ஒரு எதிர்ப்பு நடவடிக்கையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாதம்தோறும் ஒழுங்குபடுத்தி வருகிறது. அண்மை மாதங்களாக சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகத் தீவிரமாகப் போராடி வருவது அந்தக் கட்சிதான். அவ்வாறான போராட்டங்களின்போது போலீசாரோடு முட்டுப்படுவதும் அந்த கட்சி தான். அவையெல்லாம் உணர்ச்சிகரமான அரசியல் விவகாரங்கள். தமிழ் எதிர்ப்பு அரசியலின் கூர்முனை போல அக்கட்சிதான் காணப்படுகின்றது. அவ்வாறு போராட்டங்களை முன்னெடுப்பதன்மூலம் அக்கட்சியானது ஏனைய கட்சிகளையும் போராடுமாறு தூண்டுகிறது. ஏனைய கட்சிகளுக்கும் போராடவில்லை என்றால் மக்கள் தங்களை மறந்து விடுவார்கள் என்று தெரிகிறது. எனவே அந்தக் கட்சிகளும் போராட்ட அரங்கில் காணப்படுகின்றன.

இவ்வாறாக தமிழ் தேசிய எதிர்ப்பு அரசியலில் கூர்முனையாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி காணப்படுவது மட்டுமல்ல, அது தொடர்ச்சியாக ஏதோ ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் இத்தனை போராட்டங்களின் மத்தியிலும் நிலப்பறிப்பு நடவடிக்கைகளும் சிங்கள பௌத்த மயமாக்கலும் மேலும் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் இங்கு தொகுத்துக் கவனிக்கவேண்டும். பறளாய் முருகன் கோவிலில் காணப்பட்ட அரச மரம் தொடக்கம் தீவுப் பகுதியை ஒரு தனியான நிர்வாக அலகாக அறிவிக்கப்போவதான ஏற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்களில் அரசாங்கம் தமிழ் மக்களைத் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி வருகிறது.

ஒருபுறம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஏனைய கட்சிகளும் போராடுகின்றன. இன்னொருபுறம் அரசாங்கம் அதன் நிலப்பறிப்பு மற்றும் சிங்கள பௌத்தமயமாக்கல் நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறது என்றால், அதன் பொருள் என்ன? தமிழ்க் கட்சிகளின் போராட்டத்தால் அரசாங்கத்திற்கு நோகவில்லை என்று தானே பொருள்?

அதுதான் உண்மை. ஒரு போராட்டம் அது வன்முறைப் போராட்டமாக இருந்தாலும் சரி, அறவழிப் போராட்டமாக இருந்தாலும் சரி, அது எதிர்த் தரப்புக்கு நெருக்கடியை ஏற்படுத்த வேண்டும். எதிர்த் தரப்பின் நிர்வாகத்தை முடக்க வேண்டும் அல்லது பொருளாதாரத்தை முடக்க வேண்டும். அல்லது அனைத்துலக அளவில் எதிர்த் தரப்புக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த வேண்டும். ஆனால் தமிழ்த் தரப்பின் போராட்டங்கள் அவ்வாறாக எதிர்த் தரப்புக்கு அதாவது அரசாங்கத்துக்கு பொருத்தமான அழுத்தங்களை போதுமான அளவில் கொடுக்கவில்லை என்பதனால்தான் அரசாங்கம் அதன் நிலப்பறிப்பு மற்றும் சிங்கள பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகளை நிறுத்தவே இல்லை. அதுவும் பன்னாட்டு நாணைய நிதியம் போன்ற அமைப்புக்களிடம் கடனுக்காகத் தங்கியிருக்கும் ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் இவ்வாறு துணிச்சலாக சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுக்கிறது என்று சொன்னால் தமிழ்த் தரப்பின் அழுத்தம் காணாது என்றுதானே பொருள்?

அதுவே உண்மையும் கூட. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடாது போராடுகிறது என்பது உண்மை. அதன்மூலம் தமிழ் அரசியலை ஏதோ ஒரு விகிதமாவது அது நொதிக்க செய்கின்றது. ஆனால் அது போதாது. ஏனென்றால் அந்தக் கட்சியின் போராட்டங்கள் பெருமளவுக்கு ஒரு கட்சிப் போராட்டங்கள்தான். ஏனைய கட்சிகளோடு இணைந்து போராட அக்கட்சி தயாரில்லை. ஏனைய கட்சிகளை விசுவாசமான கட்சிகள் என்று அங்கீகரிக்கவும் அக்கட்சி தயாரில்லை. ஏனைய கட்சிகள் 13ஐ ஆதரிப்பதாகவும், அவை இந்தியாவுக்குச் சேவகம் செய்வதாகவும், தம் சொந்த மக்களைக் காட்டிக் கொடுப்பதாகவும், அவர்களிடம் நேர்மை இல்லை என்றும், உறுதி இல்லை என்றும், அவர்கள் பொய்யர்கள் என்றும், இரட்டை நாக்கர்கள் என்றும் முன்னணி குற்றம் சாட்டுகின்றது. அதுபோலவே தமிழீழ விடுதலைப் புலிகளின் நாட்களை நினைவு கூர்வதற்கு மேற்படி கட்சிகளுக்கு உரிமையும் கிடையாது தகுதியும் கிடையாது என்றும் முன்னணி கருதுகின்றது. இதனால் முன்னணி தன்னை ஒரு பரிசுத்தமான கட்சியாகக் காட்டிக் கொள்ளப் பார்க்கின்றது.

இதன் விளைவாக ஏனைய கட்சிகள் முன்னணியோடு சேர்ந்து போராடத் தயார் இல்லை. அதனால் முன்னணியின் போராட்டங்கள் பெருமளவுக்கு ஒரு கட்சிப் போராட்டங்களாகவே மாறிவிட்டன. அவை பெரும்பாலும் சிறு திரள் போராட்டங்கள் அல்லது கவன ஈர்ப்பு போராட்டங்கள்தான். பெருந் திரள் போராட்டங்கள் அல்ல. 13ஆவது திருத்தத்திற்கு எதிராக முன்னணி நடத்திய இரண்டு ஆர்ப்பாட்டப் பேரணிகளில் 2000க்கு குறையாத மக்கள் பங்கு பற்றினார்கள். இதைத்தவிர முன்னணி தனியாக ஒழுங்குபடுத்திய எந்தப் போராட்டத்திலும் பல்லாயிரக்கணக்கான மக்களைத் திரட்ட முடியவில்லை. முன்னணி மட்டுமல்ல ஏனைய எந்த ஒரு தரப்பும் தனியாக ஒழுங்குபடுத்தும் போராட்டங்களில் மக்கள் சிறிய திரளாகத்தான் கூடுகிறார்கள். சிவில் சமூகங்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புகள் ஒழுங்கு செய்யப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களும் அதற்கு விதிவிலக்கல்ல. சில மாதங்களுக்கு முன்பு வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியிலும் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய அளவுக்கு பெருந்தொகையினர் பங்குபற்றவில்லை.

அதே சமயம் அண்மையில் கொக்குத் தொடுவாய் மனிதப் புதை குழிக்கு நீதி கேட்டு முல்லைத் தீவில் ஒழுங்குபடுத்தப்பட்ட போராட்டம் ஒப்பீட்டளவில் கூடுதலான மக்களைக் கொண்டிருந்தது. அதுகூட பிரமாண்டமான ஊர்வலம் அல்ல. எனினும் அண்மைக் காலங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலங்களில் அது பெரியது. இவை நமக்கு எதைகக் காட்டுகின்றன? கடந்த 14 ஆண்டுகளாக கட்சிகளும் பொதுமக்கள் அமைப்புகளும் ஒன்றிணைந்து புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் உதவியோடு ஒழுங்குசெய்யும் ஆர்ப்பாட்டப் பேரணிகள்தான் ஒப்பீட்டுளவில் பெரியவைகளாக, அழுத்தமானவர்களாக அமைகின்றன. அவை தான் வெளியுலகத்தின் கவனத்தை ஈர்க்கின்றன. அரசாங்கத்துக்கு ஏதோ ஒரு விதத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

உதாரணமாக, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியை வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆர்வத்தோடு பார்த்தன. தாம் சந்திக்கும் சிவில் சமூக பிரதிநிதிகளிடம் அந்த ஆர்ப்பாட்டத்தைப்பற்றி மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதில் அக்கறையாகவும் இருந்தன. ஆனால் அப்படிப்பட்ட போராட்டங்களை நடத்துவது என்று சொன்னால் தமிழ்த் தரப்பில் ஒன்றிணைந்த செயற்பாடு அவசியம். எல்லாக் கட்சிகளும், சிவில் சமூகங்களும், புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகமும் ஒரு புள்ளியில் ஒன்றுபட வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட ஐக்கியம் இப்பொழுது ஒரு அம்புலிமாமாக் கதையாக மாறி வருகிறது. அவ்வாறு ஐக்கியம் ஏற்படாமைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தூய்மைவாதமும் ஒரு காரணம். ஏனைய கட்சிகளின் செயலின்மையும் ஒரு காரணம்.

இவ்வாறான ஒரு பின்னணியில் அரசாங்கத்திற்கு நோகக்கூடிய விதத்தில் போராட்டங்கள் அமையாத காரணத்தால் அரசாங்கம் சிங்கள பௌத்த மயமாக்கலை தொடர்ந்து முடுக்கி விட்டுள்ளது. இப்பொழுது நடக்கும் சிதறலான, தெட்டம் தெட்டமான போராட்டங்களால் அரசாங்கத்துக்கு நெருக்கடி என்பதை விடவும் மறைமுகமாக நன்மை உண்டு என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது வேட்பாளராக களமிறங்கும் வாய்ப்புகளை அதிகம். அப்பொழுது அவரை ராஜபக்சக்களும் ஆதரிப்பார்கள். அவ்வாறு ராஜபக்சக்கள் அவரை ஆதரித்தால் எதிர்க்கட்சிகளுக்கு அதுவே போதும், அவரை தமிழ் மக்கள் மத்தியில் தோற்கடிப்பதற்கு.

ஏனென்றால் கடந்த 14 ஆண்டுகளாக நடந்த எல்லா ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் தமிழ்மக்கள் ராஜபக்சங்களுக்கு எதிராகத்தான் வாக்களித்து வந்திருக்கிறார்கள். குறிப்பாக ராஜபக்சக்களின் ஆணையை ஏற்று போரை நடத்திய தளபதி ராஜபக்சங்களுக்கு எதிராகத் திரும்பிய பொழுது அவருக்கும் தமிழ் மக்கள் வாக்களித்தார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் அதிகபட்சம் ஒன்றாகத் திரண்ட ஒரு விவகாரமாக ஜனாதிபதித் தேர்தலைக் கூறலாம். எனவே தன்னை ராஜபக்சக்களோடு சேர்த்துப் பார்த்து தமிழ் மக்கள் தனக்கு வாக்களிக்காமல் விடலாம் என்ற பயம் ரணிலுக்கு உண்டு. ஆங்கிலம் பேசும் தமிழ் நடுத்தர வர்க்கம் சில சமயம் ரணிலை ஆதரிக்கக்கூடும். ஆனால் தமிழ் வாக்குகளை திரட்டுவதில் தனக்குள்ள நிச்சயமின்மைகளைக் கவனத்தில் எடுத்து அவர் முழுக்க முழுக்க சிங்கள பௌத்த வாக்குகளைத் திரட்டுவது என்று முடிவெடுக்கலாம்.

அப்படி ஒரு முடிவை எடுத்து விட்டதாகத்தான் தெரிகிறது. அதனால்தான் சிங்கள பௌத்த வாக்காளர்களை கவர்வதற்காக சிங்கள பௌத்த மயமாக்கலை முடுக்கி விட்டுள்ளார். அதற்கு எதிராகத் தமிழ் கட்சிகள் நடத்தும் சிறிய கவனயீர்ப்பு போராட்டங்கள் அவருக்கு மேலும் வாக்குகளைத் திரட்டிக் கொடுக்கும். தமிழ் மக்கள் என்னை எதிர்க்கிறார்கள். நான் சிங்களவர்களுக்கு உண்மையாக இருக்கிறேன். நான் சிங்களவர்களுக்கு விசுவாசமாக சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுக்கிறேன். அதனால் தமிழ் மக்கள் என்னை எதிர்க்கிறார்கள்... என்று அவர் சிங்களப் பகுதிகளில் கூறுவார். எனவே தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணையாத போராட்டங்கள் எதிர்த் தரப்புக்கு மறைமுகமாக உதவுவது மட்டுமல்ல சிங்கள பௌத்த பௌத்த மயமாக்கலையும் தடுக்கத் தவறிவிட்டன.

# இந்திய தேர்தல் சுலோகமாக 'இனப்படுகொலை' விவகாரம்!



வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

• "மாற்றத்துக்கான புள்ளடியை" இட ஒட்டு மொத்த இலங்கை மக்களும் தயார்!

அயோக்கியனின் கடைசிப் புகலிடம் இனம் மற்றும் மதம் என்ற இரு ஆயுதங்களாகும். இலங்கையில் ஆளும் சிங்கள வர்க்கம் கடந்த 75 வருடங்களாக இந்த இரு ஆயுதங்களை மூலதனமாகக் கொண்டே தமது ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றது.

இந்த ஆட்சிக்கு தென்னிலங்கை கொடுத்த பெரும் அடிதான் கடந்த வருடம் 2022 ஜுலை அரகலய எழுச்சி. ஆனால் சிங்கள ஆளும் வர்க்கம் சுதாகரித்துக் கொண்டு அரசியலில் முகவரி அற்று இருந்த ரணில் விக்ரமசிங்கவின் தலைமையின் கீழ் மீள எழுச்சி பெற தேவையான அனைத்து முயற்சிகளையும் மூர்க்கத்தனமாகவும் மிலேச்சத்தனத்தனமாகவும் "நாடாளு மன்ற ஜனநாயகத்தின்" மூலம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. தென்னிலங்கை மக்கள் தேர்தல்களில் தாம் வழங்கிய ஆணையைத் திரும்பப் பெற முடியாது "ஆப்பிழுத்த குரங்கின்" நிலையில் உள்ளனர்.

இந்த நிலையில் இருந்து விடுபட "மாற்றத்துக்கான புள்ளடியை" இட தென்னிலங்கை மக்கள் மாத்திரமன்றி, ஒட்டு மொத்த இலங்கை மக்களும் தயாராக இருந்தபோதும் ரணில் - ராஜபக்ஷக்களின் அரசியல் இருப்பு பறிபோய்விடும் என்பதால் தேர்தல் இப்போதைக்கு இல்லை என்றாகிவிட்டது. ஆனால் அடுத்த வருடம் ஜனாதிபதிதேர்தல் நடைபெறுமென தற்போது கூறப்பட்டுள்ள நிலையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைப்போன்று நாடு பெரும் எதிர்பார்ப்பில் வைக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைப்போன்று ஜனாதிபதி தேர்தலும் நடைபெற்றுவிடுமோ என்ற அச்சமும் தென்னிலங்கை மக்களிடம் இல்லாமல் இல்லை. தேர்தல் என்பதே ரணில் - ராஜபக்ஷ அணியினருக்கு "சிவப்பு விளக்காகவே" உள்ளது. அந்த வகையில் ரணில் - ராஜபக்ஷ அணியினர் தேர்தலை நோக்கி நகர்வார்களா என்பது கேள்விக்குறியே. தற்போதைய நிலையில் இந்த இரு அணியினருக்கும் இடையில் முறுகள் நிலை தலை தூக்கியுள்ள போதும் இருபகுதியினருமே சமரசத்திற்குப் போய் பொருளாதார மீட்சியைக் காரணம் காட்டி நாடாளுமன்றத்துக்கூடாக தேர்தல் அற்ற சமரச முடிவை நோக்கி நகரக் கூடிய வாய்ப்புக்களே கூடுதலாகத் தெரிகின்றது.

தற்போது நாடாளு மன்றமா? நீதித்துறையா? ஆதிகாரமிக்கது என்ற சர்ச்சையை ஆளும் தரப்பு ஆரம்பித்துள்ளது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு யோசனையை எந்தவொரு நீதிமன்றிலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது.

உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பதற்காக செயற்படுத்தப்படும் யோசனையை எந்தவொரு நீதிமன்றத்திலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்திற்கு (09) தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற நடைமுறையைப் பின்பற்றி நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு எதிராக, எந்தவொரு வகையிலும் உத்தரவு அல்லது தீர்ப்பை வழங்குவதற்கு இலங்கை அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்டுள்ள எந்தவொரு நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை என சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறான எந்தவொரு உத்தரவு அல்லது நீதிமன்ற தீர்ப்பும் அரசியலமைப்பு மீறலாக அமையும். அரசியலமைப்பின் 148 ஆவது பிரிவிற்கு அமைய, அரச நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாடு பாராளுமன்றத்தின் வசம் காணப்படுவதாக சபாநாயகர் தெரிவித்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டமானது அமைச்சரவையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு, பாராளுமன்ற அரச நிதி தொடர்பான செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், 2023 ஆம் ஆண்டு ஜுலை முதலாம் திகதி பாராளுமன்றத்தில் மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் நினைவுபடுத்தினார்.

அதற்கமையஇ குறித்த யோசனையானது உயர் நீதிமன்றத்தில் அல்லது 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்ட வேறு எந்தவொரு நீதிமன்றத்திலும் விசாரணைக்குட்படுத்த, மறுபரிசீலனை செய்ய அல்லது சவாலுக்கு உட்படுத்தப்பட முடியாது. பாராளுமன்ற செயற்பாடுகளை கேள்விக்குட்படுத்த அல்லது தலையீடு செய்ய நீதிமன்றத்திற்கு முடியாது என முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க மிகத் தெளிவாக அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார்.

இது நாடாளுமன்றத்தில் ரணில் - ராஜபக்ஷ அணியினர் எதிர் காலத்தில் எந்தத் திசை நோக்கியும் பயணிக்கலாம் என்பதை கோடிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது. அந்த வகையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தற்போதைக்கு இல்லை என்பது போல மாகாண சபைகளுக்கான தேர்தலும் எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு இல்லை என்பதையும் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க நாடாளுமன்றில் உறுதிப்படுத்தியுள்ளார். இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆரவாரம் காட்டும் 2024 இல் ஜனாதிபதி தேர்தல் என்ற சுலோகமும் பிசுபிசுத்துப் போகலாம் என்ற ஆரூடங்களும் எழ இடமுண்டெனலாம்.

இந்த ஒரு பின்னணியில் ரணில் - ராஜபக்ஷ அணியினர் வெளித் தோற்றத்தில் முரண்பட்டுக் கொண்டபோதும் ஒரு புள்ளியில் தமது இருப்புக்காக சமரசம் காணும் நிலையே கூடுதலாக இருக்கின்றது. இந்த முரண்பாடுகளுடனான உறவில்கூட இரு பகுதியினரும் தமக்கான அரசியல் பாதையைச் செப்பனிடுவதிலும் குறியாக இருக்கின்றனர் என்பதும் வெளிப்படை.

இதற்கென இரு பகுதியினருமே கைகளில் எடுத்துள்ளது அயோக்கியனின் கடைசிப் புகலிடம் இனம் மற்றும் மதம் என்ற இரு ஆயுதங்களாகும். அந்த ஆயுதத்தையே ரணில் - ராஜபக்ஷ அணியினர் தற்போதும் கைகளில் எடுத்துள்ளனர் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அரசாங்கம் மீண்டும் மீண்டும் சில இனவாத அல்லது மதவாத சம்பவங்களை தூண்டி மீண்டும் ஒரு கறுப்பு ஜுலையை உருவாக்க முயற்சிக்கிறது என Fr J.C. Pieris தனது கருத்தை ஆங்கில நாளிதழில் பதிவு செய்துள்ளார்.

ஆனால் அவை ஒவ்வொரு முறையும் தோல்வியடைகின்றன என்றும் அவர் சுட்டிக் காட்டுகின்றார். இலங்கை முற்றிலும் வேறுபட்டது மற்றும் வேறு எந்த தலைமுறையும் இல்லாத ஒரு தலைமுறை என்பதை ஆரகலய நிரூபித்தது என்றும் Fr J.C. Pieris குறிப்பிடுகின்றார்.

தமிழ் மக்களுக்கெதிராக தற்போது நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் சம்பவங்கள் ரணில் - ராஜபக்ஷ அணியினர் இதுகுறித்து கண்டும்காணாதது போல் நடந்து கொள்வதும் இன்னொரு கறுப்பு ஜுலைக்கான அபாயத்தை உணர்த்துவதாக உள்ளது.

• அரகலயா சக்தி படைத்ததா?

ஆனால் அரகலயாக்கள் குறித்த கணிப்பு "சிஸ்டம் சேன்ஜ்" விடயத்தில் தென்னிலங்கையை சிங்கள ஆளும் வர்க்கத்திற்கெதிராக திசை திருப்புவதில் வெற்றி கண்டது போன்று கொதி நிலை நோக்கி நகர்த்தப்படும் இன்னொரு கறுப்பு ஜுலையை தடுத்துவிடும் சக்தி படைத்ததா என்பது கேள்விக் குறியே.

• கடலில் மிதக்கும் பனிப் பாறை.

காலிமுகத் திடலில் மே 18 நினைவேந்தலின் போதும் கறுப்பு ஜுலை பொரளை அனுஷ்டிப்பின் போதும் அந்த நிகழ்வுகளைக் குழப்ப வந்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் என்பது உண்மையே. ஆனால் அந்த விரல்விட்டு எண்ணிக்கையானவர்களின் பின்புலத்தை குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. கடலில் மிதக்கும் பனிப் பாறை போன்று பலமான கொடூரமான மறைந்த கரங்களின் நிகழ்ச்சி நிரல்களும் உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

இந்நிலையில் "சிஸ்டம் சேன்ஜ்" அரகலயாக்களால் இன்னொரு கறுப்பு ஜுலை போன்ற நாசகார அரசியல் நகர்வுகளை தடுத்து நிறுத்தும் சக்தி படைத்தவர்களாக இருப்பர் என எதிர்பார்க்க முடியாது.

• "சிஸ்டம் சேன்ஜ்" இன்னும் நடக்கவில்லை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் தற்போது பதவியில் இருந்து விலகி வரி செலுத்துவோரின் ஆதரவுடன் ஆடம்பரமாக வாழ்கின்ற போதிலும் அரகலய அமைப்பு கோரிய "முறைமை மாற்றம்" அதாவது "சிஸ்டம் சேன்ஜ்" இன்னும் நடக்கவில்லை. இதற்கெதிராக தென்னிலங்கை மக்களை மீண்டும் அணிதிரட்ட சக்தியற்றவர்களாகவே அரகலயாக்கள் உள்ளனர்.

• மாயைக்குள் அவசரப்பட்டு வீழ்வதற்கு தமிழ் மக்கள் தயாராக இல்லை.

இந் நிலையில் அரகலயாக்களின் வரவுடன் தென்னிலங்கை மக்களின் மனங்களில் அனைத்து மக்களையும் அரவணைத்து செல்லும் மனமாற்றம் ஏற்பட்டுவிட்டதான மாயைக்குள் அவசரப்பட்டு வீழ்வதற்கு தமிழ் மக்கள் தயாராக இல்லை. தென்னிலங்கை இடதுசாரிகளின் வர்க்க சிந்தனைகளுடன் இழுபட்டு மலையக மக்கள் தமது பிரஜா உரிமையை இழந்தனர். இறுதியில் தென்னிலங்கை இடதுசாரிகள் சிங்கள ஆளும் வர்க்கத்துடன் சமரசமாகி கரைந்து போனமை வரலாறு.

• அரகலயாக்களின் கருத்தியலுக்குக் கிடைத்த வெற்றி.

எந்தவொரு தலைமைத்துவத்தின் உதவியுமின்றி, எந்தவொரு அமைப்பும் இல்லாமல், எந்தவொரு சக்திவாய்ந்த மத அல்லது அரசியல் ஆதரவின்றி அந்த நிலையை அடைவது அரகலயாவின் உச்சக்கட்டமாகும்.

மேலும் இளம் இலங்கை முற்றிலும் வேறுபட்டது மற்றும் வேறு எந்த தலைமுறையும் இல்லாத ஒரு தலைமுறை என்பதை நிரூபித்தது.

இது அரகலயாக்களின் கருத்தியலுக்குக் கிடைத்த வெற்றியாகும். இந்த வெற்றி போல் அனைத்து விடயங்களிலும் அரகலயாக்கள் வென்றிடுவர் என்று எதிர்பார்க்க முடியாததாகும். ஏனெனில் நாட்டின் சூழல் மாறிவிட்டது. நிச்சயமற்ற தன்மைக்குள் நாடு உள் வாங்கப்பட்டுவிட்டது.

எனவே அரகலயாக்கள் குறித்து தமிழ் மக்கள் அதீத நம்பிக்கை வைத்து நடப்பதற்கான காலம் இன்னும் கனிந்துவிட்டதாகக் கொள்வதற்கில்லை. ஏனெனில் அரகலயாக்களின் நிகழ்ச்சி நிரல் "சிஸ்டம் சேன்ஜ்" என்ற கருத்தியலுடன் மட்டுப்படுத்தப்பட்டது. அந்தக் கருத்தியல் தென்னிலங்கையை குறுகிய காலத்திற்குள் அணி திரட்டுவதில் வெற்றியீட்டியது. ஆனால் அந்த வெற்றி தக்க வைத்துக் கொள்ளப்படவில்லை. அரகலயாக்கள் எதிர்பார்த்த மாற்றத்துக்கும் வழி சமைக்கவில்லை. எனினும் அரகலயாக்களும் அவர்களின் கருத்தியலும் தென்னிலங்கை மக்களின் மனங்களில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டது என்பது மட்டும் உண்மையாகும்.

அந்தவகையில் அரகலயாக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து புரட்சி செய்துவிடுவர் என்றோ அல்லது அரகலயாக்கள் வைத்து தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை வென்றெடுத்துவிடுவர் என்றோ ரணில் - ராஜபக்ஷ அணியினருக்கோ அல்லது சிங்கள ஆளும் வர்க்கத்தினருக்கோ அச்சமூட்டும் நிகழ்வுகள் ஏதும் நடந்துவிடப் போவதில்லை.

சில வேளைகளில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களுடன். அரகலயாக்கள் பொது உடன்பாட்டுக்கு வரும் சாத்தியக் கூறுகள் உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

மொத்தத்தில் தமிழ் மக்கள் 2009க்குப் பின் எவ்விதமான தீர்க்கமான அரசியல் நகர்வுகளும் இன்றி பூஜ்ஜியத்திற்குள் தள்ளப்பட்டுவிட்டனர். தனி நாடு கோரி மக்கள் ஆணை வழங்கிய தமிழ் மக்கள் சமஷ்டி தீர்வுக்குக் கீழ் இறங்கி இன்று வெறும் கையுடன் 13 உடன் சமரசமாகி உள்ளனர். தமிழ்த் தலைமைகளின் வீரவசனம் அவர்கள் கூறித் திரிந்த இராஜதந்திரம் அனைத்துமே செல்லாக்காசாக போய்விட்ட நிலையில் தமிழ்த் தலைமைகள் தமது அரசியல் சுய நலத்துக்காக தமிழ் மக்களை அதல பாதாளத்தில் தள்ளியுள்ளனர்.

உண்மையில் அனைத்து தமிழ்த் தலைமைகளுமே கையாலாகாத நிலையில் தத்தமது இருப்புக்காக ஏதோ ஒருவகையில் இந்தியாவிடம் சரணாகதி அடைந்துள்ளனர்.

13உம் முழுமையாக நடைமுறைக்கு வருமா என்பதை தீர்மானிக்கும் சக்தி இந்தியாவின் கைகளில் உள்ளது.

அதே வேளையில் நடைபெற உள்ள இந்தியத் தேர்தலின் பரப்புரையினை இந்திய உள்துறை அமைச்சர் அமிதாஷ் இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே என தமிழக மண்ணில் இருந்து ஆரம்பித்துள்ளார்.

மொத்தத்தில் இந்திய தேர்தல் வியூகத்திற்குள் தமிழ் மக்களின் அரசியல் தலைவிதி பகடைக் காயாக மாற்றப்பட்டுவிட்டது.

Email : vathevaraj@gmail.com
10th August 2023

# தண்ணிமுறிப்பு குளத்தில் அத்துமீறிய சிங்கள மீனவர்களை பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்த தமிழ் மீனவர்கள்

- நடராசா லோகதயாளன்

முல்லைத்தீவு மாவட்டம் தண்ணிமுறிப்பு குளத்தில் மீன்பிடியில் ஈடுபடும் தண்ணிமுறிப்பு மற்றும் கிக்கிறாபுரம் மீனவர் சங்கங்களிற்கு தெரியாது மீன்பிடியில் ஈடுபட்ட சிங்கள மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வெலிஓயா பகுதியைச் சேர்ந்த மீனவர்களே அங்கு சென்று மீன்பிடித்ததால், உள்ளூர் மக்கள் மற்றும் மீனவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த நிலையில் கடந்த சனிக்கிழமை (5) அந்த பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடி சங்கங்கள் மற்றும் அரச அனுமதி இன்றி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 29 பெரும்பான்மையின சிங்கள மீனவர்களை ஒட்டுசுட்டான் பொலீசார் கைதுசெய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தியுள்ளனர்.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட தண்ணிமுறிப்பு மக்களுக்கும், கிச்சிராபுரம் மக்களுக்குமே அனுமதி உள்ள நிலையில் வெலிஓயா பகுதியிலிருந்து பெரும்பான்மை இனத்தவர்கள் அனுமதியின்றி சட்டவிரோதமாக தொடர்ச்சியாக அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று உள்ளூர் மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இவர்களின் இவ்வாறான நடவடிக்கையினால் குளத்தில் உள்ள மீன்வளங்கள் முற்றாக அழிவடைந்துள்ளதாக உள்ளூர் மீனவர்கள் ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துள்ளார்கள்.

இந்த சூழலிலேயே அந்த குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட சிங்கள மொழிபேசும் மீனவர்களையும் , அவர்கள் பயன்படுத்திய மீன்பிடி உபகரணங்களையும் தண்ணிமுறிப்பு குளத்தில் தொழில் செய்யும் மக்களால் பிடிக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடும் போது உள்ளூர் மீனவர்களால் சிங்கள மீனவர்கள் சுற்றி வளைக்கப்பட்ட சூழலில் பலர் ஓடிவிட்டார்கள் என்று உள்ளூர் தகவல்கள் கூறுகின்றன.

எனினும் பிடிக்கப்பட்ட 29 பெரும்பான்னை இனத்தினை சேர்ந்த மீனவர்ளும் அவர்கள் கொண்டுவந்த 6 வலைகள்,20 மிதக்கும்ரியூப்புக்ள் என்பன ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். ஒட்டுசுட்டான் பொலீசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் வெலிஓயா மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கையினால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுவருவதாக பல தடவைகள் அரச திணைக்களத்திடம் எடுத்துரைத்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையிலேயே அத்துமீறிய மீனவர்களை உள்ளூர் மீனவர்கள் பிடித்து பொலீசாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

# குருந்தூர்மலை: பொங்கல் வழிபாட்டிற்கு தடையில்லை–தொல்லியல் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவிப்பு

- நடராசா லோகதயாளன்





தமிழர்கள் பன்னெடுங்காலமாக வழிபட்டுவந்த குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் கோவிலில் அண்மைய காலமாத்தில் அவர்கள் அங்கு சென்று தமது வழிபாடுகளை செய்வதற்கு தொல்லியல் திணைக்களம் மற்றும் இராணுவம் ஆகியவை பெரும் நெருக்கடிகளை அளித்து வந்தன.

அந்த இடம் ஒரு தொல்லியல் பூமி, அங்கு பௌத்த மத சின்னங்கள் காணப்படுகின்றன என்று கூறி அந்த கோவிலுக்கு செல்லும் பாதைகளை மறித்து அங்கு தமிழ் மக்கள் செல்வது தடுக்கப்பட்டிருந்தது. மேலும் அங்கு ஒரு பௌத்த விகாரையும் நீதிமன்ற உத்தரவையும் மீறி கட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீதிமன்ற கட்டளையை மீறி குருந்தூர் மலையில் கட்டடங்களை கட்டியமைக்காக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முல்லைத்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்ததற்கு அமைவாகவே நகர்த்தல் பத்திரம் மூலம் நடைபெற்று கொண்டிருந்த குறித்த வழக்கு செவ்வாய்க்கிழமை (8) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகளின் பின்னர் சட்டத்தரணி தனஞ்சயன் கருத்து தெரிவிக்கும் போது: “குருந்தூர்மலை வழக்கானது முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டது. கடந்த தவணையிலே பொங்கல் உற்சவம் ஒன்றினை ஆதி ஐயனார் ஆலயத்திலே செய்ய முற்பட்டவேளை தொல்லியல் திணைக்களத்தினாலும், சகோதர மொழி பேசுபவர்களாலும் தடுக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றது. அது தொடர்பாக நகர்த்தல் பத்திரம் ஊடாக அந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்கு நாங்கள் கொண்டுவந்தோம்”.

அது தொடர்பாக பதிலளிப்பதற்காக தொல்லியல் திணைக்களத்திற்கு தவணை வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது தொல்லியல் திணைக்களம், சட்டமா திணைக்களத்தினுடைய அரச சட்டத்தரணி ஊடாக தோன்றியிருந்தார்கள் என்றார் தனஞ்சயன்.

இனி எக்காலத்திலும் தமிழ் மக்களின் வழிபாட்டிற்கு எந்த பாதகமும் ஏற்படுத்தபப்பட மாட்டாது என்று தொல்லியல் திணைக்களம் சார்பில் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. “அங்கே சைவ மக்கள் பொங்கல் பொங்கி வழிபடதடை செய்யவில்லை என்றும், எதிர்காலத்திலும் அவ்வாறான பொங்கல் நிகழ்வு நடைபெற்றால் அதற்கு பாதகமாக நடக்க மாட்டோம்” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஆலய பரிபாலனசபை மக்கள் சார்பாகவும், ஊர்மக்கள் சார்பாகவும், முல்லைத்தீவு மாவட்ட சட்டதரணிகள் பலரும், ஜனாதிபதி சட்டத்தரணிகள் உள்ளடங்கலாக பல சிரேஸ்ட சட்டத்தரணிகள் ஆதிசிவன் ஐயனர் ஆலயம் சார்பாக இந்த வழக்கில் முன்னிலை-யாகியிருந்தனர்.

கடந்த சில வாரங்களிற்கு முன்னர் தமிழ் மக்கள் அங்கு பொங்கல் வைத்து வழிபடச்சென்ற போது அது தடுக்கப்பட்டு, இராணுவம் மற்றும் பொலிசாரால் தமிழ் மக்கள் தாக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் கானொளிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

இது தொடர்பான மேலதிக கட்டளைக்காக இந்த வழக்கானது எதிர்வரும் 31.08.2023க்கு நியமிக்கப் பட்டிருக்கின்றது.

# கடந்தவையும் கடப்பவையும் (66)

போகும் இடமெல்லாம் புலம்புவதே வேலையென - முன் நடந்த
ஏதும் தெரியாதோர் கதைப்பதையும் கேட்டபடி

பொல்லாத பசியோடு போனவர்கள் பின் - ஏதும்
சொல்லாமல் தொடர்ந்து செல்ல வந்தது

வெளிநாட்டுப் பெயர் கொண்ட உணவகம் - அன்று
களியாட்டம் நடப்பது போல் அலங்காரம் - உணவகத்தின்

பெரும் பகுதி அவர்களுக்கு தனியாக,
மீதமான பகுதியிலே எங்களைப்போல் வந்தவர்கள்

நீண்ட நேரக் காத்திருப்பு அங்கிளுக்கு
தீண்டியது ஆத்திரத்தை என்பதுவாய் தொடங்குகிறார்

‘இடுப்பில் வளைவுமில்லை அரைவாசிக்கு மேலுள்ளோர்க்கு
முகட்டில் முடியுமில்லை பள்ளிப் பிள்ளைகள் போல் சீருடை

ஆண்டின் அடிப்படையில் ஒருகூட்டம் - இருக்க
வேண்டாம் என்றோ அன்றி இருக்க முடியாமலோ போன

ஊரின் பொயர்களிலும் பல கூட்டம் - இன்று
பாரில் பெரியவர்கள் ஆகியுள்ளோம் என்பவர்கள்

தங்களுக்குள் தனிக்கூட்டம் பற்பல
எங்களூரில் பெருகிப் போச்சு தெரியுமே’ என்றவரின்

வார்த்தைகளுக்கு பதில் கூற வசமாக
மாட்டியது பக்கத்தில் இருந்த அப்பாவிதான் - என்றோ

சட்டம் படித்தவராம் அங்கிள் சட்டென்றுகதைத்தால்
வெட்டியும் பேசிடுவார் வில்லங்கம் ஆனவர்

‘உங்களுக்கு தெரியாத்தா போராட்ட காலத்திலே திக்குத்திக்காய்
எங்கெங்கோ போனவர்கள் சேரக்கூடிய காலமொன்றில் சேர்கிறார்கள்

இணையத்தின் உதவியுடன் இலகுவாக இனங்கண்டு - இன்பமான
தருணமொன்றை அமைக்கிறார்கள் இதுபோல’ என்ற போது

‘இதுவெல்லாம் தேவையில்லா வேலையென்று நினைக்கின்றேன்
இது வேண்டுமென நீர் நினைத்தால் காரணத்தைக் கூறும்’ என்றார்

ஏர்ப்பாரோ தெரியாது என்றாலும் மனதில் பட்டதை - முகத்தை
பார்த்தவாறே ஒன்றொன்றாய்ச் சொல்லுகின்றேன்

போராட்ட காலத்தில் எத்தனை இடப்பெயர்வு
ஊரூராய் திரிந்ததனால் கனகாலம் காணாமல் போனவர்கள்

இயக்கத்துக்குப் போறேன் என்று இந்தியாவோ அன்றி
கனக்கக் காசுகட்டி இங்கிலாந்து போனவர்கள்

எள்ளோடு சேர்ந்த எலிப்புழுக்கை போல
உள்ளூரில் இருந்ததனால் புலிகளென பூஸா போய்

உயிருடன் திரும்பி வந்த - இறைவனின்
கருணையினை அதிகளவில் பெற்றவர்கள் - பல

தொல்லைகள் மத்தியிலும் பல்கலைக்குப் போய்
நல்லபடி கல்வி கற்று வந்தவர்கள் - நல்ல

வேலைதேடி வெளிநாடு போன பின்பு
நிலையான வாழ்வொன்றை அங்கேயே அமைத்தவர்கள்

உள்ளூரில் நல்லவேலை செய்கின்றோம் என
எந்நாளும் பெருமைக்கு உரியவராய் வாழ்பவர்கள் - பள்ளி

வாழ்வை இடையிலே தொலைத்து வீட்டுக்காரரின்- நல்
வாழ்க்கைக்காக இளமையை இழந்து

முதுமையின் முதற்படியில் வாழ்வமைத்து - பல
புதுமையான நோய்களுக்கு இடங்கொடுத்து
வாழ்பவர்கள் - எல்லோருக்கும்

வலைத்தளம் கொடுத்தது இந்த ஒன்று கூடல் இது
நல்லதுதான் ‘என்று சொல்ல - அப்பவும்
இளக்காரமாகவே சிரிக்கிறார் அவர் ......

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

இலங்கை செய்திகள் Sri Lanka News

# 13வது சீர்திருத்தம் குறித்து ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பிய தமிழ் கட்சிகள்

பு. கஜிந்தன்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு தமிழ் கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றினை திங்கட்கிழமை (07) அனுப்பியுள்ளன. அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,


පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

August 7, 2023

His Excellency Ranil Wickremasinghe
President of Sri Lanka
Presidential Secretariat, Colombo 01

Sir,

RE: SUBMISSION OF VIEWS AND PROPOSALS ON IMPLEMENTATION OF 13A

We are an Alliance that comprises of five political parties, refer to your letter Ref PS/PCA/03-iii dated 2nd August 2023 regarding the above and wish to present our views as follows

1. The 13A had already been incorporated in to the constitution in 1988 with the 5/6th majority in the Parliament
2. Since then Provincial Councils had been established in the entire country, elections held and functioned until dissolved for holding elections
3. Therefor it is not necessary to invite for views to implement what is already available and being part of the constitution.

However certain Provincial Council powers vested under 13A had systematically been withdrawn periodically from time to time.

We propose to re instate those powers withdrawn from Provincial Councils and implement the 13A in its original form with Land, Police, Finance and Administrative powers.

A. Adaikalanathan MP D. Siththarthan MP

For and on behalf of the Alliance (Constituted by Tamil Eelam Liberation Organization - TELO, Democratic People's Liberation Front - DPLF, Eelam People's Revolutionary Liberation Front - EPRLF, Tamil National Party - TNP and Democratic Crusaders Party - DCP)

மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க
இலங்கை ஜனாதிபதி
ஜனாதிபதி செயலகம், கொழும்பு 01

ஐயா

13A ஐ செயல்படுத்துவது குறித்த கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல் சம்பந்தமாக நாங்கள் ஐந்து அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டணியாக மேற்கூறியவை தொடர்பாக உங்கள் Ref PS/PCA/03-iii 2023 ஆகஸ்ட் 2 தேதியிட்ட கடிதத்தை மேற்கோள் காட்டி, எங்கள் கருத்துக்களைப் பின்வருமாறு முன்வைக்க விரும்புகிறோம்.

1. ஏற்கனவே 1988 இல் பாராளுமன்றத்தில் 5/6 பெரும்பான்மையுடன் 13A அரசியலமைப்பில் இணைக்கப்பட்டது.

2. அன்றிலிருந்து நாடு முழுவதிலும் மாகாண சபைகள் நிறுவப்பட்டு, தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்தலை நடத்துவதற்காகக் கலைக்கப்படும் வரை செயல்பட்டன.

3. எனவே ஏற்கனவே இருக்கின்றதானதும் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக இருப்பதையும் நடைமுறைப்படுத்துவதற்கு கருத்துக்களை கோர வேண்டிய அவசியமில்லை.



எவ்வாறாயினும், 13A இன் கீழ் வழங்கப்பட்ட சில மாகாண சபை அதிகாரங்கள் திட்டமிட்ட வகையில் காலத்திற்கு காலம் அவ்வப்போது திரும்பப் பெறப்பட்டன.

மாகாண சபைகளில் இருந்து மீளப் பெறப்பட்ட அவ் அதிகாரங்களை மீண்டும் வழங்கி, காணி, பொலிஸ், நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்களுடன் 13A ஐ அதன் அசல் வடிவில் நடைமுறைப் படுத்த நாங்கள் முன்மொழிகிறோம்.

அ. அடைக்கலநாதன் பா.உ த. சித்தார்த்தன் பா.உ

கூட்டணிக்காகவும் அதன் சார்பாகவும் (தமிழ் ஈழ விடுதலை இயக்கம் - TELO, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி - DPLF, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - EPRLF, தமிழ்த் தேசியக் கட்சி - TNP மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி - DCP) என்றுள்ளது.

# மாணவர் துஷ்பிரயோகம் — ஆசிரியருக்கு 14 நாட்கள் விளக்கமறியல் — மற்றுமொரு பிரதிவாதியான அதிபருக்கு சரீர பிணையில் விடுவிப்பு

(08-08-2023)

அரச பாடசாலை ஒன்றில் மாணவன் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸில் சரணடைந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.


குறித்த வழக்கு திங்கட்கிழமை (7) சம்மாந்துறை நீதிமன்ற நீதவான் ரி. கருணாகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் பிரதான சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியருக்கு 14 நாட்கள் விளக்கமறியலும் இரண்டாவது பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள பாடசாலை அதிபரை தலா ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் உடற்கல்வி ஆசிரியராக செயற்பட்டு வந்துள்ள சந்தேக நபர் கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி விளையாட்டு அறையில் வைத்து பாலியல் ரீதியாக மாணவனை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்த முயற்சித்ததாக தெரிவித்து ஆகஸ்ட் 2 ஆம் திகதி அம்மாணவன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் தலைமைமறைவாகி இருந்த சந்தேக நபரான ஆசிரியர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (6) மாலை தனது சட்டத்தரணி ஊடாக பொலிஸில் சரணடைந்த நிலையில் சந்தேக நபரை நிந்தவூர் பொலிஸார் திங்கட்கிழமை (07) சம்மாந்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

குறித்த சம்பவம் இடம்பெற்று மறுநாள் பாதிக்கப்பட்ட குறித்த மாணவன் அதிபரிடம் முறையிட்டுள்ளதுடன் இரு வாரங்கள் கழிந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மூடி மறைப்பதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஊடகங்களுக்கு பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பாடசாலையின் அதிபராக ஏ. அப்துல் கபூர் என்பவரும் உடற்கல்வி ஆசிரியராக 47 வயது மதிக்கத்தக்க ஏ. பைஸர் என்பவரும் செயற்பட்டு வந்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.


Zonal Education Office - Kalmunai

MR. A. FAIZER
KM/KM/AL ASHRAQ M MAHA VIDYALAYA (NS).
NINTAVUR

ஆசிரியர் தற்காலிக இடமாற்றம்

197604700783
HEALTH & PH.ED
DIPLOMA(NCOE)
54018

இடமாற்றம் பெறும் பாடசாலை : KM/KM/AL-AKSHA MM VIDYALAYA, NATPADDIMUNAI

PRINCIPAL, KM/KM/AL ASHRAQ M MAHA VIDYALAYA (NS).
PRINCIPAL, KM/KM/AL-AKSHA MM VIDYALAYA

# விவசாய கற்கை நெறி பிரிவினரால் வேளாண்மையின் அறுவடை விழா





(8-8-2023)

அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியின் விவசாய கற்கை நெறிப்பிரிவினரால் கல்லூரி வளாகத்தில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மையின் அறுவடை விழா கல்லூரியின் பதில் அதிபர் எம்.எம். ஹசனின் தலைமையில், கல்லூரியின் பதிவாளர் எம்.ஏ.சி.எம். றகீப்பின் பிரசன்னத்துடன் செவ்வாய்க்கிழமை (8) வெகு விமர்சையாக நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. எம்.எம். சித்தி பாத்திமா அவர்கள் கலந்து கொண்டு நெல் அறுவடையை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் கல்லூரியின் வர்த்தக் பிரிவுத் தலைவர் எம்.எஸ். எம். றாபி, தகவல், தொழில் நுட்ப போதனாசிரியர் எம்.பி.எம். சிராஜ், விவசாய கற்கை நெறியின் புறப்போதனாசிரியர் எம்.ஐ.எம். நசீர், விவசாயத் திணைக்களத்தின் ஓய்வு நிலை கிழக்கு மாகாணப் பணிப்பாளரும், கல்லூரியின் முன்னாள் விவசாய கற்கை நெறியின் புறப்போதனாசிரியருமான வை.பி. இக்பால் போன்றோரும் கலந்து கொண்டு நெல் அறுவடையை மேற் கொண்டதுடன், விவசாய கற்கை நெறியின் விடுகை மாணவ, மாணவிகளும், புதிய மாணவ, மாணவிகளும், கைதேர்ந்த விவசாயிகளும் கலந்து கொண்டு அறுவடையை மேற் கொண்டதுடன், மாணவர்களால் விவசாயப் பாட நெறி தொடர்பாக விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

# குடும்ப பெண்ணிற்கு பாலியல் தொந்தரவு கொடுத்த சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கைது

(8-8-2023)

அம்பாறை மாவட்டத்தில் குடும்ப பெண்ணிற்கு தையல் மெசின் உட்பட சலுகைகள் பல தருவதாக கூறி பாலியல் தொந்தரவு மேற்கொண்ட சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் வசிக்கின்ற 2 பிள்ளைகளின் தாயான குடும்ப பெண்ணிடம் பல சலுகைகளை பெற்று தருவதாக ஆசை வார்த்தைகள் கூறி பாலியல் சேட்டை செய்து வந்த சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்பான முறைப்பாடு ஒன்று திங்கட்கிழமை (7) கிடைக்கப்பெற்றிருந்தது.

இதற்கமைய சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எம்.ஐயூப் தலைமையிலான பொலிஸார் விசாரணை மேற்கொண்டு சந்தேக நபரான 41 வயது மதிக்கத்தக்க சாய்ந்தமருது பிரதேச செயலக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை கைது செய்துள்ளனர்.

மேலும் சந்தேக நபரான சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பல்வேறு திருமணங்கள் மேற்கொண்டுள்ளதுடன் இவ்வாறு பல்வேறு கணவன் அற்ற பெண்கள் மற்றும் தனிமையில் உள்ள பெண்களை நாடி தனது இச்சைக்காக ஆசை வார்த்தைகளை கூறி பாலியல் இலஞ்சம் பெற்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.




கைதான சந்தேக நபரை செவ்வாய்க்கிழமை (8) கல்முனை நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# "Ranil Hoodwinking Tamil and Sinhala People at the Same Time Over 13A"

- by Siva Parameswaran

President Ranil Wickremesinghe has come in for sharp criticism and condemnation from Tamil political parties of double standards and hoodwinking both the Tamil and Sinhala people over his special statement on the 13th Amendment in Parliament on Wednesday (9).

The idea "Let's collectively advance the 13th amendment to the Constitution for the betterment of the nation" by the president has been dismissed by the Tamil parties.

Jaffna district MP and senior Tamil lawmaker Sivagnanam Sirithарn says the 13th amendment is enshrined in the constitution and there is no reason why it should be so much debated and it just needs implementation in full.

"If what's in the constitution is not implemented it amounts to contempt of the law book which is the guiding spirit of the country. How can something which is in the Constitution be denied? This is clearly a racist mindset of denying power devolution to the Tamils".

The Tamil National People's Front (TNPF) too has decried the position of the government and has said the 13th Amendment is not a solution to the Tamil ethnic question and devolution of powers. TNPF in a statement signed by both MPs from Jaffna, Gajendrakumar Ponnambalam and Selvarasa Kajendren has reiterated their rejection of the 13th amendment.

"Our organization refuses to accept the 13th Amendment as even a starting p oint to negotiations and insists that if negotiations are to be serious and honest, then the leaders of the Sinhala Nation must tell her people that, a solution can only be accepted by going beyond the Unitary state structure and considering a federal structure and at the same time seeking to constitutionally ensure the unity of the country".

Although not a member of a Tamil political party, Suren Raghavan a National list MP of the ruling bloc said in parliament "The president is committed to implementing 13A in full if the Tamil parties come with one voice"

However, successive Sri Lankan government including the present one under Ranil Wickremesinghe have not taken forward the full implementation of the amendment which ensures devolution of powers to the provinces, in spite of assuring it time and again.

President Wickremasinghe recently said his discussions with the Tamil parties was a failure and police powers as assured in the amendment which is part of the constitution.

Tamils have repeatedly said by not fully implementing all the aspects incorporated in 13A in full they are being denied their rights granted under the constitution.

Sivagnanam Siritharan while recalling 13A grants full powers regarding land and police powers along with health and education.

"By seeking the cooperation of all to implement what's already in the constitution, the President is trying to relate irrelevant things. Instead of straight away implementing the law, by saying the support of all is needed, he is sending a message to the Sinhala masses, racist Sinhala-Buddhist elements and the core vote bank keeping an eye on the likely presidential election in November. At the same time some Tamil people too think Ranil Wickremesinghe is liberal, talented and good at heart and will do all the things. On that basis they may be inclined to vote for him".

He further adds that the present president in order to cement his role as the president in the next election has now taken up 13A as a tool to further his electoral prospects.

"Saying that neither he nor the Sinhala people, Sinhala nationalists are in favour of the police powers it is clear that is enacting part of a larger drama to hoodwink everybody. The whole world used to say the most wily fox in Sri Lanka was J.R. Jayawardane and after him his nephew Ranil Wickremesinghe. And now as a cunning fox, he has taken up 13A".

Adding further the Jaffna district MP says Sinhala leaders including Udaya Gammanpila, Wimal Weerawansa and grassroots Sinhala nationalists are against implementing the 13A and never wanted the issue to be solved.

"Their only intention is to oppress and rule over the Tamil people and want continuous bloodshed in Sri Lanka and want the issue to be alive".

Concurring with the strong comments of his colleague, leader of the Tamil Progressive Alliance and Colombo district parliamentarian Mano Ganesan questioned the stand of the government about 13A, which is being backed by the party of Mahinda Rajapaksa.

"Earlier Mahinda Rajapaksa as president said he is prepared to go beyond 13 and spoke about 13 plus. But his successors although not going with what he said and not granting what is in the governing law book of the nation now speak about 13 minus. This is an affront to the Tamils".

But President Wickremesinghe in his special statement said if the nation is to progress, problems must be addressed. However, there was a catch:

"The 13th Amendment needs to be implemented in a manner that aligns with our country's development and future. This can only be achieved if all parliament members come to a consensus after thorough and open-minded discussions".

He clearly knows there won't be consensus in this matter with 'Sinhala racist' members already expressed their opinion against it. Also, he said a comprehensive arrangement on power devolution could not be arrived at.

Knowing well what the opposition views are he added, "Let's also abstain from making decisions without considering opposition viewpoints".

Political analysts say Ranil is very tactfully trying to placate the UN Human Rights Council by painting a picture that the government is serious about addressing the Tamil issue including power devolution on one hand and sending a message to the Sinhala masses that his assurances are just lip service and he is not inclined to implement 13A in full with an eye of his future to retain his role as President in the next elections.

Tamil National Alliance MP and Senior attorney M.A.Sumanthiran questioned him at the last meeting he had with the Tamil parties on power devolution, where the president claimed that Provincial Council elections and power devolution are two different things and wanted to know which one the members wish to discuss first.

Whilst Sumanthiran was emphasizing that both are intertwined Ranil Wickremesinghe disagreed and walked away from the meeting.



# இப்படியும் சீரழிகிறது இலங்கை பொருளாதாரம்

**- நடராசா லோகதயாளன்**

மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கையில், அரச நிதி எப்படியெல்லாம் விரயமாகிறது என்பது பற்றிய செய்திகள் தொடர்ந்து வெளியாகி வருகின்றன.

அரசியல்வாதிகளின் ஊழல்கள், அரச நிறுவனங்களின் மோசமான நிதி மேலாண்மை, வெள்ளையானை போன்ற அளவுக்கு மீறிய இராணுவம் என்று பல வழிகளில் அரச வளங்கள் வீணடிக்கப்படுவதாக பொருளாதார வல்லுநர்கள் கவலைப்படுகின்றனர்.

அனைத்து துறைகளிலும் உள்ள ஓட்டைகளை இலங்கை அரசு விரைவில் அடைத்து, அரச நிதி விரயமாவதை தடுக்கவில்லை என்றால், நாடு மேலும் மோசமான நிலைக்குச் சென்று, அதிலிருந்து மீள முடியாத நிலை ஏற்படும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

அவ்வகையில் வவுனியாவில் எப்படி அரச வளங்கள் வீணடிக்கப்படுகின்ற என்பது தொடர்பிலான செய்தி ஒன்று இப்போது கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இயங்காத பொருளாதார மத்திய நிலையத்திற்கு 5 ஆண்டுகளாக பாதுகாப்புக் கட்டணம் மற்றும் சுத்திகரிப்புக் கட்டணமாக 58 லட்சத்து 65 ஆயிரத்து 128 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

அந்த மாவட்டத்தில் நீண்ட சர்ச்சையின் மத்தியில் 2018ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் இன்றுவரை பாவனையின்றி உள்ளது. இவ்வாறு பாவனையின்றிக் காணப்படும் மத்திய நிலையமானது 29 கோடியே 16 லட்சத்து 39 ஆயிரத்து 356 ரூபாவில் அமைக்கப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்ட கட்டிடம் இன்றுவரை பாவனையின்றி காணப்படுவதோடு அதற்காக 2018 முதல் 2022 வரையான காலப்பகுதியிலேயே மேற்படி தொகை பாதுகாப்பு, சுத்திகரிப்பு மற்றும் நீர்க் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

கட்டுப்பாடற்ற வகையில் செய்யப்படும் இப்படியான செலவினங்களை ஏன் அரசு தடுக்கவில்லை என்ற கேள்விக்கு பதிலளிக்க யாரும் தயாராக இல்லை. இப்படி பல உதாரணங்களை காண முடிகிறது;

அந்த வகையில் மேலும் ஒரு சம்பவமாக வவுனியா மாவட்டத்தில் உத்தியோகத்தராக இருக்கும்போது வழங்கிய அரச விடுதியை ஓய்வு பெற்று 25 மாதங்கள் கடந்தும் மீள ஒப்படைக்கவில்லையென கணக்காய்வில் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் கிளையில் கடமையாற்றி 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்ற ஒருவர் 2023ஆம. ஆண்டிற்கான கணக்காய்வுக் காலம் வரையில் இல்லங்களை ஒதுக்கிக் கொடுக்கும் அதிகாரிக்கு அறிவித்தல் வழங்காததோடு 22 மாதங்களிற்கு மேலான வாடகை நிலுவையினையும் செலுத்தவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு செலுத்த வேண்டிய நிலுவையாக ஒரு லட்சத்து 32 ஆயிரம் ரூபா செலுத்தாமை தொடர்பிலும் மாவட்டச் செயலகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கையிட்டுள்ளது.

சிறு துளி பெருவெள்ளம் என்பது போன்று, இலங்கையில் கணக்கில் வராமலும், கணக்கு காட்டாமலும் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக பல பில்லியன் ரூபா காணாமல் போயுள்ளது என்பது உண்மை. இதுவரை எந்த ஆணைக்குழுவோ அல்லது அரசால் அமைக்கப்பட்ட வேறு விசாரணைக் குழுவோ, அரச வளங்கள் மற்றும் நிதி ஆதாரங்கள் கண்ணுக்கு தெரிந்தும் தெரியாமலும் பல வகைகளில் விரயமாவதை ஏன் தடுக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது.

அது மாத்திரமின்றி இப்படியான ஊழல்கள் எப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் பார்வைக்கு வரவில்லை என்ற வினாவும் மக்களால் கேட்கப்படுகிறது.

உலக வங்கி மட்டுமல்ல, உலகில் உள்ள எல்லா வங்கிகளும் கடனாகவும், உதவியாகவும் எவ்வளவு தான் அள்ளிக் கொடுத்தாலும், இந்த ஓட்டைகள் அடைக்கப்படாத வரை அரசின் நிதிச்சுமை குறையாது என்பதே யதார்த்தமாக உள்ளது.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு விரைவில் தொடக்கம்

**- நடராசா லோகதயாளன்**

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த ஜுன் மாதம் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வு இம்மாதம் 23ஆம் திகதி தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் - கொக்கிளாய் பாதையில் நீர் வழங்கலிற்கு குழாய்கள் பதிப்பதற்காக நிலம் தோண்டப்பட்ட போது, அங்கு போராளிகளின் உடல் எச்சங்கள் என்று சந்தேகிக்கப்படும் உடல் பகுதிகள் மற்றும் ஆடைப் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த தகவல் தெரியவந்தவுடன் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ரவிகரன் மற்றும் சில உடனடியாக அந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

அங்கு பெண்களின் உள்ளாடைகள் காணப்பட்டதால், அங்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண் போராளிகள் புதைக்கப்பட்டிருக்க கூடும் என்ற கவலைகளும் அச்சங்களும் எழுந்தன.

பின்னர் அந்த இடத்தை தோண்டும் நடவடிக்கை நீதிமன்ற உத்தரவிற்கு அமைய இடைநிறுத்தப்பட்டிருந்தது. வழக்கு விசாரணையின் போது அந்த இடத்தின் அகழ்வு தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வையில் செய்யப்படும் என்றும், சட்டவைத்திய அதிகாரிகள் உட்பட இதர திணைக்களத்தினர் இதில் ஈடுபடுவார்கள் என்று முடிவானது.

அதற்கமைய ஒவ்வொரு திணைக்களமும் இந்த அகழ்வுப் பணிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கியுள்ளது என பதை நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டுமென்று முல்லைத்தீவு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.




இதையடுத்து தொடர்புடைய திணைக்களத்தினர் தமது நிலைப்பாட்டை தெரிவித்தனர். மேலும் ஜனாதிபதி அலுவலகம் இந்த அகழ்விற்கான நிதி வளங்களை ஓ எம் பி எனப்படும் காணமல் போனவர்களை தேடுவதற்கான அலுவலகம் ஊடாக வழங்கப்படும் என்று நீதிமன்றில் தெரிவித்தது.

இதே வேளை கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி விடயமாக நீதிமன்றத்தீர்வுக்கமைய நேற்றைய தினம் குறித்த இடத்தை நிபுணர் குழுவினர் பார்வையிடப்பட்டனர்.

இதன்போது தொல்லியல்த் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை எதிர்வரும் 2023.08.17ம் திகதி நீதிமன்றிற்கு சமர்ப்பிப்பதாகவும், அதனையடுத்து 2023.08.21ம் திகதி முதல் மீண்டும் அகழ்வுப்பணி ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் தொடர்ச்சியாகவே பல இடங்களில் மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்டாலும், இதுவரை அவை தொடர்பில் காத்திரமான விசாரணையோ, அல்லது அந்த அகழ்வுப் பணிகள் சர்வதேச தரத்திற்கு நடத்தப்படவில்லை என்று அண்மையில் நான்கு மனித உரிமைகள் அமைப்புகள் இணைந்து வெளியிட்ட அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில், எதிர்காலத்தில் இப்படியான மனிதப் புதைகுழிகள் காணப்படும் போது அதை எப்படி கையாள வேண்டும், அகழ்வுப் பணிகள் எவ்வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரைகளும் அளிக்கப்பட்டிருந்தன.

இதேநேரம் இன்றைய தினம் புதைகுழியை பார்வையிட்ட குழுவில் நீதிபதி பிரதீபனுடன் தொல்லியல்த் திணைக்கள அதிகாரிகள், சட்ட வைத்திய அதிகாரி, பொலிசார் எனப் பலரும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.





# “கிளிநொச்சி மாவட்டத்தின் கடல் எல்லைகளை வரையறுக்க நடவடிக்கை” – கடற்றொழிலாளர்களிடம் சிறீதரன் எம்.பி உறுதி

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டக் கடற்பரப்புகளில், மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் நலன்கருதி அந்தந்த மாவட்டங்களின் கடல் எல்லைகளை வரையறை செய்து, இரு மாவட்ட கடற்றொழிலாளர்களினதும் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பூநகரி பிரதேசத்தின் கௌதாரிமுனை, மண்ணித்தலை, விநாசியோடை உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக, அண்மையில் அப்பகுதிக்கு நேரடியாகச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், அப்பகுதி கடற்றொழிலாளர்களோடு கலந்துரையாடினார்.

அதன் அடிப்படையிலும், அவர்களோடு இணைந்து கௌதாரிமுனை தொடக்கம் கல்முனை வரையான கடற்பரப்பை படகுப்பயணம் மூலம் பார்வையிட்டதன் அடிப்படையிலும், அவர்களது கோரிக்கைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





இந்தியா செய்திகள் India News

# தமிழ்நாடு — ஈரோடு புத்தகத் திருவிழாவில் கனடா உதயன் குழுவினர் — வரவேற்று உபசரித்த நிறுவனத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள்




கடந்த 4ம் திகதி ஆரம்பமான தமிழ்நாடு-ஈரோடு புத்தகத் திருவிழாவில் 8ம் திகதி புதன்கிழமையன்று கனடா உதயன் நிறுவனக் குழுவினர் சென்றுகலந்து கொண்டனர்.

அப்போது மேற்படி புத்தகத் திருவிழா நடத்தும் மக்கள் சிந்தனைப் பேரவையின் நிறுவனத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் உதயன் குழுவினரை வரவேற்று உபசரித்தார். தொடர்நது மாலை 6.00 மணிக்கு நடைபெற்ற நாளாந்த உரையரங்கிற்கும் அவர்களை அழைத்திருந்தார்.



செவ்வாய்க்கிழமை 8ம் திகதி நடைபெற்ற உரையரங்கில் பேராசிரியர் த. இராஜாராம் அவர்களும், கவிஞர் கே. ஜீவபாரதி அவர்களும் முறையே "செய் அல்லது செத்துமடி" "பாரதி வழியில் பட்டுக்கோட்டை" ஆகிய தலைப்புக்களில் உரையாற்றினார்கள்.

மேற்படி இருவரின் உரைகளிலும் இந்திய தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தின் வரலாறு. வெள்ளையர்களை எதிர்த்துப்போராடிய தியாகிகளின் வரலாறு மற்றும் வலிகள் நிறைந்த வாழ்வுக் காலம் ஆகியவற்றை பற்றிய உன்னதமானதும் உணர்வுமிக்கதுமான விடயங்கள் அடங்கியிருந்து எம் கண்களில் கண்ணீர் ஆற்றை வழிந்தோடச் செய்தன.







தலைமையுரையாற்றிய ஸ்டாலின் குணசேகரன் அவர்களுடைய உரையும் எமது உள்ளங்களில் சிந்தனைகளை விதைத்து கம்பீரத்தையும் தோற்றுவித்தன என்றால் அது மிகையாகாது.

# தமிழ்நாட்டின் ஈரோடு நகரில் புத்தகத் திருவிழாவில் நம் தாயகத்தின் தமிழ் அறிஞர் மறைந்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் பெயரில் "உலகத் தமிழர் படைப்பரங்கம்"

## சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட "உதயன்" லோகேந்திரலிங்கம்



கடந்த ஆகஸ்ட் 4ம் திகதி தொடக்கம் எதிர்வரும் 15ம் திகதி வரை தமிழ்நாட்டின் ஈரோடு மாநகரில் நடைபெற்று வரும் புத்தகத் திருவிழாவில் நம் தாயகத்தின் தமிழ் அறிஞர் மறைந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பெயரில் "உலகத் தமிழர் படைப்பரங்கம்". அமைக்கப்பெற்று நடைபெற்ற நூல் அறிமுகவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட "உதயன்" லோகேந்திரலிங்கம் சிறப்புரையாற்றினார்.

நம் தாயகத்தின் தமிழறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பெயரில் "படைப்பரங்கம்" அமைத்த ஈரோடு புத்தகத் திருவிழா நிறுவுனர் ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்கு உலகத் தமிழர்களின் நன்றி!. இன்றைய நூல்அறிமுக விழாவில் கனடா உதயன் வெளியீடுகளாக வந்துள்ள வீணைமைந்தனின் "சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்" மற்றும் பேராசிரியர் சேலம் சங்கர நாராயணன் அவர்களின் "பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்" என்னும் நூலும் அறிமுகம் செய்யப்பெற்றன. அங்கு வருகை தந்திருந்த கல்லூரி மாணவ மாணவிகள் 20 பேருக்கு நூல்கள் இலவசமாக வழங்கப்பெற்றன.





# தமிழினம் கல்வியை கைவிடுவது துர்ப்பாக்கிய நிலை: கலாநிதி ஆறு. திருமுருகன் விசனம்

**- நடராசா லோகதயாளன்**



"எமது இனமே இன்று கல்வியைக் கைவிடுவதானது துர்ப்பாக்கிய நிலை என்பதுடன் அந்நிலையை மாற்றியமைக்க அனைவரும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்" என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சமூகக் கட்டுமானத்தில் சங்கமருவியகால அற இலக்கியங்கள்" எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு திங்கள்கிழமை (7) நடாத்தப்படும் நான்காவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: "தமிழை வளர்ப்பதற்கும் அடுத்த சந்ததிக்குக் கடத்துவதற்கும் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று அற இலக்கியங்கள் பற்றிய சிந்தனை தேவையாகவுள்ளது. அந்த நோக்கிலேயே இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று உலகம் வியக்க திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது அதேபோல் சிலப்பதிகாரமும் உலகளவில் போற்றப்படுகின்றது. எங்கும் எம்மை காப்பாற்றக்கூடியது அறம் தான். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என திருக்குறளில் கூறும் குறளானது எந்தவொரு அரசியல்வாதிகளுக்கும் தேவையான கூற்றாகும்".

கண்ணகிக்கு ஈழத்தில் கோயில் அமைக்கப்பட்டதையும் ஆறு திருமுருகன் சுட்டிக்காட்டினார்.

"கண்ணகிக்கு இந்தியாவிற்கு அப்பால் ஈழத்தமிழர்கள் கோயில் கட்டி வழிபாடு செய்தோம். அறம் பிழைக்கின்ற போதெல்லாம் கண்ணகையம்மன் தண்டிப்பார் என்று அறத்திற்கே கோயில் கட்டி மதிப்பளித்தவர்கள் ஈழத்தமிழர்கள்".

தருக்குறளின் சிறப்பையும் அந்த மாநாட்டின் அவர் வலியுறுத்தி உரையாற்றினார்.

"திருக்குறள் இல்லாமல் தமிழர்கள் இல்லை. இரண்டாயிரம் ஆண்டுக்கு முன் தூது என்ற அதிகாரத்தைப் படைத்து தூது என்றால் என்ன என்பதை உலகிற்கு வள்ளுவன் எடுத்துக்காட்டினார். இந்த நாட்டிலே தூதுக்கு அனுப்பப்படவர்களே காட்டிக்கொடுத்தார்கள். தற்போது அரசியலில் தூதுவர்கள் பலர் செல்கின்றார்கள் நாங்கள் தற்பொழுதும்பிழைத்துக்கொண்டேயிருக்கின்றோம்".

கல்விசார் சமூகமாக பரிமளித்த தமிழ்ச் சமூகத்தில் இன்று மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவது ஒரு எச்சரிக்கை மணியக கருதப்பட வேண்டும் என்று வலியுறுத்திய கலாநிதி ஆறு திருமுருகன், தாய் மொழியை கற்பதும் அதில் புலமையுடன் இருப்பது அவசியம் என்றார்.

"தமிழ் மாணவர்களின் தொகை குறைந்துகொண்டு செல்கின்றது என பேராசிரியர் பத்மநாதன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார். யப்பான், கொரியா மற்றும் சீனா போன்ற நாடுகள் தன் மொழியால் தான் முன்னேறியது. ஆங்கிலத்தை அறிவுக்காக படியுங்கள் அதற்காக தாய் மொழியை உதாசீனப்படுத்தக்கூடாது".

இலங்கையின் வரலாற்றை உற்று நோக்கும் போது தமிழர்கள் கல்வியில் உயர்ந்த நிலையிலேயே இருந்துள்ளனர் என்பதை குறிப்பிட்ட அவர், தற்போது அவர்கள் கல்வியை கைவிடுவது குறித்து தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டார்.

"எமது இனமே இன்று கல்வியைக் கைவிடுவதானது துர்ப்பாக்கிய நிலை. எனவே இந்நிலையை மாற்றியமைக்க அனைவரும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். காப்பியங்களை அத்தனை தமிழர்களும் படிக்க வேண்டும். தற்பொழுது அது பற்றி எவரும் தேடுவதில்லை. அரிய காப்பியங்களை இளைய தலைமுறைகள் படிக்க வேண்டும்".

# ஆடிப்பிறப்பு

## (நேரிசை ஆசிரியப்பா)

— — — — — — — — — —

ஆடிப்பிறப்பு (நேரிசை ஆசிரியப்பா)
ஆடிப் பிறப்பு அருமைத் திருநாள்
பாடி ஆடியே பரவசம் கொண்டோம்
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடித்தோம்
தேடிக் கொழுக்கட்டை திகட்டத் தின்றோம்
நவாலி ஊரின் நல்ல கவிஞன்
நவின்றார் நமக்கொரு நல்ல கவியை
சோம சுந்தரச் சோதி நாயகன்
தாமம் போன்றொரு தங்கத் தாத்தா
அறிந்தவன் அறிவான் அரியலூர் பனாட்டை
உறிஞ்சியே உணர்வான் ஊதுபாற் கூழை
அந்நாள் நினைத்தால் அடிவயி றேங்குது
சொந்த நாடுபோய்ச் சுவைத்துக் குடிக்கவே!
நாடு விட்டு நாடு வந்தோம்
வீடுவாங்கி விலாசமாய் வாழ்ந்து காட்டுறோம்
நாகரீகம் நாங்கள் நன்றே கற்றோம்
வேகமாய் விட்டோம் விசேட நாட்களை
வேலை தொடங்க வேகமாய் ஓடுறீர்
காலை மாலை கடும்பணி செய்கிறீர்
ஒருநாள் ஏனும் ஓய்ந்து
திருநாட் கூழைத் திகட்டக் குடிப்போமே!
(தாமம் – – – – ஒளி)

— — — — — — — — — —

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453



# இலையுதிர் கால நிகழ்ச்சி நிரலுக்கான பதிவு ஆகஸ்ட் 15ம் திகதி தொடங்குகிறது!

## இலையுதிர் கால நிகழ்ச்சி நிரல் தொடர்பான தகவல் மற்றும் பதிவு புதிய நிகழ்ச்சி நிரல் பதிவுகளுக்கான அமைப்பில் உள்ளது

## நீங்கள் இணைந்து விட்டீர்களா?

**ஆகஸ்ட் 1** இலையுதிர் கால நிகழ்ச்சி நிரலைப் பார்வையிடலாம்

**ஆகஸ்ட் 15** இலையுதிர் கால பொதுவான நிகழ்ச்சி நிரலுக்கான பதிவுகள் ஆரம்பம்

**ஆகஸ்ட் 22** இலையுதிர் கால நீச்சல் பாடங்களுக்கான பதிவுகள் ஆரம்பம்




ஏற்கனவே உங்கள் கணக்கை தொடங்கிவிட்டீர்களா? உங்கள் பெயர் மற்றும் விலாசம் முழுமையாக பதிவு செய்யப்பட்டதா என்பதை இருமுறை சரிபார்க்கவும். அல்லாது போனால், ஆகஸ்ட் 15 அன்று வசிப்பவராக நீங்கள் பதிவு செய்ய முடியாது!

இது தொடர்பான படிப்படியான வழிமுறைகள் **How to Create an Account** மற்றும் **How to Register for Programs** ஆகிய தலைப்புகளுக்கு கீழ் தமிழ் மொழியிலும் காணப்படுகின்றன.



markham.ca/RegisterNow

MARKHAM

## கனடா-பிரம்ரன்

# அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய ஆடிவேல் விழா 2023

## 22வது வருடமாக நடைபெறும் தங்கரதப் பெருவிழா




எதிர்வரும் சுபகிருது வருஷம் August மாதம் 10,11,12ம் திகதிகளில் 22வது தடவையாக நடைபெறுகின்ற ஆடிவேல் பெருவிழா திருவருள் கைகூடியுள்ளது.

3 தினங்கள் 10,11,12ம் திகதிகளில் முருகப் பெருமானுக்கு அபிஷேகமும் விஷேட தீபாரா தனைகளும் பக்தி பூர்வமாக இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும் . 3வது நாளாகிய 12ம் திகதி சனிக்கிழமை மாலை 5:00 மணிக்கு முருகப் பெருமானுக்கு அபிஷேகமும் தொடர்ந்து திருவூஞ்சலில் எழுந்தருளி விஷேட தீபாரா தனையும் சண்முக அர்சனையும் , பின்னணிப்பாடகர் கரிகரசுதன், வர்ஷா, ராஜகணபதி, றம்மியா, மகிஷா, பிரபா மற்றும் கனேடிய சிறப்புக் கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கின்ற நிகழ்வுகளும், மயில்நாட்டிய உபசாரத்தோடும் 20 க்கு மேற்பட்ட இலங்கை இந்திய நாதஸ்வர தவில் இசையோடு அழகிய மின்விளக்குகளினால் அலங்கரிக்கப் பட்ட தங்கரதத்தில் வீதி உலா வந்து வடக்கு வீதியில் சிறுவர்களை கொள்ளை கொள்ளும் வாண வேடிக்கைகளோடும் சண்முகப் பொருமான் பிராயச்சித்த அபிஷேகத்தோடு ஆடிவேல் பெருவிழா பூர்த்தியாகும். அனைவரும் கலந்து கொண்டு சண்முகப் பெருமானின் நல்லருள் பெற்று உய்வீர்களாக.

முக்கிய குறிப்பு ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி ஆடி அமாவாசையும் ஆகஸ்ட் மாதம் 21ஆம் தேதி நாராயணப் பெருமாளின் அலங்கார உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்தினெட்டு தினங்கள் சிறப்பாக நடைபெறும் 5ஆம் நாளாக ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி வரலட்சுமி விரதம் ஆலயத்தில் காலை மாலை சிறப்பாக நடைபெறும்

200 Advance Blvd, Brampton, ON L6T 4V4 | Tel: (905) 458-9701 | (416) 471-0255 | www.srikatpagavinayagar.ca | www.srikatpagavinayagar.com

இங்ஙனம் தேவஸ்தான தர்மகர்த்தா கணகுக சிவத்தொண்டன் இரா விஜயநாதன்


பிரதான அனுசரணை
SECURITY CAMERA SALE
350
CRIMES ARE ON THE RISE IN YOUR NEIGHBORHOOD.
IS YOUR PROPERTY PROTECTED?
CAMSONICS
647.302.5748 www.camsonics.com
கனடா-பிரம்ரன் அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயத்தின்
13 AUGUST
பின்னணிப்பாடகர்
கரிகரசுதன்
றம்மியா
ராஜகணபதி
பிரபா
வர்ஷா
மகிஷா
ஆலயத்தில் ஆடிவேல் விழா 10,11,12 ம் திகதிகளில் நடைபெறும்
ஆடிவேல் இசை மாலை 2023
ஆடல், பாடல், இசை நிகழ்ச்சி
PRIMA DANCE SCHOOL
Mega Tunes
For Tickets Call:
Sri Katpaga Vinayagar Hindu Temple
(905) 458-9701 (416) 471-0255
John Paul Polish Cultural Centre 4300 Cawthra Rd, Mississauga, ON L4Z 1V8 (Cawthra Rd & 403)
GOLD SPONSOR
MARKAN LAW OFFICE
VINEET MARKAN
Barrister, Solicitor & Notary Public
Tel:(647) 871 8200
Fax:(647) 649 8900
info@markanlawoffice.com
www.markanlawoffice.com
366-7111 Syntex Drive
Mississauga, ON L5N 8C3
Dr. Sabapathy Raveendran
BDS, MS, FDSRCS (ENGLAND)
DENTAL PRACTITIONER
Scarborough Dental Office
(Morningside & Sheppard)
1139 Morningside Ave, suite 25
Scarborough, ON
416-283-9000
Mississauga Dental Office
(Dundas & Hurontario)
102-3025 Hurontario St.
Mississauga ON
905-270-7844
IATA TICO JetSpeed TRAVEL
Murali Mahalingam
Travel Consultant
5800 Sheppard Ave, East, Suite #12
Scarborough, ON M1B 5J7
Tel: 416-609-0544
Fax: 416-332-0082
Toll Free: 1-877-337-7333
E.Mail: murali@jetspeedtravels.com
www.jetspeedtravels.com
JST
SILVER SPONSOR
100% VEGETARIAN ALWAYS FRESH
Open 7 Days A Week
Vinayagar Vilas
Take Out & Catering
905-796-2411
416-648-9898
85 Kennedy Rd S. Unit 31, Brampton, ON, L6W 3E7
Gaya Photos
Everlasting Memories... Gayaphotos
For all your special occasions...
Pathy.S
Professional Photographer
Bus: (416) 902-3542
Email: gayaphotos@hotmail.com
4339 Lee Drive, Mississauga, ON L4W 4X9
MAK TAX
ACCOUNTING SERVICES INC.
Year Round Guaranteed Services
Accounting & Book Keeping
Income Tax Preparation
Payroll, HST & WSIB
Business Registration
Mohan Thava
CEO
Tel: 647-435-1087 Cell: 416-407-3620
Suite 203-4900 Sheppard Ave.East, Toronto, ON, M1S 4A7
web: maktaxservices.com email: mohan@maktax.ca
HOMELIFE
SRI VILVARATNAM
SALES REPRESENTATIVE
647-982-7884
srihomelife@gmail.com
SRIGTAHOMES.COM
VIA REALTY INC.
Waran S. Nathans
416.321.9400
905.502.6667
416.823.7976
416.321.2011
viarealty.ca
H&M FINANCIAL
For All Mortgages And Loan Needs ...
Proud Member of
IMBA
Suresh Tharmalingam
www.sureshfund.com
sureshfund1@gmail.com
Direct: 416 801 3863 (FUND)
Fax: 1 855 801 3863 (FUND)
THAKSHA TAILORS
Professional tailoring in saree blouses and chudidars
Rani Kumar
905 270 5126
647 857 3435
3065 # 802 Queen Frederica Dr
Mississauga Ontario L4Y 3A3
(Dixie & Dundas)
MARK FLORIST
For all your floral Requirements
M.Kumar
Tel: 905-477-0047
Cell: 416-728-7784
289 Elson St. Unit #7
Markham ON. L3S 3L1
(Markham & Elson)
markflorist1@hotmail.com
Bringing Your Dreams To Life!
Mahesan Subramaniam
416-816-0141
eXp REALTY
Free Home Evaluation with No Obligation
IPTV HD
$7.99
7000+ Live Channels
20000+ Movies
SPORTS-PPV-NEWS-TV SHOWS
647-401-4000
Punjabi - Hindi - English - Urdu - Tamil
Malayalam - Arabic - Carribean & More
Kennedy Convention Centre
BANQUET HALL
416.402.6666
FAROOQ RASHID
Barrister & Solicitor
T: 905-405-0777; F: 905-405-8777; C: 416-616-1591
e-mail: farooqlawoffice@gmail.com
19B-7895 Tranmere Drive,
Mississauga, ON L5S 1V9
F R Law Firm Professional Corporation
AL MARKET
Tel : 416 267 5551
Fax: 416 267 5578
SPECIAL ATTENTION ON YOUR SPECIAL OCCASSION
For Any Events
JAY
416 898 1999
647 692 0 629
Infiniti Banquet Services
நந்தா NANTHA CATERS
416 NANTHA1(626-8421)
Brimley & Steeles 4915 Steele
Warden & Finch 3268 Finch Ave, E.
Kippling & Steeles 5010 Steeles Ave.W
905.565.1050
Inderbir S. Arora
Barrister & Solicitor
ARORA LAW
info@aroralaw.com
7895 Tranmere Dr., Unit 18, Mississauga, ON, L5S1V9


SULLIVAN AUTO GROUP'S
Tamil Fest
தமிழர் தெரு விழா
2023
POWERED BY
iConnect Mortgages
FREE ADMISSION!
AUGUST
26 & 27
TAMIL FEST 2023
MARKHAM RD
(BETWEEN MCNICOLL AVE. & PASSMORE AVE.)
Largest Tamil Street Festival outside of Asia
FOR MORE INFORMATION PLEASE CONTACT THE CANADIAN TAMIL CONGRESS AT
416-240-0078
INFO@CANADIANTAMILCONGRESS.CA
WWW.TAMILFEST.CA
TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
Formula Honda
POWERED BY
iConnect Mortgages
HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
SUPPORTED BY
Canada
TORONTO
MARKETING PARTNER
PRINT FAST
ZONE SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE
NAVA WILSON LLP
PRADON
TD
VIBRANT HOSPITALITY GROUP
WOW! WING
MEDIA SPONSORS
ATN
CASI
metroland

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை விசாரணை என்ற போர்வையில் ஓ.எம்.பி அலுவலகம் அழைத்து வேடிக்கை பார்க்கின்றது

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா

- மன்னார் நிருபர் (8-8-2023)



மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பாக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஓ.எம்.பி) தொடர்ந்தும் அவர்களின் உறவுகளை அழைத்து அலைய விட்டு வேடிக்கை பார்ப்பதாகவும் குறித்த நடவடிக்கையினை வன்மையாக கண்டிப்பதாக மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் செவ்வாய்க்கிழமை (8) காலை 10 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஓ.எம்.பி) எங்களுக்கு தேவை இல்லை என்று ஆரம்பத்தில் கூறி வந்தோம்.எனும் குறித்த அலுவலகத்தை கொண்டு வந்து விட்டார்கள் என்பதற்காக நாங்கள் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளின் விவரங்கள் ஓ.எம்.பி அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொண்டோம்.

ஆனால் பதிவுகளை மேற்கொண்டும் எவ்வித நன்மையும் இல்லை. உயிர்களை உறவுகளையும் தேடி அலைந்து கொண்டு இருக்கின்றனர் அம்மாக்கள். ஆனால் ஓ.எம்.பி அலுவலகத்தினால் கடிதத்தை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்களுக்கு எந்த வித கடிதமும் தேவை இல்லை என ஓ.எம்.பி அதிகாரிகளிடம் தெரிவித்து கொள்கிறேன்.

எங்களுக்கு காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளே வேண்டும். இந்த நிலையில் தொடர்ந்தும் எங்களுக்கு கடிதங்களை அனுப்பி எங்களை குழப்பத்திற்கு உள்ளாக்குகிறார்கள்?,

அலுவலகர்களாகிய நீங்கள் அரசாங்கத்திடம் சம்பளம் வேண்டி வேலை செய்கின்றீர்கள். எங்களுக்கு இனி எந்த கடிதத்தையும் அனுப்பாதீர்கள். இக் கடிதத்தினால் எங்களுக்கு எவ்வித நன்மைகளும் இல்லை. நாங்கள் கடிதம் வேண்டாம் என்று சொல்கின்றோம்.

பல்வேறு துயரங்களுடன் வாழ்ந்து வரும் அம்மாக்களை அழைத்து அவர்களை அலைய விட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். நாங்கள் ஓ.எம்.பி யை நம்பி பதியவில்லை. உங்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 5 பேருடைய விவரங்களை உங்களிடம் சமர்ப்பித்தோம். ஆனால் அதற்கு இது வரை எந்த தீர்வும் கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடி போராட்டங்களில் ஈடுபட்டு வந்த மன்னாரை சேர்ந்த அம்மா ஒருவர் அண்மையில் மரணிந்துள்ள நிலையில் அவருடைய பெயரில் ஓ.எம்.பி. அலுவலகத்தினால் விசாரணைக்கு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த நிலையில் ஏன் எங்களுக்கு தொடர்ந்து கடிதத்தை அனுப்பி தொலைபேசி அழைப்பை எடுத்து துன்பப்படுத்துகிறவர்கள்.,

எனவே தொடர்ந்தும் எங்களை இவ்வாறு மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகளை காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் முன்னெடுக்க கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கஞ்சா கடத்தலை முறியடித்த வட்டுக்கோட்டை இளைஞர்களுக்கு பொலிஸார் பாராட்டு!



வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய வரலாற்றிலேயே பெருந்தொகை கஞ்சாவை கடத்தலை முறியடித்து பெரும் குற்றச் செயல் ஒன்றைத் தடுத்து நிறுத்தியவர்கள் பொன்னாலை இளைஞர்கள் என வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஹேரத் பண்டார தெரிவித்தார்.

இதற்காக பொன்னாலை இளைஞர்களையும் பொதுமக்களையும் வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி பாராட்டியுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

பொன்னாலையில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொன்னாலையில் உள்ள சிவில் சமூக அமைப்புக்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட பொதுக் கலந்துரையாடல் ஒன்று பொன்னாலை மேற்கு ஸ்ரீகண்ணன் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் கிராம சேவையாளர் ந.சிவரூபன், சமூக செயற்பாட்டாளர் ந.பொன்ராசா மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இளைஞர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த உப பொலிஸ் பரிசோதகர் ஹேரத் பண்டார, இலங்கையில் கஞ்சா, ஹெரோயின் என்பன பாரியளவில் வியாபாரமாக நடைபெறுகின்றது. இதை பொலிஸாரால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது. பொதுமக்களின் ஒத்துழைப்புடனேயே இதை முறியடிக்க முடியும்.

வட்டுக்கோட்டை பொலிஸ் வரலாற்றிலேயே மிகப்பெரும் கஞ்சா கடத்தலை முறியடித்து நாட்டில் இடம்பெறவிருந்த பாரிய குற்றச்செயலைக் கட்டுப்படுத்த உதவியவர்கள் பொன்னாலை இளைஞர்கள். இதற்காக பொன்னாலை மக்களையும் இளைஞர்களையும் வட்டுக்கோட்டை பொறுப்பதிகாரி பாராட்டியிருக்கின்றார்.

இதேபோன்று, ஏனைய பிரதேச மக்களும் இளைஞர்களும் செயற்படுவார்களாயின் இயன்றவரை போதைப்பொருள் கடத்தலை முறியடித்து குற்றச்செயல்களைக் குறைக்க முடியும் எனத் தெரிவித்தார்.

# வறட்சியுடன் கூடிய காலநிலை தீவிரமடைவதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 69113பேர் பாதிப்பு!

**பு. கஜிந்தன்**

வறட்சியுடன் கூடிய காலநிலை தீவிரமடைவதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 69113 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவுகின்ற வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக இதுவரை 21714 குடும்பங்களைச் சேர்ந்த 69113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கூடுதலாக சங்கானை, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாதிப்புகள் உணரப்பட்டுள்ளது.

அந்த வகையில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 15965 குடும்பங்களைச் சேர்ந்த 49160 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 3135 குடும்பங்களைச் சேர்ந்த 11160 பேரும், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 1028 குடும்பங்களைச் சேர்ந்த 3146 பேரும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 956 குடும்பங்களைச் சேர்ந்த 3067 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் தற்போது 6053 குடும்பங்களைச் சேர்ந்த 19704 பேருக்கு குடிநீர் விநியோகத்திற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

# மோட்டார் சைக்கிளுடன் மதலில் மோதி விபத்துக்குள்ளான இளைஞன் உயிரிழப்பு!

**பு. கஜிந்தன்**

துன்னாலை மத்தி, கரவெட்டி பகுதியில், மதலுடன் மோதி மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞன் கடந்த 01.08.2023 அன்று மோட்டார் சைக்கிள் பழகும் போது, மோட்டார் சைக்கிள் மதலுடன் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த இளைஞன் 02ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் இன்று (07) காலை உயிரிழந்தார்.

சங்கர் சஞ்சீவன் என்ற இளைஞனே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# திருகோணமலை சீனக்குடா விமானப்படைத்தளத்தில் பயிற்சி விமானம் விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழப்பு!



**பு. கஜிந்தன்**

திருகோணமலை சீனக்குடா விமானப்படைத்தளத்தில் பயிற்சி விமானம் ஒன்று இன்று காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் இரு விமானப்படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களது சடலங்கள் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விபத்தில் HMTK. ஹேரத் (வயது 25), KMPM. வர்ணசூரிய (வயது 40) ஆகிய இரண்டு விமானப்படை வீரர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்போது குறித்த விமானம் சேதமாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகரில் தவறான முடிவெடுத்து ஆணொருவர் உயிர்மாய்ப்பு!

**பு. கஜிந்தன்**

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் பகுதியில் ஆணொருவர் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். இந்தச் சம்பவமானது வியாழன் மாலை வேளை இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் தூக்கில் தொங்குவதை அவதானித்த உறவினர்கள், அவரை மீட்டு காரைநகர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அவரது சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இராமலிங்கம் வசந்தகுமார் (வயது 42) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இது குறித்து மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட மாகாண விளையாட்டு போட்டிகள் அடிப்படை வசதி இன்றிய மைதானங்களில் முன்னெடுப்பு – மாணவர்கள் குற்றச்சாட்டு



வட மாகாண கல்வி அமைச்சுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் நடைபெறும் பருத்தித் துறை பகுதியில் அடிப்படை வசதி இன்றி தனியார் மைதானங்களில் திங்கட்கிழமை (7) போட்டிகள் ஆரம்பமாகி இடம்பெற்று வருவதாக மாணவர்கள் தரப்பில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சுக்குட்பட்ட பாடாசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட போட்டிகள் இன்றையதினம் பருத்தித்துறை பகுதியில் உள்ள நான்கு மைதாதன்தில் இடம்பெற்ற நிலையில் சில தனியார் மைதானங்கள் அடிப்படை வசதிகளின்றி காணப்படுவதாக விளையாட்டிக்களில் கலந்து கொண்ட மாணவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவரவதாவது, வடமாகாண ரீதியிலான பாடசாலைகளுக்கிடையிலான மாகாண காற்பந்தாட்டம் உட்பட சில விளையாட்டு போட்டிகள் பருத்தித்துறைப் பகுதியிலுள்ள தனியார் விளையாட்டு மைதானங்களில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் இருந்து பாடசாலை இருந்து மாணவ மாணவிகள் யாழ்ப்பாணத்தின் பருத்தித்துறை பகுதியில் குறித்த நிகழ்வுக்காக சென்ற நிலையில் தனியார் விளையாட்டு மைதானங்களில் மலசல கூடம் குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளின்றி காணப்பட்டதாக குற்றச்சாட்டினர்.

ஒரு தனியார் விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் கள்ளுத் தவறணை நிலையமும் காணப்பட்டதுடன் குடிநீர் அயல் வீட்டில் இருந்தே மைதானத்திற்கு கொண்டுவரப்பட்டமை கமராக்களில் பதிவாகியுள்ளது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண தீவகப் பகுதிகளில் இருந்து வருகை தரும் மாணவர்கள் போட்டிக்காக பருத்தித்துறைக்கு செல்லும்போது பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

வெயிலும் வெப்பமும் நிறைந்த சூழலாக தற்காலம் காணப்படுகின்ற நிலையில் வடமாகாண ரீதியில் இதனை ஒழுங்கமைக்கின்ற பொழுது போக்குவரத்து மற்றும் இதர வசதிகளை கருத்திற்கொள்ளாது அமைத்தமை குறித்து விசனம் வெளியிடப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் வடக்குமாகாண விளையாட்டு துறை பணிப்பாளர் ராஜசீலனிடம் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது, வடமாகாண ரீதியான படசாலை மாணவர்களுக்கான போட்டியே இடம்பெற்று வருகின்றது.

அதன் அடிப்படையில் குறித்த பிரச்சினை தொடர்பில் எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தால் நாம் நடவடிக்கை எடுத்திருப்போம்.

மாணவர்கள் நீண்ட நாள் தங்குதல் மற்றும் அவர்களுடைய செலவுகளை கருத்திற்கொண்டு குறித்த நான்கு மைதானங்களையும் தயார்படுத்தியிருந்தோம்.

பிரச்சனையான மைதானத்தை மாற்றி புறிதொரு பாடசாலை மைதானத்திற்கு போட்டிகளை மாற்ற ஏற்பாடு செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதனை யாழ்பாணத்தில் வைத்திருந்தால் மாணவர்களுக்கு வசதி வாய்ப்புகள் இலகுவாக அமைந்திருக்கும் அல்லவா என வினவிய பொழுது? யாழ்ப்பாண நகரில் ஏற்பாடு செய்ய தங்குமிடவசதிகள் உட்பட்ட சில பிரச்சினைகள் காணப்பட்டமையினால் நகர்பகுதியில் குறித்த விளையாட்டு நிகழ்வுகளை ஏற்பாடு செய்யமுடியவில்லை.

தற்பொழுது குறித்த விடயங்கள் சுட்டிகாட்டபட்ட நிலையில் தனியார் மைதானத்தில் நடைபெற போட்டிகள் நெல்லியடி மத்திய கல்லூரிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மாணவர்களை மன அழுத்தங்களில் இருந்து மீட்க வீட்டுத்தோட்டம் சிறந்த பரிகாரமாக அமையும் – மாணாக்க உழவர் நிகழ்சியில் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

**பு. கஜிந்தன்**

எமது மாணவர்கள் பல்வேறு காரணங்களினால் மன அழுத்தங்களுக்கு ஆளாகி வருகிறார்கள். இதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே அவர்களால் சரிவரக் கற்றலை மேற்கொள்ள முடியவில்லை. போதை, வன்முறை என்றும் சமூகப்பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

இவர்களில் ஒருசாரார் தற்கொலை முடிவை நோக்கியும் செல்கிறார்கள். இவர்களை மன, அழுத்தங்களில் இருந்து விடுவிக்க வீட்டுத்தோட்டங்களில் அவர்களை ஈடுபடுத்துவதுதான் சிறந்த பரிகாரமாக அமையும். இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட வழிமுறையாகும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டி உள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மாணாக்க உழவர் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு விதைப் பொதிகளையும் செயன்முறைப் பயிற்சிகளையும் வழங்கும் நிகழ்சி ஞாயிற்றுக்கிழமை (06.08.2023) நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டி உள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வீட்டுத்தோட்டங்கள் சுயசார்புப் பொருளாதாரத்தின் முதற்படி. வீட்டிலேயே எங்களுக்குத் தேவையான உணவுப் பயிர்களை உற்பத்தி செய்யக் கூடியதாக இருப்பதோடு வீட்டுக்கழிவுகளைப் பசளையாகப் பயன்படுத்துவதால் நஞ்சற்ற உணவையும் நாம் பெறக்கூடியதாக உள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கும், உணவு நெருக்கடிக்கும் விட்டுத்தோட்டம் சிறந்த தீர்வாக அமையும். இந்த அனுகூலங்களைவிட மேலான அனுகூலமாக வீட்டுத்தோட்டங்கள் மனதை அலைபாயவிடாமல் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தவும் உதவுகின்றது.





தோட்டங்களில் மண்ணைக் கைகளினால் அளையும்போது, மண்ணில் உள்ள பக்றீரியங்களைத் தொடும்போது உடலில் செரற்ரோனின் என்ற ஓமோன் சுரப்பது தூண்டப்படுகிறது. இது ஆய்வுரீதியாக நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மை.

செறற்ரோனின் மனச்சோர்வைக் களைந்து, மனஅழுத்தங்களில் இருந்து விடுபடவைத்து, மனரோக்கியத்தை மேம்படுத்தும் ஒரு இரசாயனம் ஆகும். இயற்கையாக செரற்ரோனின் உருவாகுவதைத் தூண்டும் வீட்டுத்தோட்டச் செய்கையில் மாணவர்களை ஈடுபடுத்தினால் செயற்கையாக உற்சாகத்தைத் தூண்டும் ஆபத்தான போதைக்கு அவர்கள் அடிமையாக மாட்டார்கள்.

ஆசிரியர்கள் வீட்டுத்தோட்டம் என்றால் அது விவசாயம் பயிலுகின்ற மாணவர்களுக்கு மாத்திரம்தான் என்று நினைக்கிறார்கள். பெற்றோர்கள் வீட்டுத்தோட்டங்களில் மாணவர்கள் ஈடுபட்டால் அவர்களின் படிப்புப் பாழாகிவிடும் என்று கருதுகிறார்கள். இந்த மனோநிலைகளில் மாற்றம் வேண்டும்.

பயிர்களைப் பீடிக்கும் பூச்சிகளால் பயிர்களுக்கு மாத்திரம்தான் சேதம் ஆனால், புத்தகப் பூச்சிகளாகவே வளரும் மாணவர்கள் தமக்கும் சமூகத்துக்கும் கேடாகவே அமைவார்கள். இதைப் புரிந்துகொண்டு ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களை வீட்டுத்தோட்டங்களில் ஈடுபடவைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# முல்லைத்தீவு அரச அதிபர் தலைமையில் அனைத்து சமயங்களையும் சார்ந்த சமய ஒழுக்கக் கல்வியை மேம்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல்

**பு. கஜிந்தன்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனைத்து சமயங்களையும் சார்ந்த சமய. ஒழுக்கக் கல்வியை மேம்படுத்துதல் தொடர்பான விசேட கலந்துரையாடல் புதன்கிழமை (9) மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 1.15 மணியளவில் நிறைவடைந்தது.







முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அ. உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து சமயங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் சமயத்தலைவர்களும், அனைத்து சமயங்களையும் சார்ந்த அறநெறிப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களும் கலந்து கொண்டதுடனர்.

அத்துடன் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. கனகேஸ்வரன் (நிர்வாகம்), பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் திரு. லிங்கேஸ்வரன், பிரதம கணக்காளர் திரு. ம. செல்வரட்ணம், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் திரு. மு. முபாரக், மாவட்ட, சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அனைத்து சமயங்களையும் சார்ந்த சமய ஒழுக்கக் கல்வியை மேம்படுத்துவது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

சமய ஒழுக்கக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சமய ஒழுக்கக் கல்விப் பாடசாலைகளை வலுப்படுத்துதல் என்பவற்றுடன் ஞாயிறு தினங்களில் மாணவர்கள், சமய ஒழுக்கக் கல்விப் பாடசாலைக்கு செல்வதை ஊக்கப்படுத்தும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன் ஞாயிறு தினங்களில் தனியார் கல்விச் செயற்பாடுகளை தவிர்பதற்கு தனியார் கல்வி நிறுவன உரிமைதாரர்களிடம் வேண்டுகோள் விடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா அவர்களது மூன்று நூல்கள் வெளியீடு!



பு. கஜிந்தன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூன்று நூல்கள் புதன்கிழமை (9) வெளியிட்டு வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா எழுதிய காலநிலை மாற்றம், அனர்த்த முகாமைத்துவம், HydroClimate of Northern Sri Lanka ஆகிய மூன்று நூல்களும் புதன்கிழமை (9) வெளியிட்டு வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாலை 2.00 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் அவர்களும், புவியியற்றுறை முன்னாள் தலைவர் பேராசிரியர் கா. குகபாலன் அவர்களும், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் வடக்கு மாகாணத்தின் பிராந்திய முகாமையாளர், பொறியியலாளர் ஏ. ஜெகதீசன் அவர்களும் கலந்துகொண்டனர்.




# சுகாதார சீர்கேட்டால் யாழ்ப்பாண நகரில் இரு உணவகங்களுக்கு சீல் வைப்பு!



பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம் பிரதான நகர் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரு உணவகங்களை நீதிமன்ற அனுமதியுடன் சுகாதாரப் பிரிவினரால் சீல் வைக்கப்பட்டது.


யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பாலமுரளி அவர்களின் அறிவுறுத்தலின் பிரகாரம், பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினரால் நேற்றையதினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண நகர் பகுதி உணவகங்கள் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய யாழ்ப்பாண பேருந்து நிலையத்திற்கு பின்புறம் அமைந்துள்ள ஒரு அசைவ உணவகமும், யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் அமைந்துள்ள ஒரு அசைவ உணவகமும் பொது சுகாதார பரிசோதகர்களின் பரிசோதனையில் சிக்கின.

இரு உணவக உரிமையாளர்களிற்கும் எதிராக புதன்கிழமை யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் யாழ்ப்பாண நகர் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் உணவக உரிமையாளர்களை தலா ஒரு இலட்சம் பிணையில் விடுவித்ததுடன், குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை உணவகங்களை சீல் வைத்து மூடுமாறு கட்டளை வழங்கிய நிலையில் வழக்கினை 18.10.2023ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதனை தொடர்ந்து பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் குறித்த உணவகங்கள் இரண்டும் புதன்கிழமை சீல் வைத்து மூடப்பட்டது.



# பறாளை முருகன் கோவில் அரசமரம் சங்கமித்தை நாட்டிய மரமாக இருக்காது – ஒத்துக்கொண்டார் ஜனாதிபதி ரணில்!

பு. கஜிந்தன்

சுழிபுரம் பறாளை முருகன் கோயிலின் தல விருட்சமான அரச மரத்தின் ஆயுட்காலத்தை தீர்மானிக்க விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சி செய்து முறையற்ற விதமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெற நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் வாக்குறுதி அளித்துள்ளார்.

அத்துடன் விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளாமல் எப்படி வர்த்தகமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது என தொல்லியல் திணைக்களத்திடம் விசாரணை நடத்தவும் உத்தரவிட்டுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் தலைவர்களான த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பறாளை முருகன் கோவில் விடயமாக பேச்சு நடத்தினார்கள்.

இந்த விவகாரம் பற்றி இருவரும் தனது கவனத்திற்கு கொண்டு வருவதற்கு முன்னர் இப்படி ஒரு பிரச்சனை நீடிப்பது தனது கவனத்திற்கு யாராலும் கொண்டுவரப்படவில்லை என ரணில் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

பறாளை முருகன் கோவிலில் வரலாறு சுமார் 300 ஆண்டுகளுக்கு உட்பட்டது என குறிப்பிட்டு சம்பவத்தின் பின்னணியையும் வரலாற்று சுருக்கத்தையும் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் விளக்கமளித்தார்.

இந்த விவகாரத்தில் 2 உண்மைகளில் ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் குறிப்பிட்டனர்.

ஒன்று இந்த மரம் 300 வருடங்கள் பழமையானது என்பதால் சங்கமித்தை இலங்கைக்கு 300 வருடங்களின் முன்னரே வந்தார். பௌத்தம் 300 வருடங்கள் மாத்திரமே பழமையானது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது இந்த மரம் சங்கமித்தை நாட்டிய மரமல்ல என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என குறிப்பிட்டனர்.

பறாளை முருகன் கோவிலின் தல விருட்சமான அரசமரம் சங்கமித்தை நாட்டிய மரமாக இருக்காது என்பது தனது அபிப்பிராயம் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டபோது நாட்டியிருந்த அரச மரங்களை எல்லாம் அழித்து விட்டதாக தெரிவித்தார்.

மரத்தின் ஆயுட்காலத்தை அளவிடும் பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிடுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரா வர்த்தமானி வெளியிடப்பட்டது என கூட்டமைப்பினர் கேள்வி எழுப்பினர். அப்படியான பரிசோதனை எதுவும் மேற்கொள்ளாமல் அது சங்கமித்தை நாட்டிய மரம் என்ற முடிவுக்கு எப்படி தொல்லியல் திணைக்களம் வந்தது எனவும் கூட்டமைப்பினர் கேள்வி எழுப்பினர். இதன் மூலம் அந்த வர்த்தமானி இனவாத நோக்கமுடைய சட்டபூர்வமற்ற வர்த்தமானி என்பது புலப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினர்.

இதனை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி தொல்லியல் திணைக்களம் எந்த விஞ்ஞானபூர்வ நடைமுறைகளையும் கடைப்பிடிக்காமல் எப்படி வர்த்தமானி வெளியிட்டார்கள் என்பது தொடர்பில் உடனடி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க தனது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

உடனடியாக வர்த்தமானியை மீளப் பெறுவது தென்னிலங்கை தரப்பில் எதிர்ப்பை ஏற்படுத்தி தனக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்பதால் உடனடியாக மரத்தின் ஆயுட்காலத்தை கண்டறியும் பரிசோதனை நடத்தி வர்த்தமானியை மீளப்பெற நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதி அளித்துள்ளதாக சந்திப்பில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் பாலியல் தொல்லையால் உயிரை மாய்க்க முயன்ற 12 வயது மாணவி!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் தொடர் பாலியல் தொல்லைக்கு உள்ளாகிய 12 வயதான சிறுமி ஒருவர் தனது உயிரை மாய்க்க முயன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் சிறுமி உறவினர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவருகையில்,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 12 வயது சிறுமி ஒருவர் தனது உயிரை மாய்க்க முயன்ற நிலையில் வீட்டாரால் காப்பாற்றப்பட்டு, சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் சிறுமிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, சிறுமி உடல்நலம் தேறிய பின்னர், சிறுமிக்கு உளவள சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதன்போது, தனக்கு 21 வயதுடைய இளைஞன் ஒருவர் தொலைபேசி குறுந்தகவல்கள் ஊடாக ஆபாச குருஞ்செய்திகளை அனுப்புவதாகவும், தவறான தொடுகைகள் மூலம் பாலியல் தொந்தரவு தந்ததலும், தான் கடும் விரக்தியடைந்ததால் உயிர் மாய்க்க முயன்றதாக தெரிவித்துள்ளார்.

அதனை அடுத்து சம்பம் தொடர்பில் வைத்தியசாலை ஊடாக ஊர்காவற்துறை பொலிசாருக்கு தகவல் அளிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் - ரொறன்ரோ



3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3 (Kennedy & Finch)

## ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்பாள் அலங்கார உற்சவம்
## 11.08.2023 வெள்ளி முதல் 20.08.2023 ஞாயிறு வரை

10 தினங்களும் யாக மண்டபத்தில் மாலையில் தேவி மஹாத்மிக பாராயணமும் விசேட ஹோமமும், துர்க்கா-லக்ஷ்மி-சரஸ்வதிக்கு விஷேட துர்க்காசூக்தம், ஸ்ரீசூக்தம், மேதாசூக்த ஹோமங்கள், குங்கும அர்ச்சனை என்பன சிறப்பாக நடைபெறும்.



மாணவர்கள் கல்வி, கலைகளில் சிறப்படையவும், வயோதிபர்கள் தேகதிட ஆரோக்கியம் பெறவும், திருமண வயதில் உள்ளவர்கள் திருமணபாக்கியம் பெறவும், குடும்பத்தில் பிரிவினைகள், சச்சரவுகள் நீங்கி குடும்ப அன்னியோனியம் பெற்று சந்தோசத்துடன் வாழவும். தம்பதிகள் சந்தான பாக்கியம் (குழந்தைச் செல்வம்) பெறவும். நோய், துன்பங்களில் அல்லல்படுவோர் ஆரோக்கியம் பெறவும். உலக அமைதி சமாதானத்துடன், தாயகத்தில் நிரந்தர அமைதியும் சுபீட்சமும் பெறவும். அனைவரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று மகிழ்வான வாழ்வு வாழவும் வேண்டி மாலை 6:40 மணிக்கு நடைபெறும் விசேட ஹோமம் மற்றும் அடியார்கள் பங்குகொள்ளும் குங்கும அர்ச்சனை ஆகியவற்றில் பங்கு பற்றி இறையருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

| கைலாச வாகனம்<br>11.08.2023 வெள்ளி<br>மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை | சப்பறத் திருவிழா<br>18.08.2023 வெள்ளி<br>மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை | தேர்த் திருவிழா<br>19.08.2023 சனிக்கிழமை<br>காலை 8:30 மணிக்கு வசந்தமண்டப பூஜை |
|---|---|---|



## ஆடி அமாவாசை
## பிதிர்தர்ப்பண மோட்ச்ச சாந்தி வழிபாடு
## 15.08.2023 செவ்வாய்க்கிழமை

ஆடி அமாவாசை தினத்தில் இறைபதம் அடைந்த நம் முன்னோர்களை நினைந்து, பிதிர்தோஷங்கள் நீங்க பிதிர் தர்பணம் செய்து மோட்ச்ச தீபம் ஏற்றி மோட்ச்ச சாறந்தி வழிபாடு செய்வது சிறந்தாது.
விரத தினத்தை முன்னிட்டு 15.08.2023 செவ்வாய்க்கிழமை காலை 8:00 மணி முதல் கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாதப் பெருமானுக்கு விஷேட அபிஷேகம், 10:00 மணிக்கு விஷேட பூஜை, சுவாமி வீதிஉலா என்பன நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

**காலை 6:00 மணிமுதல் 2:00 மணிவரை ஆலயத்தில் பிதிர்தர்ப்பண மோட்ச்ச சாந்தி வழிபாடுகள் செய்யலாம்.**

**அடியார்களின் காலதாமதத்தை தவிர்க்க பல சிவாச்சார்யர்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**

## 25.08.2023 வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம்
## சுமங்கலிப் பூஜையும் திருவிளக்குப் பூஜையும்



வரலட்சுமி விரத தினத்தை முன்னிட்டு காலை 7:30 மணிமுதல் ஸ்ரீ மகாலட்சுமிக்கு 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
மாலை 5:00 மணிக்கு சாயரட்சைப் பூஜையும், தொடர்ந்து சுமங்கலிப் பிரார்த்தனையும் திருவிளக்குப் பூஜையும், தொடர்ந்து 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு மகாலட்சுமி அம்பாள் வீதிவலம்வரும் அருட்காட்சியும் நடைபெறும்.

**திருவிளக்குப் பூஜையில் பங்கு பற்றும் அடியார்கள் முற்கூட்டியே ஆலயத்தில் பெயர்களைப் பதிவு செய்வதுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.**

416.291.8500 vinaayagar.com vinaayagar

# 'எனது ஐம்பது ஆண்டு கால கலை இலக்கியப் பயணத்தில் சந்தித்த கலை இலக்கிய ஆளுமைகள்'



## *தமிநாடு - ஈரோட்டில் கனடா உதயன் லோகேந்திரலிங்கம்*

- ஈரோட்டிலிருந்து மலேசியா நக்கீரன்



ஈ:

இளங்கவிஞராக உருவாகி, உள்நாட்டுப் போரின் விளைவாக, எதிர்கால கேள்விக் குறியுடன் கனடாவிற்கு புலம்பெயர்ந்து, பின்னர் ஒரு பத்திரிகையாளராகவும் பத்திரிகை வெளியீட்டாளராகவும் தொடர்ந்து கனடாவிற்கேயுரிய பல இன-பல கலாச்சார-பன்மொழிச் சூழலுக்கு ஏற்ப அரசியல்-சமூக-கலைத் தளங்களில் நன்கு அறியப்பட்ட ஆளுமை-மயாக இப்போது திகழ்பவர் கனடா உதயனின் பிரதம ஆசிரியர் திரு.நாகமணி லோகேந்திரலிங்கம்.

இப்படிப்பட்டவர், ஈரோட்டில் நடைபெற்றுவரும் 19-ஆவது புத்தகக்



கண்காட்சியின் 7-ஆவது நாளின் உரையரங்கத்தின் நாயகராக விளங்கினார். அவருக்கு உற்சாகமானவரவேற்பு அங்கு அளிக்கப்பெற்றது.

தமிழக அரசின் ஆதரவுடன் ஈரோட்டைத் தளமாகக் கொண்ட மக்கள் சிந்தனைப் பேரவையின் முன்னெடுப்பில் இந்தப் புத்தகத் திருவிழா நடைபெற்றாலும் இதன் அச்சாணியாகத் திகழ்பவர் த. ஸ்டாலின் குணசேகரன்.

அவரின் அறிமுக உரைக்குப்பின், சிறப்புரை நிகழ்த்திய திரு. லோகேந்திரலிங்கம், முதன்முதலாக கவிஞர் வைரமுத்து உள்ளிட்ட இலக்கிய ஆளுமை-களை ஆண்டுதோறும் வரவழைத்து கனடவாழ் புலம்பெயர் தமிழரிடையே உரைநிகழ்த்த வைக்கும் விதத்தை ஈரோட்டு புத்தகப் பெருவிழா கூட்ட அரங்கில் எடுத்துரைத்தார். தமிழ்நாட்டிலிருந்தும் ஈழத்திலிருந்தும் தான் அழைத்து கெளரவித்த கலை இலக்கிய ஆளுமைகளிடமிருந்து தாம் பல அறிவு சார்ந்த விடயங்களைக் கற்றுக்கொண்டதாகவும் தமிழகத்தை ஈழத்து மக்கள் தங்கள் தாய்த் தமிழகம் என்று அழைக்கின்றார்கள். மேலும் நம்பிக்கைகளோடு உள்ளார்கள் என்றும் உற்சாகத்தோடு தெரிவித்தார். அத்துடன் தான் சந்தித்த கலை இலக்கிய வழிகாட்டிகளிடமிருந்து கற்றுக் கொண்டவற்றைக்கொண்டு தனது பத்திரிகைத்துறை மற்றும் இலக்கியத் தளம் ஆகியவற்றில் தன்னை தக்கவைக்கும் வகையில் உதவுகின்றன என்றும் கடுமையான வாசிப்பு தான் தம் போன்றவர்களை காப்பாற்றும் என்றும் அந்த வகையில் ஈரோடு புத்தகத் திருவிழாவில் மிகவும் மகிழ்ச்சியோடு கலந்து கொள்வதாகவும் தெரிவித்தார்.

முதல் நாள் பெய்த கனமழையால் மணற்பரப்பு புழுதிபரவாமல் இருந்தாலும் வானம் சன்னமாக உதிர்த்த நீர்த்திவலைகளைக் கண்டு, எங்கே இன்றும் மழைவந்து விடுமோ என்ற பதற்றம் எழுந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அளவுடன் பேசிமுடித்த இதழாசிரியர் லோகேந்திரலிங்கம் உரை, அரங்கில் திரண்டு இருந்தவர் களுக்கு புதுமையாக இருந்தது.



தமிழர் தாயகமான ஈழத்தையும் கனடாவையும் தமிழ்வழி இணைத்த அண்ணன் லோகேந்திரலிங்கம், கனடாவில் உதயன் உதயமானது முதல் இன்று கதிர்பரப்பி நிற்கும் சூழல்வரை எடுத்தியம்பினார்.



அன்றைய தினம் லோகேந்திரலிங்கம் அவர்களோடு மேடையை அலங்கரித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த "இசைக் கவி ரமணன்" அவர்களும் இசையோடு தனது உரையை வழங்கி சபையோரின் பாராட்டுக்களைப் பெற்றார்.


றொறன்ரோ

ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி

தமிழ், சமய, பண்ணிசை

வகுப்புக்கள் 10.09.2023 ஆரம்பம்

எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு ஆகியவற்றை எமது குழந்தைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி கடந்த 18 வருடங்களாக சிறப்புற நடைபெற்றுவருகின்றது. தரமான ஆசிரியர்களைக் கொண்டு கல்விகற்பிப்பதுடன், ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி, திருவெம்பாவை, சிவராத்திரி, வருடாந்த மஹோற்சவம் போன்றதினங்களில் தேவார திருமுறைகளைப் பண்ணோடு படித்தல், புராணக் கதைகளை நாடகவடிவில் நடித்தல், வாரம்தோறும் ஆலயத்தில் நடைபெறும் பஜனை வழிபாட்டில் கலந்துகொள்ள ஊக்குவிப்பது போன்றவை இக்கல்லூரியின் சிறப்பம்சமாகும்.

புதிய மாணவர்களுக்கான பதிவு www.varasiththi.com இணையத்தளத்தில் விண்ணப்பிக்கலாம். நேரடியான பதிவு 26.08.2023 சனிக்கிழமை இந்துக்கல்லூரியில் காலை 10:00 மணிமுதல் 1:00 மணிவரை நடைபெறும்.

தமிழ், சமய, பண்ணிசை வகுப்புக்கள்
ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 முதல் 12:45 வரை
ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:30 முதல் 4:45 வரை

இந்துக்கல்லூரியில் ஏற்கனவே கல்வி கற்றுவரும் மாணவர்கள் மற்றும் 4 வயது (Junior Kindergarten) முதல் 8 வயது (2 ம் வகுப்பு) வரையிலான புதிய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

Apply now at www.varasiththi.com

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU COLLEGE
3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON M1V1S7 CANADA.
416.291.7900, 647.336.3333, 416.291.8500 www.varasiththi.com

# முறைகேடுகளுடன் தொடர்புடையவர்களை ஆளுநர் பாதுகாப்பதன் பின்னணி என்ன?

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## - ஆசிரியர் சங்கம் ஆளுநரிடம் கேள்வி



**பு. கஜிந்தன்**

முல்லைத்தீவு, கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர்கள் மீது முறைகேடுகள் நிரூபிக்கப்பட்ட நிலையில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாது பாதுகாப்பதன் பின்னணி என்ன என்பதை வட மாகாண ஆளுநர் எமக்கு தெளிவுபடுத்த வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் வட மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி, முல்லைத்தீவு வலயங்களில் ஆசிரியர்கள் துன்புறுத்தப்படு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு, கிளிநொச்சிக்கு செல்லும் ஆசிரியர்களில் சிலரை பழிவாங்கும் நோக்குடன் அங்கிருந்து தூர இடங்களுக்கு இடமாற்றும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றது.

ஆனால் அதே மாவட்டத்தை சேர்ந்த ஆசிரியர்கள் தமது வீட்டு அருகாமையில் உள்ள பாடசாலைகளில் தொடர்ந்தும் பணியாற்றுகின்றனர்.

அண்மையில் கொழும்பில் ஒரு கலந்துரையாடலுக்காக சென்ற வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர்களில் இருவர் இரத்மலானை அரச விடுதியில் மதுபோதையில் அட்டகாசம் புரிந்து அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார்கள்.

ஆனால் முறைப்பாடு செய்யப்பட்டு, விசாரணைகள் இடம்பெற்ற நிலையில் அவர்களுக்குரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாமல் அவர்களைப் பாதுகாப்பது யார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு வலய கல்விப் பணிப்பாளர்களின் பல முறைகேடுகள் தொடர்பில் ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்டும் ஆளுநர் நடவடிக்கை எடுக்காமல் பாதுகாப்பதன் அரசியல் பின்னணி என்ன.

நாம் ஆளுநரிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறோம் ஊழல்வாதிகள் முறைகேடுகளுடன் தொடர்புடையவர்களை வடக்கு கல்வியில் நீங்கள் பாதுகாப்பதன் பின்னணி என்ன?

முல்லைத்தீவு வலயத்தில் இருந்து யாழ்பாண யூனியன் கல்லூரிக்கு ஆசிரியர் ஒருவரை நிரந்தரமாக இடமாற்றம் வழங்குமாறு ஆளுநர் கடிதம் அனுப்பியுள்ளதாக அறிகிறோம்.

ஆளுநரிடம் நாம் ஒன்றைக் கேட்க விரும்புகிறோம் 2007 (20) இடமாற்ற சபை தீர்மானம் என்று அதிபரின் நெருங்கிய உறவினருக்காக ஆளுநர் இடமாற்றச் சபைக்கு தெரியாமல் இடமாற்றம் வழங்க முடியுமானால் இடமாற்றச் சபை எதற்கு?

ஏழு வருடங்கள் ஒரே பாடசாலையில் கற்பித்தவர்களுக்கான இடம் மாற்றம் வழங்கப்பட்ட நிலையில் வலிகாம வலயத்தில் உள்ள மகாஜன கல்லூரியில் இடமாற்றம் வழங்கப்பட்ட இரு ஆசிரியர்களின் இடமாற்றத்தை ஆளுநர் நிறுத்தியதன் பின்னணி என்ன.

அதேபோல் அதிபர் சேவை தரம் மூன்றில் பலர் இருக்கும் நிலையில், தெல்லிப்பழை மகாஜன கல்லூரியில் ஆசிரியர் சேவையில் உள்ள ஒருவரை பிரதி அதிபராக வைத்திருப்பதன் பின்னணி என்ன.

வடக்கு ஆளுநர் இலங்கை கல்வி அமைச்சின் 2000 (4) பெற்று அதில் அதிபர் நியமனம் தொடர்பில் அவ்வாறான நடைமுறைகள் இருக்கிறது என்பதை பார்த்து செயல்படுத்த வேண்டும்.

வடக்கு ஆளுநர் அரசியல் பின்னணியில் இட மாற்றங்களை தடுத்தும் அதிபர் வெற்றிடங்களுக்கான அதிபர்கள் இருந்தும் ஆசிரியர்களை அதிபர்களாக வைத்திருப்பதன் மூலம் வடக்கு கல்விப் புலத்தின் ஆசிரியர் வளப் பங்கீட்டைக் குழப்ப பார்க்கிறார்.

ஆகவே வடக்கு கல்வியில் ஊழல்வாதிகள் முறைகேடுகளுடன் தொடர்பு உள்ளவர்களை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டாம் என்பதோடு எம்மால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் ஆளுநர் உரிய பதிலை வழங்குவார் என எதிர்பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பெற்றோரை அழைத்து வராத மாணவர்களை வகுப்பிற்கு வெளியே நிற்க வைத்த தெல்லிப்பழை பாடசாலை அதிபர்!

**பு. கஜிந்தன்**

தற்போது நாட்டில் அதிக வெப்பம் நிலவுகிறது. இந்நிலையில் தெல்லிப்பழையில் உள்ள பிரபல கல்லூரி அதிபர், கடந்த 7ஆம் திகதி மாணவர்களை வகுப்புக்கு வெளியே வெயிலில் நிறுத்தி வைத்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இது குறித்து சமூக ஊடகங்களில் காணொளி ஒன்றும் பகிரப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், தேர்ச்சி அறிக்கைகளை பெறுவதற்கும், பெற்றோர் சந்திப்புக்குமாக பெற்றோரை பாடசாலை சமூகம் பாடசாலைக்கு அழைத்திருந்தது.

இந்நிலையில் குறித்த சந்திப்புக்கு பெற்றோரை அழைத்து வராத மாணவர்களை, அதிபர் வகுப்புக்கு வெளியே வெயிலில் நீண்ட நேரம் நிறுத்தி வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து கல்லூரியின் அதிபரை தொடர்புகொண்டு கேட்டபோது, பெற்றோரை சந்திப்புக்கு அழைத்து வராத மாணவர்களுக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது.

இதன்போது மாணவர்கள் வெயிலில் நிறுத்தப்படவில்லை. ஒரு பாடவேளை மட்டுமே மாணவர்கள் வெளியில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

பாடசாலைக்கும், எமக்கும் இழுக்கு ஏற்படுத்துவதற்காக சிலர் இதனை காணொளியாக பதிவு செய்து வெளியிட்டுள்ளனர். நீங்கள் மாணவர்களை நிறுத்தி வைத்த இடத்தினை வந்து பார்வையிடலாம் - என்றார்.

# யாழ்ப்பாண பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரத்தை கையாள தமிழ் பொலிஸார் இல்லை

**பு. கஜிந்தன்**

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரத்தை கையாளும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் கொடிகாமம், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இல்லாமை இதன் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மட்டத்திலான சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (08.08.2023) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது யாழ்ப்பாண மாவட்டத்தில், யாழ்ப்பாணம் பிராந்தியம், காங்கேசன்துறை பிராந்தியம் என 17 பொலிஸ் நிலையத்தில் 17 ஆண் பொலிஸாரும் 14 பெண் பொலிஸாருமாக மொத்தமாக 31 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர் என அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மேலும், கருத்து தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட செயலர், ஆசிரியர்களுக்கு மனித உளவளம் சம்பந்தப்பட்ட பயிற்சி தேவை. இந்நிலையில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கு முதல் கட்டமாக குறித்த பயிற்சி வழங்கப்படவுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி எனும் போது பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களுக்கு உளவள பயிற்சி என்பது முக்கியம் பெறுகிறது.

நாளாந்த செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் உளவள பயிற்சி தலைமைத்துவ பயிற்சி வழங்கப்பட வேண்டும். மாகாணப் கல்விப் பணிப்பாளருடன் இது தொடர்பில் கதைத்திருந்தேன்.

தனியார் நிறுவனம் ஊடாக குறித்த பயிற்சியை வழங்குவதுடன், வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பமான பயிற்சிநெறி பின்னர் கட்டம் கட்டடமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்கள் குறித்த விடயத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் பிறப்பு பதிவற்ற சிறுவர்களின் எண்ணிக்கை 15 ஆக காணப்படுவதாக சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற வழக்குகள் மற்றும் தந்தை தாய் இடையேயான முரண்பாடு பிறப்பு பதிவை மேற்கொள்வதில் சிக்கல் காணப்படுவதாக அறியப்படுகிறது.

இதன்படி கடந்த காலாண்டில் பிறப்பு பதிவற்ற சிறுவர்களின் எண்ணிக்கை 104 ஆக காணப்பட்டபோதும் பல்வேறு பட்ட முயற்சிகளுக்கு பின்னர் 89 பேருக்கு பிறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு சில சிறுவர் இல்லங்கள் மாவட்ட செயலக அதிகாரிகளின் கண்காணிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பதில்லை என இதன் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகம் வாரியாக தனியார் கல்வி நிறுவனங்களின் விபரங்களை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேகரிக்கப்படும் விபரங்களை அடிப்படையாகக் கொண்டு தனியார் கல்வி நிறுவனங்களுக்கான பொறிமுறை மற்றும் கட்டுப்பாடுகளை வகுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# படகுபழுதடைந்ததால் தமிழ்நாட்டில் கரையொதுங்கிய யாழ்ப்பாணம் – எழுவைதீவு மீனவர்கள்

**பு. கஜிந்தன்**

இலங்கை கடற்தொழிலாளர்கள் மூன்று பேர் படகு பழுதடைந்ததால் தமிழ்நாட்டில் கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - எழுவைதீவில் இருந்து கடந்த 6ஆம் திகதி காலை 9 மணிக்கு பைபர் படகில் மீன்பிடிக்க சென்ற மூன்று கடற்தொழிலாளர்களும் மதியம் 2 மணியளவில் இஞ்சின் பழுதடைந்ததால் நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் கரையொதுங்கியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்தொழிலாளர்கள் மூன்று பேர் படகு பழுதடைந்ததால் தமிழ்நாட்டில் கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - எழுகைதீவில் இருந்து கடந்த 6ஆம் திகதி காலை 9 மணிக்கு பைபர் படகில் மீன்பிடிக்க சென்ற மூன்று கடற்தொழிலாளர்களும் மதியம் 2 மணியளவில் இஞ்சின் பழுதடைந்ததால் நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் கரையொதுங்கியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் ஆனைகோட்டை, குருநகர் மற்றும் வல்வட்டிதுறை பகுதிகளை சேர்ந்த கடற்தொழிலாளர்களே இவ்வாறு இந்தியா சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தமிழக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ திருவிழா காலத்தில் விதிக்கப்பட்ட தடை

**பு. கஜிந்தன்**

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ திருவிழாவில் குழந்தைகளை வைத்து யாசகத்தில் ஈடுபட தடை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை(08.08.2023) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதற்கமைய திருவிழா நேரங்களில் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தருவோரால் ஆலய வீதிகளில் குழந்தைகளை வைத்து யாசகத்தில் ஈடுபடுவதை தடுக்கும் முகமாகவே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் யாழ்ப்பாண தலைமை அலுவலக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும் அறிவிக்க தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் நடத்திய ஊடகச் சந்திப்பு

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் அவர்களது ஊடக சந்திப்பு பதன்கிழமையன்று பண்ணாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

1. குருந்தூர் மலையில் மலையில் வழிபாடுகள் மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்களம் இனி இடையூறு செய்யாது என்று கூறியுள்ளது. பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள சென்றபோது ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளுக்கு எடுத்த நடவடிக்கை என்ன?

2. அரசாங்கத்தின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க அவர்கள், தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து வராததாலேயே 13 குறித்து ஜனாதிபதியால் சரியான முடிவு எடுக்கவில்லை என கூறியதுக்கு பதில் கருத்து.

3. தற்போது நிலவுகின்ற வரட்சிக்கு அரசாங்கம் நிவாரணங்கள்/ இழப்பீடுகள் வழங்க வேண்டும்.

# தேசிய ரீதியில் சாதனை படைத்த யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவிக்கு கௌரவம்

பு. கஜிந்தன்





தமிழ்த்தின போட்டியில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவியை கௌரவிக்கும் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற தமிழ் தின இலக்கணப் போட்டியில் தேசிய மட்டத்தில் யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலயம் மாணவி வெற்றி பெற்று சாதனை படைத்திருந்தார்.



தேசிய ரீதியில் சாதனை படைத்த மாணவியை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலைச் சமூகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் இ. சுபதீஸ்வரன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இன்று காலை நடைபெற்றது.



இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் யோன் குயின்ரஸ் அவர்களும் கலந்து கொண்டு மாணவிக்கு பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கங்கள் கேடயங்கள் வழங்கி கௌரவித்தனர்.

இந் நிகழ்வில் விசேட அம்சமாக சாதனை படைத்த மாணவியுடன் மாணவிக்கு கற்பித்த ஆசிரியரும், மாணவியின் தாயாரும் விருந்தினர்களுடன் மாலை அணிவிக்கப்பட்டு மங்கள வாத்தியங்களுடன் அழைத்து வர்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# ஈழத்துத் திருக்கோயில்கள் 1060



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஏறாவூர் வீரபத்திரசுவாமி கோவில் மட்டக்களப்பு

இந்துசமயக் கொள்கைகளைப் பின்பற்றிய மக்களுள் ஒருசாரார், ஆகம விதிப்படி கோவில்களை அமைத்து வழிபாடியற்றினர். அவ்வாறே கிராமிய வழிபாட்டு முறையில் தாம்விரும்பிய நிலையில் ஆதிசங்கரரர் வகுத்த மரபுகளினின்றும் சற்று வேறுபட்ட முறையில், இயற்கையோடிணைந்த ஆத்மார்த்த வழிபாட்டு முறையை மேற்கொண்டு ஒழுகினர்.

இவ்வாறான வழிபாட்டு முறைகளுள் வீரபத்திரசுவாமியை வணங்கும் முறையும் ஈழத்திலே பிரபல்யம் பெற்றுக் காணப்படுகின்றது. பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மும்மூர்த்திகளுள் உலகைப் படைக்கும் பிரம்மதேவனுக்குக் கோவில்களோ அன்றி அவதாரமோ கிடையாது. காத்தற் கடவுளாகிய விஷ்ணு உலகைக் காக்கும்பொருட்டு பல்வேறு சந்தாப்பங்களிலும் அவதாரங்களை எடுத்துள்ளார். முழுமுதற் கடவுளாக விளங்கும் சிவனுக்கும் அவருடைய அம்சமாக அவதாரம் எதுவும் கிடையாது.
சிவபிரானுடைய சக்தியினால் சிவாம்சமான வீரபத்திரர், காலபைரவர் போன்ற பல சொரூபங்கள் காணப்படுகின்றன. இவர்களை அவதாரம் என்று அழைப்பதில்லை. வீரபத்திரசுவாமியை சிவகணங்களிலே, சிவமூர்த்தங்களிலே சேர்த்து வணங்கும் வழக்கம் மிகப் பழமையான வழக்கமாகக் காணப்படுகின்றது.

மட்டக்களப்பிலே சிவன், சக்தி, பிள்ளையார், முருகன் எனப் பல்வேறு வழிபாட்டு முறைகள் பிரபல்யம் பெற்றிருந்தாலும், சிறுதெய்வ வழிபாட்டுமுறையும் வழக்கிலே பேணப்படுகின்றது. மட்டக்களப்பில் ஏறாவூர் பிரதேசத்திலே காணப்படும் வீரபத்திர சுவாமியின் வணக்கமுறை இதற்குச் சான்றாக விளங்குகின்றது.

மட்டுநகருக்கு வடக்கே செல்லும் பிரதான வீதியில் சுமார் ஏழாவது மைல் தொலைவில் ஏறாவூர் என்னும் பிரதேசம் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் தமிழர்களும், முஸ்லீம் மக்களும் இணைந்து வாழ்கின்றனர். இப்பிரதேசத்தின் மேற்குப்புறமாகத் தமிழ்மக்கள் வாழ்கின்றனர். இப்பகுதி வயலும் வயல்சார்ந்த மருத நிலப்பரப்பாக விளங்குகின்றது. இப்பகுதியிலேயே ஏறாவூர் வீரபத்திரசுவாமி கோவில் அமைந்துள்ளது. இவ்வாலயத்திலிருந்து சுமார் நூறு யார் தூரத்தில் முகுந்தனை ஆற்றின் கிளையொன்று பாய்ந்து செல்கின்றது. இக்காரணத்தினால் ஆலயச்சூழல் பசுமைநிறைந்த மரங்களைக்கொண்டதாக விளங்குகின்றது. கோவில் அமைந்துள்ள இடத்திலே மருதமரங்கள் நிறைந்து அழகிய சோலையாக விளங்குகின்றது. அத்தோடு அரசு, ஆல், வாகை முதலான மரங்களும் நிறைந்து காணப்படுகின்றன.

இவ்வாறான அற்புதமான சூழலிலே ஏறாவூர் வீரபத்திரசுவாமி கோவில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக வீரபத்திர சுவாமியும், பக்கத்தில் காளியன்னையும் எழுந்தருளியுள்ளார்கள். வெளிப்புறத்தே நாகதம்பிரானும், வைரவரும் சுற்றுப்புறத் தேவதைகளாக எழுந்தருளி அருள் புரியும் முறையிலே, வீரபத்திர சுவாமி கோவிலின் அமைப்புக் காணப்படுகின்றது. வீரபத்திரருடைய தோற்றம்பற்றிப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது. முழுமுதற் கடவுளாகிய சிவபிரானைத் தன்னுடைய தவத்தின் மேன்மையினால், தனது மருமகனாகத் தக்கன் ஆக்கிக் கொண்டான். இக்காரணத்தினால் தானே அனைத்திற்கும் முதல்வன் என்ற கர்வமும் இறுமாப்பும் கொண்டவனாக விளங்கினான்.

இவ்வேளையிலே மிகப் பெரிய யாகம் ஒன்றை தக்கன் நிகழ்த்தினான். ஆணவம் மேலிட்ட தக்கன் தனது மகளான தாட்சாயணியையும், தனது மருமகனான சிவபிரானையும் தவிர, ஏனையோரை யாகத்திற்கு அழைத்தான். தக்கனின் இறுமாப்பை உணராத தேவர்கள் யாகத்திலே அழிக்கப்படும் அவிப்பலியை ஏற்பதற்குத் தயாராகினர். தக்கனின் இவ்வாறான செயல்களால் சிவபிரான் கோபம் கொண்டார். தக்கனுடைய ஆணவத்தை அழித்து நல்லபுத்தியை அவனுக்கு உணர்த்தத் திருவுளம் கொண்டார். இவ்வாறன நிலையில் சிவபிரானுடைய நெற்றி வியர்வையினின்றும் வீரபத்திரசுவாமி உதித்தார். சிவபிரானுடைய திருவுளப்படி மிகுந்த அகோரத் தன்மை கொண்ட நிலையில் தக்கனுடைய யாகத்தை அழித்தார். இக்காரணத்தினால் வீரபத்திரசுவாமி, அகோரவீரபத்திரர் என்னும் திருநாமத்தைப் பெற்றதாகப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது.

விநாயகர், சுப்ரமணியப்பெருமான், வைரவர், வீரபத்திரர் ஆகிய நால்வரும் சிவபிரானுடைய திருக்குமாரர்களெனப் புராணங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஏறாவூர் வீரபத்திரசுவாமி கோவிலிலே தக்கனை அழித்துத் தேவர்களைக் காத்த, அகோரவீரபத்திரருடைய தெய்வச்சிலை காணப்படுகின்றது. இச்சிலை இங்கு ஏறக்குறைய 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

- வளரும்...





tasty தமிழா
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள்
பாரம்பரிய உணவு வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call:
416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC




Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Permits
Contact: Siva
416-706-8160

# இந்தியாவின் 'ஆன்மிகத் தலைநகரம்' தமிழகம் : திருவண்ணாமலையில் ஆளுநர் ஆர்.என்.ரவி பெருமிதம்

இந்திய செய்திகள்



இந்தியாவின் ஆன்மிகத் தலைநகராக தமிழகம் திகழ்கிறது என திருவண்ணாமலையில் நடைபெற்ற சாதுக்களுடனான சந்திப்பு நிகழ்ச்சியில் பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார். தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி 2 நாள் பயணமாக திருவண்ணாமலைக்கு இன்று (ஆகஸ்ட் 10ம் தேதி) வருகை தந்தார். திருவண்ணாமலை கிரிவல பாதையில் உள்ள திருமண மகாலில், சாதுக்களுடனான சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசும்போது, "திருவண்ணாமலை ஆன்மிக பூமியாகும். இது சிவபெருமானின் பூமி. நினைத்தாலே முக்கி தரும் பூமியாகும். சிவனின் விருப்பமின்றி எதுவும் நடந்துவிடாது. சாதுக்கள், சன்னியாசிகள் மற்றும் ரிஷிகளால் பாரத நாடு உருவாக்கப்பட்டது. இந்த புண்ணிய பூமியில் கால் வைக்க பெருமைப்படுகிறேன். பிற நாடுகளை போல் நம் பாரத நாடு இல்லை. ஆதிக்க சக்திகள் மூலம் பிற நாடுகள் உருவானது. நமது பாரத நாடு என்பது சாதுக்கள், சன்னியாசிகள், ரிஷிகளின் வலிமையால் உருவாக்கப்பட்டது.பல அரசாட்சிகள் மூலம் பிளவு பட்டிருந்தாலும், நாம் அனைவரும் ஒன்று. நமது நாடு பாரம்பரிய இலக்கியத்துடன் தொடர்பு கொண்டது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நமது ரிஷி குலத்தோர் ஞானம் பெற்று, இந்த உலகம் சிவனால் உருவாக்கப்பட்டது, நாம் அனைவரும் சிவனின் குழந்தைகள் என்பதால் ஒன்றாக இருக்க வேண்டும் என உணர்த்தியவர்கள். இப்பிரபஞ்சம், சிவனின் பிரதிபலிப்பாகும். இந்த உண்மையே சனாதன தர்மத்தின் மையாகும். தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே இமாலயா வரை, நாம் அனைவரும் பாரதக் குழந்தைகள்.சனாதனம் என்பது தனி ஒருவருக்கானதல்ல. பாரதத்தின் குடும்பத்துக்கானது. அனைவரும் நலமுடன் வாழ வேண்டும் என்ற பரந்த உயர்ந்த கருத்துடையதுதான் சனாதன தர்மமாகும். நான், எனது என்ற குறுகி இல்லாமல் நாம், நமது என்ற பரந்த மனப்பான்மை கொண்டது. குறுகிய மனப்பான்மை கொள்கைகளால், சனாதனம் தர்மம் சில அழிவுகளை சந்திக்க நேர்ந்தது. நமது நாடு 1947 ல் உருவாக்கப்பட்டதல்ல.

1947ல் விடுதலை மட்டுமே அடைந்தோம். பாரதத்தின் ஆன்மிகத் தலைநகராக தமிழகம் உள்ளது என்பதை தமிழகம் முழுவதும் சுற்றி வந்தபோது புரிந்தது.அகத்தியர், திருமூலர், பதஞ்சலி, நாயன்மார்கள், ஆழ்வார்கள் அவதரித்து 'நான் யார்' என்பதை உணர்ந்து, ஒற்றுமையுடன் இணைந்து வாழ்வதற்கான வழிகளை தெரிவித்துள்ளனர். வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என வள்ளலார் தெரிவித்துள்ளார். நான் வேறு, பயிர் வேறு அல்ல, பயிர் வாடிய போது வருந்துகிறேன் என்றார். இது தான் சனாதன தர்மம். நமது நாட்டின் ஆணி வேர் ஆன்மிகத்தை தவிர்த்து அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வழிபாதைகளை அமைத்தது. ஆன்மிக வளர்ச்சி இல்லாமல் பாரதம் வலிமை பெறாது. உலகலாவிய வளர்ச்சிகளை பின் பற்றினால், நமது நாடு பாரத நாடாக இருக்காது. மேற்கத்திய நாடுகளின் போலி மாதிரியாகவே இருக்கும். ஆன்மிக எழுச்சி என்பது, நமது நாட்டின் முன்னேற்றத்துக்கு மட்டுமின்றி, உலகத்துக்கும் பயன் அளிக்கக் கூடியதாகும்.

அனைவரும் ஒன்றிணைந்து இனிமையாக வாழ்வை வாழ்வதே பாரதத்தின் குறிக்கோளாகும். இறை சக்தி, இறை ஒளி உலகம் முழுவதும் பரவ வேண்டும். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது அடிப்படை தத்துவம். இதுமட்டுமே உலகத்தை காப்பாற்றும். ஆலயம், ஆசிரமம் என்று இல்லாமல், மக்கள் அனைவரையும் ஆன்மிக ஆற்றல் உள்ளவர்களாக உருவாக்கி, ஆன்மிகத்தை சமுதாயம் முழுவதும் விரிவடைய செய்வது உங்களது கடமையாகும்.சிவ பெருமானின் பாதையான கிரிவல பாதையில் அசைவ உணவகத்தை அனுமதிக்கக் கூடாது. சகோதரி நிவேதிதாவின் சமூக பணி மற்றும் தொண்டுகளை இந்திய அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். இந்நிகழ்வில் சாதுக்கள், சிவனடியார்கள் மற்றும் ஆன்மிக வாதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். பின்னர் சாதுகளுக்கு அன்னதானம் வழங்கினார்.

# "நில ஆர்ஜிதம் செய்யாத இடத்தில் பிரதமர் எப்படி அடிக்கல் நாட்டினார்?" நிர்மலா சீதாராமனுக்கு மா.சுப்பிரமணியன் கேள்வி



மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை தொடர்பாக மக்களவையில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்த கருத்துக்கு எதிராக தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில் அளித்துள்ளார்.அதில், "நிதித்துறை அமைச்சர் என்ற பெரிய பொறுப்பில் இருப்பவர் ஒரு உண்மைக்கு மாறான செய்திகளை சொல்லி மக்களை குழப்புவது என்பது தவறானது. எய்ம்ஸ் மருத்துவமனை இன்றைக்கு காலதாமதம் ஆவதற்கு காரணம் மாநில அரசு இடத்தை கையகப்படுத்தி தராதது என்கின்ற வகையில் ஒரு செய்தியை கூறுகிறார்.

அதோடு மட்டுமல்லாமல் ரூ.1200 கோடியில் திட்டமிடப்பட்டது ரூ.1900 கோடியாக உயர்ந்து இருக்கிறது என்கின்ற தகவலையும் சொல்லி இதற்கெல்லாம் தமிழ்நாடு அரசு காலதாமதம் செய்ததுதான் காரணம் என்று தவறான கருத்தை கூறியிருந்தார்.2015ம் ஆண்டு ஒன்றிய அரசின் சார்பில் 7 இடங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை வரும் என்று அறிவிக்கப்பட்டது. உத்திரப்பிரதேசத்தின் கோரக்பூர், அசாமின் கவுகாத்தி, ஜம்முவில் ஒரு மருத்துவமனை, இமாச்சலப்பிரதேசத்தின் பிலாப்பூர், பீகார், காஷ்மீரில் உள்ள அவந்திபூரா, மதுரை தோப்பூரில் ஒரு மருத்துவமனை என்று 7 மருத்துவமனைகள் அப்போது அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட இந்த 7 மருத்துவமனைகளும் ஒரே நேரத்தில் அறிவிக்கப்பட்டவைகள் என்றாலும் இப்போது கோரக்பூர் மருத்துவமனையை பொறுத்தவரை முழுமையாகவே இயங்க தொடங்கியிருக்கிறது.

இதே 2015ல் அறிவிக்கப்பட்ட மருத்துவமனை தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது அசாம், கவுகாத்தியில் அறிவிக்கப்பட்ட மருத்துவமனை தற்போது வகுப்புகள் தொடங்கப்பட்டு விட்டது, மருத்துவமனை கட்டிடம் மட்டும் இன்னும் தொடங்கப்படவில்லை. ஜம்முவில் அறிவிக்கப்பட்ட மருத்துவமனையிலும் மருத்துவக் கல்வி வகுப்புகள் தொடங்கியிருக்கிறது, மருத்துவமனை மட்டும் இன்னும் தொடங்கப்படவில்லை. இமாச்சலபிரதேசத்தில் உள்ள பிலாஸ்பூரில் அறிவிக்கப்பட்ட மருத்துவமனை முழுமையாக பயன்பாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறது.

பீகாரில் தர்மாந்தா என்கின்ற இடத்தில் அறிவிக்கப்பட்ட மருத்துவமனை பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காஷ்மீரில் உள்ள அவந்திபூரா என்கின்ற இடத்தில் தொடங்கப்பட்ட மருத்துவமனையும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மதுரை உங்களுக்கு தெரியும், அடுத்து 2017ம் ஆண்டு ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஒரு மருத்துவமனையை அறிவித்தார்கள், அது இப்போது முழு பயன்பாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறது. குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் ஒரு மருத்துவமனையை அறிவித்தார்கள், அதில் வகுப்புகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தெலுங்கானாவில் ஒரு மருத்துவமனையை அறிவித்தார்கள், அது தற்போது முழு பயன்பாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறது. இதன்பிறகு 2019ல் அரியானாவில் மதுரா என்கின்ற இடத்தில் ஒரு மருத்துவமனையை அறிவித்தார்கள்.

அந்த பணிகள் நடைபெற்று வருகிறது. 2015ல் 7ம், 2017ல் 3ம், 2019ல் 1ம் அறிவிக்கப்பட்டு ஒரு சில மருத்துவமனைகள் பயன்பாட்டில் இருக்கிறது. ஒரு சில மருத்துவமனைகளில் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, ஒரு சில மருத்துவமனைகயில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 2022ல் மணிப்பூர், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் கடந்த ஆண்டு 2 மருத்துவமனைகளை அறிவித்திருக்கிறார்கள். அந்த 2 மருத்துவமனைகளுக்கு இடங்கள் தேர்வு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.


ஆனால் 2015ல் மதுரை தோப்பூரில் 7 மருத்துவமனைகளில் ஒன்றாக அறிவிக்கப்பட்ட மருத்துவமனைக்கு பிரதமர் ஜனவரி 27, 2019 அன்று அடிக்கல் நாட்டினார். ஆனால் தற்போது எந்தவிதமான கட்டுமானப் பணிகளும் நடைபெறாமல் உள்ளது. இன்றைக்கு மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், தமிழ்நாடு அரசு நில ஆர்ஜிதம் செய்து தரப்படாததால் மருத்துவமனை கட்டுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்கிறார்.அவர் முன் வைக்கின்ற கேள்வி என்னவெனில் 2019 ஜனவரி 27ல் அதாவது 4 ஆண்டுகளுக்கு முன்னால் நில ஆர்ஜிதம் செய்யப்படாத ஒரு இடத்தில் பிரதமர் எப்படி வந்து அடிக்கல் நாட்ட முடியும். அரசாங்கத்துக்கு சொந்தமில்லாத ஒரு இடத்தில் அடிக்கல் நாட்டி சென்றிருக்கிறிர்கள் என்றால் இது யாரை ஏமாற்ற, நில ஆர்ஜிதமே செய்யப்படாத ஒரு இடத்தில் பிரதமரே நேரடியாக வந்து அடிக்கல் நாட்டி சென்றிருப்பது தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காகவா, இது எவ்வளவு பெரிய கேலிக்கூத்து.

ஏனெனில் இந்த இடம் 222.47 ஏக்கர் அரசாங்கத்துக்கு சொந்தமான இடம். இது ஆர்ஜிதம் செய்யப்படவேண்டிய அவசியம் இல்லை. இந்த இடத்தை நில மாற்றம் செய்து தரப்படவேண்டும், ஒன்றிய அரசுக்கு இதனை மாற்றம் செய்து தரவேண்டும். எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான முந்தைய அரசு இந்த இடத்தை முழுமையாக நிலமாற்றம் செய்து ஒன்றிய அரசுக்கு தந்திருக்கிறார்கள். இதன்பின்னரே பிரதமர் வந்து அடிக்கல் நாட்டினார்.அதன்பிறகு 2020 பிப்ரவரி 4, 5ம் தேதிகளில் யிமிசிகி அமைப்பைச் சார்ந்த நிர்வாகிகள் அந்த இடத்தை ஆய்வு செய்கிறார்கள். ஆய்வு செய்து விட்டு அந்த 222.47 ஏக்கர் நிலத்துக்கும் சுற்றுச்சுவர் கட்ட வேண்டும் என்று முடிவெடுக்கிறார்கள். சுற்றுச் சுவர் கட்டுவதற்கு ஒன்றிய அரசு ரூ.15 கோடி ஒதுக்குகிறது. அந்தச் சுற்றுச்சுவர் கட்டும்பணி 2021 ஜனவரியிலேயே முடிவுற்றது. திமுக அரசு பொறுப்பேற்றது என்பது 2021 மே 7ம் தேதி, 2021 ஜனவரியில் சுற்றுச் சுவர் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு விட்டது.மற்ற மாநிலங்களில் 100% எய்ம்ஸ் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் அனைத்தும் ஒன்றிய அரசின் நிதி ஆதாரத்தில் செயல்படுத்தப்படுகிறது. நாங்கள் ஜப்பானில் உள்ள JICA விடன் இதுகுறித்து கேட்டபோது, 2024ம் ஆண்டு இறுதியில் தான், கட்டிடத்தின் வடிவம் இறுதி செய்யப்பட்டு ஒப்பந்த புள்ளி கோரப்படும் 2028 ஆம் ஆண்டு தான் இந்த கட்டிடங்கள் முழுமையாக கட்டப்படும் என்று கூறியுள்ளது.மற்ற மாநிலங்களுக்கு காட்டும் அக்கறையை தமிழ்நாட்டின் மீதும் காட்டி, மற்றவர்கள் மீது பழிபோட்டு தப்பிக்க பார்க்காமல், ஒன்றிய அரசே முழு நிதியையும் தந்து, இந்த மருத்துவமனையை கட்ட தொடங்கினால் 2 ஆண்டுக்குள் கட்டி முடிக்கலாம் என்று அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் கேட்டுக்கொள்கிறோம். ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை அமைச்சரை சந்திக்கும்போதெல்லாம், எய்ம்ஸ் மருத்துவமனையின் பணியினை விரைவு செய்ய கோரியதன் விளைவாகத்தான், கடந்த 2 ஆண்டுகளாக, ஒவ்வொரு ஆண்டும் 50 மாணவர்கள் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியில், மருத்தவக் கல்வி பயில்வதற்கு அனுமதியினை தந்திருக்கிறார்கள்.2019ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு, 2020ம் ஆண்டு நவம்பர் 23ம் தேதியே எடப்பாடி அரசு, ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தினை ஒன்றிய அரசிடம் ஒப்படைப்பது தொடர்பான ஆவணத்தை கொடுத்துள்ளார். ஆனால் ஒன்றிய நிதித்துறை அமைச்சர் தமிழ்நாடு அரசு எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கான இடத்தை ஒப்படைக்கவில்லை என்று கூறுவது மிகவும் வருத்தத்திற்குரியது" என்று தெரிவித்துள்ளார்.

# ஓகஸ்ட் மாதத்தில் ஒன்றுக்கு இரண்டு நிலா மறைப்புக்கள் அச்சம் அடையத் தேவையில்லை!

- கனடா நக்கீரன்

இந்த ஆண்டு வானியலாளர்களுக்கு பெருவிருந்தாக அமைந்துள்ள ஆண்டு. இந்த ஆண்டில் 4 நிலா மறைப்பு நிகழயிருக்கிறது. ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 2 நிலாமறைப்பு இடம் பெறும்.
யூலை 03, ஓகஸ்ட் 01 இந்த இரண்டு நாட்களிலும் நிலா மறைப்பு நிகழ்வு முடிந்துவிட்டது. ஓகஸ்ட் 30, ஒக்தோபர் 28 நாட்களில் நிலா மறைப்பு நிகழ்வு நடக்க இருக்கிறது. முழு நிலா, பகுதி நிலா, புற நிழல் என நிலா மறைப்பு என்று மூன்று வகையான நிலா மறைப்புக்கள் இடம்பெறுகின்றன. நிலா மற்றும் ஞாயிறு மறைப்புக்கள் தொடர்பாக பல கதைகள் சொல்லப்பட்டாலும் அறிவியல் அடிப்படையில் இது இயற்கை வானியல் நிகழ்வுகளாகும். நிலா மறைப்பு எப்போது தெரியும் என்பது ஒருவர் இருக்கும் இடத்தைப் பொறுத்தது.




2023 ஆம் ஆண்டின் முதல் சந்திர கிரகணம் கடந்த மே 5 ஆம் தேதி சித்ரா பௌர்ணமி நாளான வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இது பகுதி நிலா மறைப்பாக நிகழ்ந்தது. நிலா மறைப்பு முழுநிலா (பவுர்ணமி) நாளிலும் சூரிய மறைப்பு புதுநிலா (அமாவாசை) நாட்களிலும் நிகழும். பொதுவாக ஆண்டுக்கு இரண்டு நிலா மறைப்பும் இரண்டு ஞாயிறு மறைப்பும் நிகமும். இந்த ஆண்டு நிகழ்ந்த மற்றும் நிகழவிருக்கிற நிலா மற்றும் ஞாயிறு மறைப்புக்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| ஏப்ரில் 20 | - முழு ஞாயிறு மறைப்பு |
| மே 5 | - பகுதி நிலா மறைப்பு |
| ஓகஸ்ட் 01 | - பெருநிலா மறைப்பு |
| ஓகஸ்ட் 30 | - பெருநிலா மறைப்பு |
| ஒக்தோபர் 14 | - வளைவு ஞாயிறு மறைப்பு |
| ஒக்தோபர் 28 | - பகுதி நிலா மறைப்பு |

அடுத்த நிலா மறைப்பு 2024 ஆம் ஆண்டு மார்ச் 25 இல் நிகழ இருக்கிறது. முழு நிலா மறைப்பு (**total eclipse**) புவியின் நிழல், நிலாவின் முழு மேற்பரப்பிலும் வீசப்படுகிறது. பகுதி நிலா மறைப்பின் (**partial lunar eclipse**) போது, நிலாவின் ஒரு பகுதி மட்டுமே புவியின் நிழலுக்குள் நுழைகிறது. இது நிலா மேற்பரப்பில் இருந்து ஒரு "கடியை" எடுப்பது போல் தோன்றலாம். புவியின் நிழல் நிலவின் புவிக்கு நேர் பக்கத்தில் இருட்டாகத் தோன்றும். நாசாவின் கூற்றுப்படி, சூரியன், புவி மற்றும் நிலா எவ்வாறு சீரமைக்கப்படுகின்றன என்பதைப் பொறுத்துத்தான் எவ்வளவு "கடி" யை பார்க்கிறோம் என்பது தீர்மானிக்கப்படும். அரைநிழல் நிலா மறைப்பு (**penumbral lunar eclipse**) புவியின் நிழலின் மெல்லிய வெளிப்புறப் பகுதி நிலாவின் மேற்பரப்பில் வீசப்படுகிறது. இந்த வகை மறைப்பு மற்ற இரு கிரகணங்களைப் போல வியக்கத்தக்கதாக இருக்காது, அதைப் பார்ப்பதும் கடினம்.

ஓகஸ்ட் 01 இல் இடம்பெற்ற நிலா மறைப்பை பெருநிலா (**supermoon**) என அழைக்கப்படுகிறது. ஓகஸ்ட் 30 இல் இடம்பெற இருக்கும் நிலா மறைப்பு 2023 ஆம் ஆண்டிற்கான மிக நெருக்கமான பெருநிலாவாக இருக்கும். மேலும் இது ஒரு மாத நீல நிலவு ஆகும். ஏனென்றால் இது ஒரு நாள்காட்டி மாதத்தில் இரண்டாவது முழு நிலவு ஆகும். அடுத்த நீல நிலா 2026 மே 31 வரை இல்லை. முழு நிலவு அதன் சுற்றுப்பாதையில் புவியிலிருந்து வெகு தொலைவில் இருக்கும் போது ஏற்படும், ஆண்டின் மங்கலான நிலாவை விட 17 விழுக்காடு பெரியதாகவும் 30 விழுக்காடு பிரகாசமாகவும் தோன்றுகிறது. 17 விழுக்காடு கண்டறியக்கூடிய அளவில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தவில்லை என்றாலும், முழு பெருநிலா ஆண்டு முழுவதும் மற்ற நிலவுகளை விட சற்று பிரகாசமாக இருக்கும். பொதுவாக ஒரு நிலா மறைப்பு 3 மணித்தியாலங்கள் நீடிக்கும்.( **https://youtu.be/qZaxqMyP9tU**)

ஒக்தோபர் 28 அன்று இடம்பெறும் நிலா மறைப்பு அய்ரோப்பா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, வடக்கு/கிழக்கு தென் அமெரிக்கா, பசிபிக், அட்லாண்டிக், இந்தியப் பெருங்கடல், வட துருவம் மற்றும் தென்துருவம் ஆகிய பகுதிகளில் காணப்படும். சூரியன் மற்றும் நிலவுக்கு இடையில் புவி இருக்கும்போது நிலா மறைப்பு ஏற்படுகிறது. நிலாவின் மேற்பரப்பில் ஒரு நிழல் வீசப்படுகிறது. அவை முழு நிலாவின் போது மட்டுமே நிகழக்கூடியவை,
நிலா மறைப்பின் போது ஞாயிறும் நிலாவும் புவியின் எதிர் பக்கங்களில் உள்ளன, மேலும் நிலாவின் ஒளிரும் பக்கம் புவியின் இரவு பக்கத்தை எதிர்கொள்கிறது. நிலா மறைப்பு முழுநிலா நாளிலும் ஞாயிறு மறைப்பு புதுநிலா (அமாவாசை) நாளிலும் நிகழும். பொதுவாக ஆண்டுக்கு இரண்டு நிலா கிரகணமும் இரண்டு





சூரிய கிரகணமும் நிகழும். பொதுவாக இரவு நேரத்தில் நிகழும் நிலா கிரகணமும் பகல் நேரத்தில் நிகழும் சூரிய கிரகணமும்தான் இந்தியாவில் தெரியும்.


இந்துமத புராணங்களில் நிலா மறைப்பு என்பது நிலாவுக்கு உள்ள இரண்டு எதிரிகளான இராகுவும் கேதுவும் நிலாவை பிடித்துக் கொல்ல முயற்சி செய்கின்றன எனவும் ஒவ்வொரு முறையும் நிலா அவர்கள் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்கிறது என்பதாக புராணிகர்கள் எழுதி வைத்துள்ளனர். இந்த இராகுவும் கேதுவும் நிலப்பரப்பினைக் கொண்ட உண்மைக் கோள்கள் அல்ல. புவியை நிலா சுற்றும் போது அதன் சுற்றுப்பாதை மேலும் கீழுமாக இரண்டுமுறை புவியின் பாதையை வெட்டுகின்றன. இந்த வெட்டுப் புள்ளிகளையே சோதிடர்கள் இராகு, கேது என அழைக்கிறார்கள்.

ஓர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிலாமறைப்பு காலத்தில் அல்லது ஞாயிறுமறைப்பு காலத்தில் பொது மக்களிடம் ஒருவித அச்சம் இருந்தது. மறைப்பு முடியும் வரை நீர் அருந்தகூடாது, உணவு உண்ணக்கூடாது, கர்ப்பிணிகள் வெளியே செல்லக்கூடாது, மனநலம் பாதிக்கப்படும், தோசங்கள் உண்டாகும் எனச் சோதிடர்களும் கோயில் பூசாரிகளும் மக்களைப் பயமுறுத்தி வைத்துள்ளார்கள். இதனால் சமைக்காமல் இருப்பது, பின் மறைப்பு முடிந்ததும் குளித்துவிட்டுச் சமைத்துச் சாப்பிடுவது வழக்கமாக இருந்தது. ஆனால் கிரகணத்தின் போது கோயில் நடை சாத்தும் வழக்கம் இன்றும் தொடர்கிறது. அறிவியல் வளர்ச்சி காரணமாக நிலா - ஞாயிறு மறைப்பு வந்து போவதையிட்டுப் பெரும்பான்மையோர் கவலைப்படுவதில்லை.


அறிவியல் அடிப்படையில் நிலா மறைப்பின் போது அதே நிலா, அதே ஞாயிறுதான் வருகிறது. ஒரேயொரு வேறுபாடு. மறைப்புக் காலத்தில் ஞாயிறு, புவி மற்றும் நிலா ஒரே நேர்க்கோட்டில் வருகின்றன. ஞாயிறு, நிலா, புவி நேர்க் கோட்டில் வரும் போது சூரிய மறைப்பு ஏற்படுகிறது. இந்த மூன்றில் நட்சத்திரமான சூரியனுக்கு மட்டுமே சுய ஒளி உண்டு.




மேலும் புவி ஞாயிறைச் சுற்றி வரும் பாதை வட்ட வடிவமாக இல்லை. அது சற்றே ஒரு நீள்வட்ட வடிவில் (**ellipse**) இருக்கிறது. இதனால் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 3 ஆம் தேதியன்று புவியானது (ஒப்புநோக்குகையில்) சூரியனுக்கு மிக அருகாமையில் இருக்கும். அன்றைய தினம் சூரியனுக்கும் புவிக்கும் உள்ள தூரம் 14 கோடியே 70 இலட்சம் கிலோ மீட்டராக இருக்கும். இதோடு ஒப்பிட்டால் 2018 யூலை 6 ஆம் தேதியன்று புவியானது (ஒப்புநோக்குகையில்) மிகத் தொலைவில் இருக்கும். அன்றைய தினம் ஞாயிறுக்கு உள்ள தூரம் சுமார் 15 கோடியே 20 இலட்சம் கிலோ மீட்டராக இருக்கும். இத்தூரத்தை ஒளி 499 நொடிகளில் (8.32 நிமிடங்கள்) கடக்கின்றது. வேறு விதமாகச் சொன்னால் ஞாயிற்றின் ஒளி புவியை வந்தடைய 8.32 நிமிடங்கள் எடுக்கிறது. புவியின் சுற்றுப்பாதை மட்டுமல்ல, புவியைச் சுற்றி வருகிற நிலாவின் சுற்றுப்பாதையும் இப்படி நீள் வட்டமாகத்தான் இருக்கிறது. நிலா புவிக்கு மிக அருகாமையில் இருக்கும்போது நிலாவுக்கு உள்ள தொலைவு 3,56,509 கிலோ மீட்டர். மிகத் தொலைவில் இருக்கும்போது நிலாவுக்கு உள்ள தூரம் 4,06,662 கிலோ மீட்டர். சராசரி தூரம் 384,475 கிமீ (238,900 மைல்கள்). நிலா தனது அச்சில் 5 பாகை சாய்ந்துள்ளது.




சூரியனுக்கு உள்ள தூரத்துக்கும் புவியில் குளிர்காலம், வெயில் காலம் ஏற்படுவதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. குளிர்காலமும் வெயில் காலமும் புவியின் சாய்மானத்தால் (**tilt**) ஏற்படுவதாகும். புவியானது தனது அச்சில் 23.5 டிகிரி சாய்ந்தபடி சூரியனைச் சுற்றி வருகிறது. அந்த அளவில் சூரியனின் கிரணங்கள் செங்குத்தாக விழுகிற பகுதிகளில் கோடைக் காலம் ஏற்படுகிறது. ஏப்ரில் முதல் யூலை, ஓகஸ்ட் வரையிலான மாதங்களில் புவியின் நடுக்கோட்டுக்கு




வடக்கே உள்ள பகுதிகளில் ஞாயிற்றின் கதிர்கள் ள் செங்குத்தாக விழுகின்றன. எனவே அந்தப் பகுதிகளில் கோடைகாலம் நிலவுகிறது. அதே பகுதிகளில் டிசெம்பர், சனவரி, பெப்ரவரி மாதங்களில் ஞாயிறு மறைப்புகள் மிகவும் சாய்வாக விழுகின்றன. எனவே அந்த மாதங்கள் குளிர்காலமாக உள்ளது.

ஒரு காலத்தில் பல்லி சொல்வதைக் கேட்டு தமிழ் மக்கள் பதறினார்கள். ஏதோ கெட்டது நடக்கப் போகிறது எனப் பயந்தார்கள். பஞ்சாங்கத்தில் பல்லி சொல் பயன் பற்றி எழுதி வைத்திருக்கிறார்கள்.

பெற்றோர்கள் நிலா மறைப்பு சரி, ஞாயிறு மறைப்பு சரி, அவை இயற்கை நிகழ்வுகள் என்பதையும் அவற்றைக் கண்டு அச்சம் கொள்ளத் தேவையில்லை என்பதையும் அவற்றால் மனிதர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்பதையும் தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.


# இவ்வார ராசிபலன்

**11-08-2023 வெள்ளி தொடக்கம் 17-08-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** மகிழ்ச்சியும், வளர்ச்சியும், கிளர்ச்சியும் உருவாகக்கூடிய வாரம். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். அதிகாரியின் ஆதரவு பெருகும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆன்றோர் வாழ்த்து கிட்டும். வியாபார வளர்ச்சியுண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். உறவினரால் தொல்லை நேரும். கொடுக்கல், வாங்கலால் நன்மை நேரும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். உடல் உபாதை ஏற்பட்டு தீரும். வருமானம் சேரும். நிர்வாக பொறுப்பு கூடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைதூரப் பயணம் உண்டு. பணிச்சுமைகள் குறையும். வியாபாரம் மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். தொழிலில் மாற்றம் ஏற்படும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தீய எண்ணங்கள் விலகும். எள் தானம் ஏற்றம் தரும். தேவைகள் பூர்த்தியாகும். அரசு பணியில் மாற்றம் வரும். குடும்ப அன்யோன்யம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 7,1,3,4
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**ரிஷபம்:** பணவரவு லாபம் தரும் வாரம். புத்தி சாதுர்யம் கூடும். புத்திர வழியில் சந்தோஷம் கூடும். புதிய வாகனம் சேரும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். திடீர் தனவரவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். அரசு உதவிகள் கிட்டும். விவசாய விளைச்சல் அதிகமாகும். வில்லங்கம் விலகும். வியாபாரம் உயரும். ஆலய தரிசனம் ஆறுதல் தரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். காதலில் கன்னியம் கூடும். பூர்வீக சொத்து வரும். தொழில் சிக்கல் மறையும். இனிய செய்தியால் மனம் மகிழும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச் சலுகைகள் கிட்டும். எதிர்பாராத நன்மை கிட்டும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மன அமைதி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 5,2,4,7
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,O




**மிதுனம்:** சந்தோஷமான நிகழ்வு தரும் வாரம். பாராட்டுக்கள் கிடைக்கும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. முயற்சிகள் அதிகம் தேவை. திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். வராத கடன் வந்து சேரும். பண வரவு உண்டு. ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். பட்டம், பதவி வந்து சேரும். நட்டம் இல்லாத வாரம். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 8,1,3,9
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**கடகம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கக்கூடிய வாரம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். கவனமுடன் செயல்பட வேண்டும். காரிய தாமதம் ஏற்படும். வரவுகள் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் கவனம் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் பெருகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். மனை வாங்கும் சிந்தனை மேலோங்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: 2,1,6,4
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,T




**சிம்மம்:** செல்வாக்கு உயரக்கூடிய வாரம். உடல்பொலிவு கூடும். உற்சாகம் கலை கட்டும். வேலைபளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புகள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். சூழ்நிலைகள் சமாளிக்க சூரிய வழிபாடு அவசியம். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி வாங்கும் யோகம் உண்டு. சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகள் தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கண் நோய் வந்து போகும். கவலைகள் ஒழியும். கால்நடைகளால் லாபம் உண்டு. வியாபார விருத்தி ஏற்படும். வேற்றுமை விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,6,5,8
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,A



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**கன்னி:** பயணங்களால் பணவரவு கிடைக்கக்கூடிய வாரம். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் உண்டு. பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலத்தில் அக்கறை தேவை. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். பணப்பற்றாக்குறை தீரும். பெற்றவர்களின் வாழ்த்து கிட்டும். வாழ்வில் வசந்தம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,3,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,P




**துலாம்:** தேவைகள் பூர்த்தியாகும் வாரம். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். வாக்குவாதங்கள் உருவாகி மறையும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். பணியில் உயர்வு கிட்டும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உறவினர் வருகை உண்டு. உற்சாகம் கலைகட்டும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். உத்தியோக இடமாற்றம் தரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். ஆனந்தம் குடிகொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 1,4,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**விருச்சிகம்:** ஊக்கத்தோடு செயல்படும் வாரம். நவகிரஹ அனுகிரஹம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன் பிறப்புக்களால் நன்மையுண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப்பிரச்சினைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புகள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். பழையக் கடன் தீரும். முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பங்குச்சந்தை லாபம் தரும். கனவுகள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். வெறுப்புகள் அகலும். சிறப்புக்கள் சேரும். தாய் நலனில் அக்கறை தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரம் சிறக்கும். நிதி பற்றாக்குறை நீங்கும். வேண்டாத நபர் விலகுவர். திடீர் பயணம் ஏற்படும். மாற்று யோசனை பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 1,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**தனுசு:** பெத்தவங்களோட வாழ்த்து கிடைக்கும் வாரம். வாயில் தேடி வரன் வரும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவி சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு ஏற்படும். செயல்திறமை அதிகரிக்கும். உத்தியோக வாய்ப்புக் கிட்டும். நலமும், நன்மையும் பெருகும். வேண்டாத நபர் விலகுவர். ஆடை, அணிகலன்கள் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத் திறமை அதிகரிக்கும். தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை இலாபம் தரும். மாணவர்கள் திறமைகள் பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். மனஅமைதி கூடி வரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேர்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 3,5,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,I




**மகரம்:** பிரயாணத்தில் பிரபல்யம் கிடைக்கக்கூடிய வாரம். விரும்பிய பொருள் கிடைக்கும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பங்குச்சந்தையில் லாபம் பெருகும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். உறவினர்களால் நன்மை உண்டு. காரியத்தடை ஏற்படும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை அகலும். கவலைகள் ஒழியும். தனலாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும். மெத்தனப்போக்கு விலகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனோதைரியம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். மனக்குழப்பம் நீங்கும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,R

(தொடர்ச்சி 34 பக்கம்)

# அன்பின் தொனி - 701

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஆன்மீக எழுப்புதலின் முக்கியத்துவம்**

ஆதலால், தூங்குகிறநீ விழித்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு, அப்பொழுதுகிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்றுசொல்லியிருக்கிறார். **- எபேசியர் 5: 14**

எமது சபைகளெல்லாம் விழித்து எழும்பி ஒரு எழுப்புதலுக்கு, ஒரு ஆன்மீக எறுர்ச்சிக்காக செயற்பட வேண்டிய காலமாய்யிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் எழுந்து செயற்படு என்னும் சத்தத்திற்கு செவிசாய்க்கும் காலமும், நேரமுமாய் இருக்கிறது.

முதலாவது பரிபூரணமான எழுர்ச்சியடைந்த சபையாக செயற்பட்ட 120 அங்கத்தவர்கள் அடங்கிய ஆரம்ப சபை, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு செயற்பட்டதை அப்போஸ்தலர் நடபடிக்கை முதலாம், இரண்டாம் அதிகாரத்தில் பார்க்கிறோம். அவர்கள் 10 நாட்களாக ஒருமனப்பட்டவர்களாக தொடர்ந்து ஜெபித்த ஜெபத்திற்கு தேவன் பதில்கொடுத்தார். அந்த அபிஷேகத்தோடு செயற்பட்டார்கள் 3000, 5000 என்று அறுவடையைக் கண்டார்கள். ஆதி சபை பத்து நாட்களாக காத்திருந்து ஜெபித்ததுபோல் அல்லாமல், இன்று தேவ கிருபையினால் நாம் ஒவ்வொ ருவரும் இரட்சிப்படைந்து பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களாக இருக்கின்றோம். நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத் தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். **- எபேசியர் 1: 13**

இன்றய கேள்வின்ன வென்றால் - பரிசுத்த ஆவியானவர் எம்மை பயன்னடுத்துகிறாரா? நாம் எம்மை பூரணமாக அவருடைய வழி நடத்துதலுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறோமா? அப்படிக் கொடுத் திருப்போமாயின், இன்று சபைக ளெல்லாம் விசுவாசிகளால் நிறைந்து வழிந்திருக்குமே.

எங்களுக்குள் வாசஞ்செய்யும் தேவ ஆவியானவர் எங்களை விழித்து எழும்பி செயற்பட அழைக்கிறார். நாங்கள் உடனடியாகபதில் கொடுக்க ஆயத்தமா??? எழுப்புதல் நடைபெற ஐந்து முக்கிய அம்சங்களைக் கடைப்பிடிக்க சபை விழித்து எழும்பவேண்டும்

**1. வல்லமையாக ஜெபிக்கஎழும்பவேண்டும்**

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும், நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத் தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியேசெய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லாமனுஷரும் இரட்சிக்கப்படவும்,சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். **- 1 தீமோத்தேயு 2: 1-4**

இந்த எழுப்புதலின் பலனைக் காண உண்மையோடும், உருக்கத்தோடும், கண்ணீரோடும், விசுவாசத் தோடும் அழிந்து போகின்ற ஆத்துமாக்களுக்காக, ஒருவர் ஒருவருக்காக, தேசத்திற்காக, தேவன்தாமே இடைப்பட்டு கல்லான இருதயங்களை தசையாக மாற்றவேண்டுமென்று ஜெபிப்போம். மேலும் நற்செய்தியை கொண்டுசெல்ல ஆட்களை அனுப்ப வேண்டும் என்பதற்காகவும் ஜெபிக்கவேண்டும். அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப அவரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றார். **- மத்தேயு : 36-38**

**எனவே, முதலாவதாகவும், முக்கியமாகவும் ஆவிக்குள்ளாக நிறைந்து வல்லமையோடு நாம் இடை விடாமல் ஒருமனப்பட்டு ஜெபிப்போம்.**

**2. வேண்டிய பரிசுத்தத்தோடு எழும்ப வேண்டும்**

ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது, கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டுவிலகக்கடவ னென்பதும், அதற்கு முத்திரையா யிருக்கிறது. ஒரு பெரியவீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு, அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள். ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக் கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரியபாத்திரமாயிருப்பான். **-2 தீமோத்தேயு 2: 19-21**

எலியாஎன்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறுமாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமிதன் பலனைத் தந்தது. **- யாக்கோபு 5: 17-18**

**தொடரும்...**





OM NAMO NARAYANA

125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

IS NOW @ CANADA

42 LANGSTON DRIVE, BRAMPTON (L6V 3W7)

Contact: 416 904 6278

21rajbhavan@gmail.com

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த சட்டத்திற்கு பாட்டனார் ஜி.ஜி பொன்னம்பலம் ஆதரவு வழங்கியமைக்காக மனிப்பு கேட்பீர்களா என்ற கேள்விக்கான தெளிவுபடுத்தலை பதிவு செய்ய விரும்புகிறேன்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு



**பு. கஜிந்தன்**

மலையக மக்கள் இலங்கைக்கு வந்த 200வது ஆண்டு நினைவை குறிக்கும் நடைபவனி ஒன்று தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரை நடைபெறுகிறது.

அதற்கான ஆதரவு பேரணி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடந்த போது அதில் நானும் எமது அமைப்பினரும் அதில் பங்குபற்றியிருந்தோம்.

அதில் கலந்துகொண்டிருந்த ஒரு பொதுமகன் என்னிடம் - மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த சட்டத்திற்கு உங்கள் பாட்டனார் தலைமையில் உங்கள் கட்சி ஆதரவு வழங்கியமைக்காக இப்போதாவது மனிப்பு கேட்பீர்களா என கேட்டிருந்தார்.

எனக்கு மிக மனவேதனையை தந்த அந்த கேள்விக்கான தெளிவுபடுத்தலை நான் இங்கு செய்ய விரும்புகிறேன் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இங்கு இந்த ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்திருக்கும் மலையக மலையக மக்களின் பிரதிநிதிகளாக இங்கு அமர்ந்திருக்கும் கௌரவ மனோ கணேசன் மற்றும் கௌரவ இராதாகிருஷ்ணன் ஆகியோர் அம்மக்களின் பிரச்சினைகளையும் தேவைப்பாடுகளையும் மிக தெளிவாக முன்வைப்பார்கள் என நம்புகிறேன். மலையக மக்களின் பிரதிநிதிகள் தமது மக்களின் தேவைகளை வழமையாகவே மிக தெளிவாக முன்வைப்பவர்கள். அதில் என்னுடைய தலையீட்டிற்கு தேவையிராது என நம்புகிறேன்.

ஆதலால், இந்த சந்தர்ப்பத்தில் மலையக மக்கள் குறித்தான எமது கட்சியின் நிலைப்பாட்டை தெளிவாக பதிவு செய்ய விரும்புகிறேன்.

மலையக மக்களின் குடியுரிமையை பறித்த இலங்கை பிரஜா உரிமை சட்டத்தை (18/1948) எமது கட்சி எதிர்த்தே வாக்களித்திருந்தது.

அந்த சட்டத்தில் இரண்டு தலைமுறைகள் இலங்கையில் வாழ்ந்ததை சட்ட ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தினாலேயே இலங்கை பிரஜா உரிமை மலையக மக்களுக்கு வழங்கப்படும் என சொல்லப்பட்டிருந்தது. அது அக்காலப்பகுதியில் மலையக மக்களால் ஒருபோதும் செய்யப்பட கூடியது அல்ல.

அன்றைய சூழ்நிலையில் மட்டுமல்ல இன்றும் கூட அப்படியான ஆவண சமர்ப்பித்தல் எந்தவொரு நாட்டிலும் இல்லை.

மலையக மக்களை இந்த நாட்டில் உரிமையற்றவர்களாக மாற்றிய சட்டத்தை எனது பாட்டனார் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முற்றுமுழுதாக எதிர்த்தே வாக்களித்திருந்தது என்பதை மிக தெளிவாக இந்த இடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதன் பின்னர் இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னர் ஒரு பல்லின பிரதிநிதித்துவ அரசை அமைக்க அழைப்பு விடுத்த பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவுடன் நடந்த பேச்சுகளில் மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த இலங்கை குடியுரிமை சட்டத்தை மீளப்பெறுமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நிபந்தனை விதித்திருந்தது.

இந்த கோரிக்கைகளுக்கு இந்திய பிரதமர் ஜவகர்லால் நேருவும் தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

ஆனால் டி.எஸ் சேனநாயக்க அரசு, ஏலவே நிறைவேற்றிய இலங்கை பிரஜா உரிமை சட்டத்தை மீள பெறுவதற்கு மறுத்திருந்தது.

அதற்கு பதிலாக இந்திய - பாகிஸ்தான் குடியுரிமை சட்டத்தை கொண்டுவரலாம் எனும் நிலைப்பாட்டை எடுத்தது (சட்ட இலக்கம் 3/1948). அதன் பிரகாரம் 10 வருடங்கள் இலங்கையில் இருப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் இலங்கை பிரஜா உரிமையை பெற்றுக்கொள்ள முடியும் எனும் நிலைப்பாட்டை டி. எஸ். சேனநாயக்க அரசு எடுத்திருந்தது.

ஆனால், நவீன உலகில் இருக்கும் நடைமுறையான ஐந்து வருடங்கள் இந்த நாட்டில் இருந்தமைக்கான ஆதாரத்தை சமர்ப்பிப்பதன் மூலம் இலங்கை குடியுரிமையை பெற்றுக்கொள்ள வழிவகை செய்யுமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உட்பட ஏனைய தமிழ் கட்சிகள் தமது தீர்வை முன்வைத்திருந்தன.

ஐந்து வருட கோரிக்கைக்கு இணங்க மறுத்த டி. எஸ். சேனநாயக்க, தமிழ் கட்சிகள் மற்றும் இந்திய பிரதமர் ஜவகர்லால் நேரு ஆகியோரின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாக, ஒரு குடும்பம் 7 வருடம் இலங்கையில் இருப்பதை உறுதிப்படுத்தினால் இலங்கை பிரஜா உரிமையை பெறலாம் எனும் நிலைப்பாட்டிற்கு இணங்கிவந்தார். தனிநபருக்கு அந்த கால எல்லை 10 வருடம் எனவும் கூறப்பட்டு இந்திய - பாகிஸ்தான் குடியுரிமை சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்த இந்திய - பாகிஸ்தான் குடியுரிமை சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டு இரண்டு வருடங்களுக்குள் பதிவுகளை மேற்கொண்டால் மாத்திரமே அவர்கள் பிரஜா உரிமை பெற முடியும் என அரசு அறிவித்திருந்தது.

இதன் மூலம் ஏறத்தாழ 85% மலையக மக்கள் இலங்கை குடியுரிமையை பெறக்கூடிய வாய்ப்பை பெற்றுகொடுத்தது. 85% மலையக மக்கள் குடியுரிமையை பெறக்கூடிய அந்த சட்டத்திற்கே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆதரவளித்திருந்தது.

துரதிர்ஷ்டவசமாக, அந்த சந்தர்ப்பத்தில் தமிழ் காங்கிரசில் பிளவு ஏற்பட்டு திரு. செல்வநாயகம் அவர்கள் கட்சியில் இருந்து விலகி புதிய கட்சியை ஸ்தாபித்தார். அவர் தலைமையிலான தமிழரசுக்கட்சி, மற்றும் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன, மலையக மக்களில் ஏறத்தாழ 85% ஆனவர்களுக்கு இலங்கை பிரஜா உரிமையை பெற்றுக்கொள்ள கூடிய அந்த சட்ட மூலத்தை எதிர்த்திருந்தார்கள். ஐந்து வருடம் இலங்கையில் இருந்தமைக்கான ஆதாரத்தை சமர்ப்பித்தல் மூலம் பிரஜா உரிமை வழங்கும் கோரிக்கைக்கு டி. எஸ். சேனநாயக்க அரசு இணங்காதபடியால் 3-1949 ஏறத்தாழ 85% மலையக மக்கள் பிரஜா உரிமை பெறக்கூடியதாக இருந்த இந்திய - பாகிஸ்தான் குடியுரிமை சட்ட மூலத்தின் கீழ் பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டாம் எனும் பிரசார இயக்கத்தையும் ஆரம்பித்து மலையக மக்கள் பிரஜா உரிமையை பெறுவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதை எதிர்த்து இருந்தார்கள்.

டி.எஸ். சேனநாயக்க அரசு இந்த சட்டத்தை மாற்றப்போவதில்லை என ஈற்றில் புரிந்து கொண்ட இவர்கள், கடைசி ஆறு மாத காலப்பகுதிக்குள் தமது கோரிக்கையில் இருந்து பின்வாங்கி மலையக மக்களை பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்கள். அந்த ஆறுமாத காலத்துக்குள்ளேயே தொண்டமான் உட்பட்ட சிலர் பிரஜா உரிமையை பெற்றுக்கொண்டார்கள். ஆனால் இந்த சட்டமூலத்தின் கீழ் விண்ணப்பிக்கவேண்டாம் எனும் கோரிக்கையை ஏற்ற சாமானிய மலையக மக்கள், விண்ணப்பத்திற்கான எதுவித ஆவணங்களின் ஆயத்தமும் இல்லாத நிலையில் திடீரென இறுதி ஆறுமாதங்களுக்குள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாத துரதிர்ஷட நிலைக்கு உள்ளானார்கள்.

ஏறத்தாழ 85% வீதமானோர் பிரஜா உரிமை பெற கூடிய சட்டமூலத்தை எமது கட்சி ஆதரித்ததே தவிர எதிர்க்கவில்லை.

உண்மையில் அதை எதிர்த்தது தமிழரசுக்கட்சிதான். அந்த நிலைப்பாட்டில் கூட இறுதி கட்டத்தில் மாற்றத்தை செய்ததால் வெறும் 15% ஆன மலையக மக்களே பிரஜா உரிமை பெற கூடியதாக இருந்தது. 85% மலையக மக்கள் பிரஜா உரிமை பெறும் சந்தர்ப்பத்தை வீணாக இழந்திருந்தோம்.

தமிழரசுக்கட்சியின் கோரிக்கையின் பிரகாரம் இந்த சட்டமூலத்தினை பகிஷ்கரித்தமையால் ஏறத்தாழ 85% மலையக மக்கள் நாடற்றவர்கள் ஆனார்கள். இந்த 85% மலையக மக்கள் குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இந்த 85% மலையக மக்களின் ஏறத்தாழ அரைவாசிபேர் நாடற்றவர்களாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார்கள்.

இந்த இடத்தில் மீண்டும் தெளிவாக ஒன்றை பதிவு செய்ய விரும்புகிறேன். மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த 18/1948 இலங்கை பிரஜா உரிமை சட்டத்தை எமது தமிழ் காங்கிரஸ் கட்சி முழுமையாக எதிர்த்தே இருந்தது. பறிக்கப்பட்ட பிரஜா உரிமையை மீள வழங்கும் 3-1949 இந்திய - பாகிஸ்தான் குடியுரிமை சட்டத்தையே எமது அமைப்பு ஆதரித்திருந்தது.

இந்தவிடயத்தில் 100% வெற்றியை பெறுவது தான் வெற்றி, மாறாக ஆககுறைந்தது 85 வீதமாவது வெற்றியை பெறுவதற்கு சம்மதித்தமை வெற்றியல்ல என குற்றம் சுமத்தப்பட்டால், 85% மக்கள் பிரஜா உரிமையை பெறக்கூடிய சட்ட மூலத்துக்கு ஆதரவளித்தற்காக நிபந்தனையற்ற விதத்தில் இதயபூர்வமாக மலையக மக்களிடம் மன்னிப்பு கேட்க தயாராக இருக்கிறேன்.

ஆககுறைந்தது 85% மலையக மக்கள் பிரஜா உரிமையை பெறக்கூடிய் சட்டமூலத்தை ஆதரித்தது, பிழையென கூறுபவர்கள், அந்த 85% மலையக மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்டு, அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் இந்தியாவிற்கு நாடுகடத்தப்பட ஏதுவாக அமைந்த சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தை எதுவித தயக்கமோ கூச்சமோ இன்றி ஆதரித்தார்கள். அந்த மக்களின் மூதாதையர் இந்தியாவில் இருந்து வந்ததை தவிர இந்தியா பற்றி எதுவுமே தெரிந்திராத, இலங்கையிலேயே பிறந்து இலங்கையராகவே வாழ்ந்த அந்த அப்பாவி மலையக மக்களினை இந்தியாவிற்கு நாடுகடத்திய சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையை ஆதரித்து மலையக மக்களுக்கு மிகப்பாரிய துரோகத்தை இழைத்தவர்களும் மலையக மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்.

இறுதியாக இந்த இடத்தில் மலையக மக்கள் குறித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரான எமது நிலைப்பாட்டை தெளிவாக முன்வைக்க விரும்புகிறேன்.

மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக எந்த தரப்பினாலும் நேர்மையாக முன்வைக்கப்படும் எந்த திட்டத்தையும் முழுமனதோடு எதுவித நிபந்தனையுமின்றி ஆதரிப்பதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி எப்போதும் தயாராகவே இருக்கும் என்றார்.

## இவ்வார ராசிபலன்

(32 பக்கத் தொடர்ச்சி)




**கும்பம்:** நினைத்ததெல்லாம் நடக்கக்கூடிய வாரம். குடும்ப வளர்ச்சி பெருகும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். ஆண்கள் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மதிப்புகள் உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மனோ பயம் அகலும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்குச் சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 0,2,3,7

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,O




**மீனம்:** பணவரவும், மனநிறைவும் கிடைக்கக்கூடிய வாரம். நினைத்தது நிறைவேறும். வாகன மாற்றமுண்டு. மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவுகள் திருப்தி தரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். கலைத்துறையில் ஆர்வம் கூடும். காரியம் கைகூடும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பணப்பற்றாக்குறை தீரும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசி தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். சாதக சூழ்நிலைகள் விலகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். மெத்தனப் போக்கு மாறும். சந்தர்ப்பங்கள் சாதகமாகும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். புதிய நட்பு உருவாகும். சுபச்செய்தி தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,7,8,2

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,M

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




**NESAN** *Subramaniam* **416-908-5656**

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker = RightMortgage
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages









26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca

# UTHAYAN உதயன்




உதயம் 1427 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 11, 2023

## இன்று சென்னைப் பல்கலைக்கழகக் கருத்தரங்கில் ஊடக கற்கை மாணவர்கள் மத்தியில் உரையாற்றவுள்ள 'உதயன்' லோகேந்திரலிங்கம்




இன்று 11ம் திகதி வெள்ளிக்கிழமையன்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கருத்தரங்கு ஒன்றில் அங்கு ஊடக கற்கை நெறியில் பயிலும் மாணவர்களோடு சந்தித்து உரையாடவுள்ளார் கனடா உதயன் பத்திரிகையின் ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம். சென்னைப் பல்கலைக்கழக ஊடகக் கற்கை பீடத்தின் பேராசிரியர்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த கருத்தரங்கில் முன்னாள் பிபிசி செய்தியாளரும் கனடா உதயனின் தென்னாசிய பகுதி தலைமைச் செய்தியாளர் சிவராமகிருஸ்ணனும் உரையாற்றவுள்ளார்.

## தேசிய ரீதியில் சாதனை படைத்த யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவிக்கு கௌரவம்



தமிழ்த்தின போட்டியில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவியை கௌரவிக்கும் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற தமிழ் தின இலக்கணப் போட்டியில் தேசிய மட்டத்தில் யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலயம் மாணவி வெற்றி பெற்று சாதனை படைத்திருந்தார்.

(உள்ளே விபரமான செய்தி 27ம் பக்கத்தில்)

## "எனது ஐம்பது ஆண்டு கால கலை இலக்கியப் பயணத்தில் சந்தித்த கலை இலக்கிய ஆளுமைகள்" — தமிழ்நாடு, ஈரோட்டில் கனடா உதயன் லோகேந்திரலிங்கம்

*— ஈரோட்டிலிருந்து மலேசியா நக்கீரன்*





இளங்கவிஞராக உருவாகி, உள்நாட்டுப் போரின் விளைவாக, எதிர்கால கேள்விக் குறியுடன் கனடாவிற்கு புலம்பெயர்ந்து, பின்னர் ஒரு பத்திரிகையாளராகவும் பத்திரிகை வெளியீட்டாளராகவும் தொடர்ந்து கனடாவிற்கேயுரிய பல இன-பல கலாச்சார - பன்மொழிச் சூழலுக்கு ஏற்ப அரசியல்-சமூக-கலைத் தளங்களில் நன்கு அறியப்பட்ட ஆளுமையாக இப்போது திகழ்பவர் கனடா உதயனின் பிரதம ஆசிரியர் திரு. நாகமணி லோகேந்திரலிங்கம்.

இப்படிப்பட்டவர், ஈரோட்டில் நடைபெற்றுவரும் 19-ஆவது புத்தகக் கண்காட்சியின் 7-ஆவது நாளின் உரையரங்கத்தின் நாயகராக விளங்கினார். அவருக்கு உற்சாகமானவரவேற்பு அங்கு அளிக்கப்பெற்றது

(உள்ளே விபரமான செய்தி 25ம் பக்கத்தில்)

## இந்திய தேர்தல் சுலோகமாக "இனப்படுகொலை" விவகாரம்! — வி.தேவராஜ், மூத்த ஊடகவியலாளர்



• "மாற்றத்துக்கான புள்ளடியை" இட ஒட்டு மொத்த இலங்கை மக்களும் தயார்!

அயோக்கியனின் கடைசிப் புகலிடம் இனம் மற்றும் மதம் என்ற இரு ஆயுதங்களாகும்.இலங்கையில் ஆளும் சிங்கள வர்க்கம் கடந்த 75 வருடங்களாக இந்த இரு ஆயுதங்களை மூலதனமாகக் கொண்டே தமது ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றது.

இந்த ஆட்சிக்கு தென்னிலங்கை கொடுத்த பெரும் அடிதான் கடந்த வருடம் 2022 ஜூலை அரகலய எழுச்சி. ஆனால் சிங்கள ஆளும் வர்க்கம் சுதாகரித்துக் கொண்டு அரசியலில் முகவரி அற்று இருந்த ரணில் விக்ரமசிங்கவின் தலைமையின் கீழ் மீள எழுச்சி பெற தேவையான அனைத்து முயற்சிகளையும் மூர்க்கத்தனமாகவும் மிலேச்சத்தனத்தனமாகவும் "நாடாளு மன்ற ஜனநாயகத்தின்" மூலம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. தென்னிலங்கை மக்கள் தேர்தல்களில் தாம் வழங்கிய ஆணையைத் திரும்பப் பெற முடியாது "ஆப்பிழுத்த குரங்கின்" நிலையில் உள்ளனர்.

இந்த நிலையில் இருந்து விடுபட "மாற்றத்துக்கான புள்ளடியை" இட தென்னிலங்கை மக்கள் மாத்திரமன்றி, ஒட்டு மொத்த இலங்கை மக்களும் தயாராக இருந்தபோதும் ரணில் - ராஜபக்ஷக்களின் அரசியல் இருப்பு பறிபோய்விடும் என்பதால் தேர்தல் இப்போதைக்கு இல்லை என்றாகிவிட்டது. ஆனால் அடுத்த வருடம் ஜனாதிபதிதேர்தல் நடைபெறுமென தற்போது கூறப்பட்டுள்ள நிலையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைப்போன்று நாடு பெரும் எதிர்பார்ப்பில் வைக்கப்பட்டுள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

